52

ஸ்ரீ

திருப்பல்லாண்டு, திருப்பள்ளியெழுச்சி,

திருப்பாவை களுக்கு

வ்யாக்யான மனுசரித்த

ப்ரதிபத தாத்பர்யத்துடன்,

ஆண்டாள் திருக்கல்யாணமும்.

அ. அனந்தாசார்யரால்,
பதிப்பித்தது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 APR 1928
MADRAS

சென்னை,
ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1927.

காபிரைட்.

கிளேஸ்காகிதம் விலை அணா-6.

	ரூ.	அ.
நித்தியாநு சந்தானம் ப்ரதிபததாத்பர்யம், திருப்பல்லாண்டு, திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை, நீராட்டம், பூச்சூடல், காப்பிடல், சென்னியோங்கு, அமலனுதிப்பிரான், கண்ணிநுண் சிருத்தாம்பு, வாரண மாயிரம்,கோயில்திருவாய்மொழி, இராமாநுஜ நூற்றந்தாதி, அடைக்கல்பத்து, உபதேசரத்தினமாலையுடன்	1	12
நித்தியாநு சந்தானம் மூல	0	10
ஷை வடகலை	0	10
தெசிக ப்ரபந்தம்	0	12
நாலாயி ப்ரபந்தம்	3	8
முதலாயிரம்	1	0
பெரிய திருமொழி	1	0
திருவாய்மொழி	1	0
இயற்பா	1	0
பகவத்கீதைமூலம்	0	6
பகவத்கீதைகிரந்தசுலோகம் தமிழ் தாத்பர்யம்	1	0
பகவத்கீதை ஷை ப்ரதிபதத்துடன் சங்கர,ராமாநுஜ, மத்வ பாஷ்யத்தை தமிழ் மொழி பெயர்ப்பு விசேஷார்த்தம்	2	4.
கிரந்த முதல் பாடம் அர்த்	0	1
ஷை 2-வது பாடம் மேற்	0	4
ஷை 3-வது பாடம் மேற்	0	10
ராமோதந்தம்ப்ரதிபத தாத்பர்யம், ராமாயண 6-காண்ட சுருக்கம்	0	10
முகுந்தமாலை ஷை	0	6
ஆளவந்தார் ஸ்தோத்திரம்	0	10
விஷ்ணுபுராணவசனம்	3	0

	ரூ.	அ.
விஷ்ணு ஸஹஸ்ரநாம ப்ரதிபதம் அர்த்தம்	1	0
யஜுர், ஸாம, ருக், சந்த்யாவந்தநம், புருஷஸூக்தம் ஸ்ரீஸூக்தம்,பூஸூக்தம், நீளாஸூக்தம், நாராயண ஸூக்தம், சங்கர ராமாநுஜ, மத்வ, பாஷ்யங்களை ப்ரதிபதத்துடன் தாத்பர்யம் 3 வேதஅமாவாஸ்ய தர்ப்பணங்கள் திருவாராதனம், விஷ்ணு ஸஹஸ்ரநாமம்,ப்ரஹ்மயக்யம் ஸ்மார்த்த தேவதா பூஜை ஆசீர்வாதம் இவை முதலானதுகள்	1	
பஜகோவிந்தம்ஷை	0	
ஸ்யாமலாதண்டகம் ஷை	0	
ரகுவம்சம் ப்ரதிபததாத்பர்யம் 4-சர்க்கம்	1	
சம்க்ஷேப ராமாயண மென்னும்பாலராமாயணம் ப்ரதிபததாத்பர்யம்	0	
ஷை பட்டாபிஷேகம்ராமாவதாரம் சுலோகம் அர்த்தம்	1	
சுந்தரகாண்டம் கிரந்த சுலோகம் தமிழ் தாத்பர்யம்	3	
ஸ்ரீவால்மீகிராமாயணம்கிரந்தசுலோகம்ப்ரதிசுலோகத்திற்கு தாத்பர்யம் பாலகாண்டம்	3	
ஆரண்யகாண்டம்	3	
கிஷ்கிந்தா காண்டம் ஷை	[illegible]	
சுந்தரகாண்டம் ஷை		
யுத்தகாண்டம்	8	
தசாவதாரப்ரபாவம் வசன	1	0

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன்
திருவடிகளே சரணம்

த னி ய ன் க ள்.

த்ருதீய ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி

அ ரு ளி ச் செ ய் த து.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
14 APR 1928
2302
8948

𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜 𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌭𑍂𑌷𑌣𑌮𑍍 ॥
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑌿𑌕𑌮𑍍 ॥

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம்
ஸ்ரீமத் வேங்கட நாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம்

ராமாநுஜதயாபாத்ரம் - கிடாம்பி அப்பிள்ளாருடைய க்ருபைக்கு விஷயபூதராய்
ஞ்யானவைராக்யபூஷணம் - வேதாந்த ஜ்ஞானத்தையும் விஷய விரக்தியையும் அலங்காரமாகவுடையவராய்
வேதாந்ததேசிகம்-வேதாந்தாசாரியர் என்றும் வேதாந்த தேசிகர் என்றும் திருநாமத்தையுடையராய்
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம்-சீரும் தூப்புல் திருவேங்கடமுடையானை
வந்தே-ஸேவிக்கிறேன்.

(தா - ம்.) கிடாம்பி அப்பிள்ளாருடைய க்ருபையைப்பெற்று வேதாந்த சாஸ்திரத்தில் ஒப்பார் மிக்காரில்லாபடி பாண்டித்யத்தோடு வைராக்ய நிதியார் வேதாந்தாசார்யர், வேதாந்த தேசிகனென்று பிருதுபெற்ற ஸ்ரீமத் வேங்கடநாத தேசிகனை சரணமடைகிறேனென்பதாம்.

எம்பெருமானாரருளிச்செய்தது.

𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥 𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂 𑌨𑌾𑌥𑌯𑌾𑌮𑍁𑌨 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌂 ।
𑌅𑌸𑍍𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌂 ॥

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம்|
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம் பராம்||

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்-ஸ்ரீயஃபதியான ஸர்வேஸ்வரனிடத்தில் நின்றும் ஆரம்பித்ததாய்
நாதயாமுனமத்யமாம் - நாதமுனிகள் ஆளவந்தார் இவர்களை நடுவிலுடையதாய்
அஸ்மதாசார்யபர்யந்தாம் - நம்முடைய ஆசார்யனீறாக உண்டான
குருபரம்பராம்-குருபரம்பரையை
வந்தே-ஸேவிக்கிறேன்.

(தா - ம்.) ஶ்ரியஃபதிதொடங்கியநாதமுனிகள் ஆளவந்தார் நடுவாய், நம்மாசார்யனளவாக உள்ளகுருபரம்பரையைத்தொழுகிறேன்.

கூரத்தாழ்வானருளிச்செய்தது.

𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌚𑍍𑌯𑍁𑌤 𑌪𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜 𑌯𑍁𑌗𑍍𑌮𑌰𑍁𑌕𑍍𑌮
𑌵𑍍𑌯𑌾𑌮𑍋𑌹𑌤𑌸𑍍𑌤𑌦𑌿𑌤𑌰𑌾𑌣𑌿 𑌤𑍃𑌣𑌾𑌯 𑌮𑍇𑌨𑍇 ।
𑌅𑌸𑍍𑌮𑌦𑍍𑌗𑍁𑌰𑍋𑌰𑍍𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌸𑍍𑌯 𑌦𑌯𑍈𑌕𑌸𑌿𑌨𑍍𑌧𑍋𑌃
𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑍍𑌯 𑌚𑌰𑌣𑍌 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

யோநித்ய மச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யாமோஹத ஸ்ததிதராணி த்ருணாய மேநே|
அஸ்மத் குரோர் பகவதோஸ்ய தயைக ஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே||

யஃ-எந்தஎம்பெருமானார்
நித்யம்-ப்ரதிதிநமும்
அச்சுத-ஸர்வேஸ்வரனுடைய
பதாம்புஜயுக்ம-இரண்டு ஸ்ரீதிருவடித் தாமரைகளாகிற
ருக்ம-ஸ்வர்ணத்திலே
வ்யாமோஹதஃ-அதிக ஆசையினால்

120769

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
14 APR 1928

ஆழ்வார் எம்பெருமானர்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

நம்பெருமா ளருளிச்செய்தது.

தனியன்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇𑌶 𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌧𑍀𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌮𑍍।
𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰 𑌪𑍍𑌰𑌵𑌣𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌰𑌮𑍍𑌯𑌜𑌾 𑌮𑌾𑌤𑌰𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑍍 ॥

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணர்ணவம்!
ய்தீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜா மாதரம் முநிம்||

ஸ்ரீசைலேசதயாபாத்ரம்-திருவாய் மொழிப் பிள்ளையினுடையக்ருபைக்குபாத்ரபூதராய்
தீபக்த்யாதி குணர்ணவம்-ஜ்ஞாநபக்திகள் முதலானகுணங்களுக்குஸமுத்ரம் போன்றவராய்
யதீந்தரப்ரவணம் - எம்பெருமானரிடத்தில் ப்ராவண்யத்தையுடையவரான
ரம்யஜாமாதரம்முநிம் - அழகியமணவாளமாமுனிகளை
வந்தே-ஸேவிக்கிறேன்.

(தா - ம்.) திருவாய்மொழிப் பிள்ளையை ஆஸ்ரயித்து அவரருளப்பெற்றஜ்ஞாநபக்தி வைராக்யகுண பரிபூர்ணராய், எம்பெருமானரே உபாயோபேயங்க ளென்றநுபவித்து அத்தால் யதீந்த்ரப்ரவணரென்று ப்ரஸித்தரான மணவாளமாமுனிகளை ஆஸ்ரயிக்கிறேன்.

822.417A N27

எம்பெருமானாருளிச்செய்தது.

𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌾𑌥 𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌂 𑌨𑌾𑌥𑌯𑌾𑌮𑍁𑌨 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌂 ।
𑌅𑌸𑍍𑌮𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌗𑍁𑌰𑍁𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾𑌂 ॥

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம்।
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம் பராம் ॥

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்-ஸ்ரீய:பதியான ஸர்வேஸ்வரனிடத்தில் நின்றும் ஆரம்பித்ததாய்
நாதயாமுனமத்யமாம் - நாதமுனிகள் ஆளவந்தார் இவர்களை நடுவிலுடையதாய்
அஸ்மதாசார்யபர்யந்தாம் - நம்முடைய ஆசார்யனீறாக உண்டான
குருபரம்பராம்-குருபரம்பரையை
வந்தே-ஸேவிக்கிறேன்.

(தா - ம்.) ஶ்ரிய:பதிதொடங்கியநாதமுநிகள் ஆளவந்தார் நடுவாய், நம்மாசார்யனளவாக உள்ளகுருபரம்பரையைத்தொழுகிறேன்.

கூரத்தாழ்வானருளிச்செய்தது.

𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌚𑍍𑌯𑍁𑌤 𑌪𑌦𑌾𑌮𑍍𑌬𑍁𑌜 𑌯𑍁𑌗𑍍𑌮𑌰𑍁𑌕𑍍𑌮
𑌵𑍍𑌯𑌾𑌮𑍋𑌹𑌤𑌸𑍍 𑌤𑌦𑌿𑌤𑌰𑌾𑌣𑌿 𑌤𑍃𑌣𑌾𑌯 𑌮𑍇𑌨𑍇 ।
𑌅𑌸𑍍𑌮𑌦𑍍𑌗𑍁𑌰𑍋𑌰𑍍 𑌭𑌗𑌵𑌤𑍋𑌽𑌸𑍍𑌯 𑌦𑌯𑍈𑌕𑌸𑌿𑌨𑍍𑌧𑍋𑌃
𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌸𑍍𑌯 𑌚𑌰𑌣𑍌 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

யோ நித்ய மச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யாமோஹத ஸ்ததிதராணி த்ருணாய மேநே।
அஸ்மத் குரோர் பகவதோஸ்ய தயைக ஸிந்தோ
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே॥

ய:-எந்தஎம்பெருமானார்
நித்யம்-ப்ரதிதினமும்
அச்சுத-ஸர்வேஸ்வரனுடைய
பதாம்புஜயுக்ம-இரண்டு ஸ்ரீதிருவடித் தாமரைகளாகிற
ருக்ம-ஸ்வர்ணத்திலே
வ்யாமோஹத:-அதிக ஆசையினால்

ததிதராணி-அத் திருவடிகளைக் காட்டிலும் வேறான வஸ்துக் களை
த்ருணய-த்ருணப்ராயமாக
மேநே-எண்ணினரோ
அஸ்மத்குரோ:-நம்மாசார்யராய்
பகவத:-ஸம்ஸ்தகல்யாண குணபரிபூர்ணராய்

தயைகஸிந்தோ:-தயா குணத்துக்கு முக்யஸமுத்ரம்போலிருக்
அஸ்ய-இந்த [கிற
ராமாநுஜஸ்ய-எம்பெருமானருடைய
சரணௌ-திருவடிகளை
சரணம்-உபாயமாக
ப்ரபத்யே-பற்றுகிறேன்.

(தா - ம்) பரமபோக்யமாய் உபேயோபேயமாயிருந்துள்ள எம்பெருமானுடைய திருவடிகளையாசைப்பட்டு மற்றஸாம்ஸாரிகஸாதநங்களை யநாதரித்தவராய், நம்முடைய அஜ்ஞாநாந்தகாரத்தைப்போக்கின ஸகல கல்யாணகுணபரிபூர்ணராய், ஆஸ்ரிதர் குற்றங்களைப் பொறுக்கும்படியான தயாதிகுணங்களால் நிறைந்தவரான எம்பெருமானருடைய திருவடிகளை உபாயோபேயமாகப்பற்றினேன்.

ஸ்ரீ ஆளவந்தா ரருளிச்செய்தது.

𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾 𑌯𑍁𑌵𑌤𑌯𑌸𑍍𑌤𑌨𑌯𑌾 𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌃
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌦𑍇𑌵 𑌨𑌿𑌯𑌮𑍇𑌨 𑌮𑌦𑌨𑍍𑌵𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 ।
𑌆𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌃 𑌕𑍁𑌲𑌪𑌤𑍇𑌰𑍍𑌵𑌕𑍁𑌳𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌂
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌤𑌦𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑌳𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑌿 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌾 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்|
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா||

மாதா-தாயும்
பிதா-தகப்பனும்
யுவதய:-ஸ்த்ரீகளும்
தநயா:-பிள்ளைகளும்
விபூதி:-ஐஶ்வர்யமும்

ஸர்வம்-இன்னும்ஸமஸ்தமானது
மதந்வயாநாம்-நான் பிறந்த வம்சத்தில் பிறந்தவர்களுக்கு
நியமேந-எப்போதும் [றதுகளோ
யதேவ-எந்தத்திருவடிகளேயாகி

நஃ-நமக்கு
ஆத்ஸ்யநஃ குலபதேஃ-முதல்தொடங்கி குலகுருவான நம்மாழ்வாருடைய
வகுளாபிராமம்- மகிழம்பூவினால் பரிமளித்துக்கொண்டிருக்கிற
ஸ்ரீமத்-ஸுந்தரமான
தத்-அந்த
அங்க்ரியுகளம்-இரண்டு திருவடி[களையும்
மூர்த்நா-தலையினால்
ப்ரணமாமி-நன்றாக ஸேவிக்கிறேன்.

(தா-ம்) நமதுகுலத்தில் பெரியோர்க்கு மாதாவைப்போல் பிரியகரமாயும், பிதாவைப்போல் ஹிதகரமாயும், பத்நியைப்போல் தர்மஸாதகமாயும், பிள்ளைகளைப்போல் பரலோகஸாதகமாயும், ஐஶ்வர்யம்போல் ஸ்வயம் புருஷார்த்தமாயும், இன்னும்வேண்டுமவையெல்லாமுமாயிருக்கிறதாய், மகிழ மாலையணிந்து அழகியதாய், நம்முடைய குலத்துக்கு ஆதிமுதல்குலகுருவான நம்மாழ்வாருடைய இணையடியைத் தலைவணங்கி ஸேவிக்கிறேன்.

பராசாபட்டரருளிச்செய்தது.

𑌭𑍂𑌤𑌂 𑌸𑌰𑌶𑍍𑌚 𑌮𑌹𑌦𑌾𑌹𑍍𑌵𑌯 𑌭𑌟𑍍𑌟𑌨𑌾𑌥
𑌶𑍍𑌰𑍀𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑌾𑌰 𑌕𑍁𑌲𑌶𑍇𑌖𑌰 𑌯𑍋𑌗𑌿𑌵𑌾𑌹𑌾𑌨𑍍 ।
𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌰𑍇𑌣𑍁 𑌪𑌰𑌕𑌾𑌲 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌮𑍁𑌨𑌿𑌂 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 ॥

பூதம் ஸரஶ்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகி வாஹாந்
பக்தாங்க்ரி ரேணு பரகால யதீந்த்ரமிஶ்ராந்
ஸ்ரீமத்பராங்குஶ முநிம் ப்ரணதோஸ்மி நித்யம்॥

பூதஃ-பொய்கையாழ்வாரையும்
ஸரஸ்ய-பூதத்தாழ்வாரையும்
மஹதாஹ்வய-பேயாழ்வாரையும்
பட்டநாத-பெரியாழ்வாரையும்
ஸ்ரீபக்திஸார - திருமழிசையாழ்வாரையும்
குலஶேகர-குலசேகராழ்வாரையு[ம்
யோகிவாஹாந்-திருப்பாணாழ்வாரையும்
பக்தாங்கிரிரேணு-தொண்டரடிப்பொடியாழ்வாரையும்
பரகால-திருமங்கையாழ்வாரையு[ம்
யதீந்தரமிஶ்ராந்-பூஜ்யான உடையவரையும்

ஸ்ரீமத்பராங்குஶமுநிம்-ஸ்ரீமானான நம்மாழ்வாரையும்
நித்யம்-ப்ரதிதிநம்
ப்ரணதஃ-நமஸ்கரித்தவனாக
அஸ்மி-ஆகிறேன்.

(தா - ம்.) பொய்கையார், பூதத்தார், பேயார், பட்டநாதன், திருமழிசைப்பிரான், குலசேகரப்பெருமாள், திருப்பாணன், தொண்டரடிப்பொடிகள், திருமங்கைமன்னன், உடையவர், இவர்களை அவயவமாக உடைய நம்மாழ்வார் இவர்களை திநந்தோறும் தொழுகிறேன்.

நாதமுனிக ளருளிச்செய்தது.

𑌗𑍁𑌰𑍁𑌮𑍁𑌖 𑌮𑌨𑌧𑍀𑌤𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌵𑍇𑌦𑌾𑌨𑌶𑍇𑌷𑌾𑌨𑍍
𑌨𑌰𑌪𑌤𑌿 𑌪𑌰𑌿𑌕𑍍𑌲𑍢𑌪𑍍𑌤𑌂 𑌶𑍁𑌲𑍍𑌕 𑌮𑌾𑌦𑌾𑌤𑍁𑌕𑌾𑌮𑌃 ।
𑌶𑍍𑌵𑌶𑍁𑌰 𑌮𑌮𑌰𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌂 𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌥𑌸𑍍𑌯 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍
𑌦𑍍𑌵𑌿𑌜𑌕𑍁𑌲 𑌤𑌿𑌲𑌕𑌂𑌤𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 ॥

குருமுக மநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந்
நரபதி பரிக்லிப்தம் சுல்க மாதாதுகாம:|
ஶ்வசுர மமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுல திலகம்தம் விஷ்ணுசித்தம் நமாமி.

யஃ-எந்தப்பெரியாழ்வார்
நரபதி-ஸ்ரீவல்லப தேவனென்கிறராஜனால்
பரிக்லிப்தம்-ஏற்படுத்தப்பட்ட
சுல்கம்-வித்யாசுல்கத்தை
ஆதாதுகாமஃ-க்ரஹிப்பதற்கு ஆசையுள்ளவராய்
குருமுகம்-ஆசார்யமுகத்தால்
அநதீத்ய-அப்யசிக்காமலே
அசேஷாந்-ஸமஸ்தமாகிய
வேதாந்-வேதங்களை
ப்ராஹ-உபந்யஸித்தாரோ
ரங்கநாதஸ்ய-ஸ்ரீரங்காதிபனுக்கு
ஸாக்ஷாத்-ப்ரத்யக்ஷமாய்
ஶ்வசுரம்-மாமனாரும்
அமர-தேவதைகளால்
வந்த்யம்-ஸ்தோத்ரம்செய்தற்குத்தக்கவரும்
த்விஜகுல-ப்ராஹ்மணவம்சத்துக்கு
திலகம்-அலங்காரபூதருமாகிய
தம்விஷ்ணுசித்தம்-அந்தப்பெரியாழ்வாரை
நமாமி-ஸேவிக்கிறேன்.

(தா - ம்.) பாண்டியன் கட்டினவித்யா சுல்கத்தை யறுக்கைக்காகச் சென்று, முன்பொரு குருவினிடத்திலத்யயநம்பண்ணாமலே எம்பெருமானருளால் ஸமஸ்தவேதார்த்தங்களையு முபந்யஸித்தவராய், தன்பெண்பிள்ளையான ஆண்டாளாலே அரங்கனுக்கு மாமனாராய், ஸகலதேவ வந்தனீயராய்ப்ராஹ்மணோத்தமரான பெரியாழ்வாரை யாஶ்ரயிக்கிறேன்.

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகால்
சொன்னார் கழற்கமலஞ் சூடினோம்-முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோங் கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

மின்னு - மின்னுதல்-(மணிகளாலொளிவிடுதல்)
ஆர்-நிறைந்த-(அதிகமான)
தட-உயர்ந்தோங்குகையுமுள்ள
மதிள்-திருமதிளாலே
சூழ்-வளைக்கப்பட்ட
வில்லிபுத்தூர்என்று - ஸ்ரீவில்லிபுத்தூரென்று
ஒருகால்சொன்னார்- ஒருதரம்உச்சரித்தவருடைய கழல்கமலம்- திருவடித்தாமரைகளை
சூடினோம்-விசேஷ புஷ்பமாக முடித்தோம்
முன்னாள்-புருஷார்த்தம் வெளியாகாதகாலத்தில்
கிழி-பொருண்முடிப்பை
அறுத்தானென்று-அறுத்து வெளியிட்டவனென்று
உரைத்தோம்-சொல்லப்பெற்றோம்
கீழ்மையினில்-நரகத்திலே
சேரும்-முன்போற் செல்லுகிற
வழி-மார்க்கத்தை
அறுத்தோம்-அறப் பண்ணினோம்
நெஞ்சமே-மனஸே
வந்து-ஸம்ஸார ரஹிதராய்வந்து.

(தா — ம்.) அத்யுஜ்வலமாப் பரந்தோங்கி யிருந்துள்ள மதிள்களையுடைய ஸ்ரீ வில்லிபுத்தூரென்று பெரியாழ்வார் திருவவதரித்த திவ்யதேசநாமத்தை யொருதரம் அநுஸந்தித்த பெரியோர்கள் திருவடித்தாமரைகளை நம்சென்னிப் பூவாக்கினோம். அதுக்குமேலே பெரியாழ்வார் கிழியறுத்த திவ்யசரித்திரத்தையும் வாயாரச்சொன்னோம் ஓமநஸ்ஸே! இனிநாம் நரகத்திலும் ஸம்ஸாரத்திலும் போகைக்கு வழியில்லைகாண்.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்
றீண்டிய சங்க மெடுத்தூத வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

பாண்டியன்-ஸ்ரீவல்லபதேவனென்கிற பாண்டியராஜன்
கொண்டாட-மேன்மேலேத்த
பட்டர்பிரான்- ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தலைவன்
வந்தானென்று - எழுந்தருளினுனென்று
ஈண்டிய-கூடின - (அநேகமான)
சங்கம்எடுத்து சங்குகளைக்கொண்டு
ஊத-அநேகர்ஸப்திக்க
வேண்டிய-அக்காலத்துக்கு ஆவஸ்யகமாகிய
வேதங்கள்-வேதார்த்தங்களை
ஓதி-தெரியச்சொல்லி
விரைந்து- தாமஸியாமல்
கிழி-வித்யாசுல்கமாகிய பொருண்முடிப்பை
அறுத்தான்-அறுத்தவனுடைய
பாதங்கள்-திருவடிகளே
யாம்-நாங்கள்
உடைய-ஆஸ்ரயமாகவுடைய
பற்று-ஆதாரம்.

(தா - ம்.) பெரியாழ்வா ரெழுந்தருளுகிறுரென்று பாண்டிய தேசாதிபதி யான வல்ல பராயன்புகழ, பரிஜநங்கள் சங்கங்களெடுத்தூத, அப்பொழுது வேதார்த்தங்களைப்பரக்கச் சொல்லி வித்யா சுல்கத்தையறுத்த பெரியாழ்வார் திருவடிகளே நமக்கு உபாயோபேயங்களாம்.

பெரியாழ்வார் அருளிச்செய்த

திருப்பல்லாண்டு.

அ-கை. முற்காலத்தில் பாண்டியதேசத்தரசன் பரமார்த்தத்தை நிர்ணயம் பண்ணக்கருதி வித்வான்களைத்திரட்டி வீர்ய சுல்கத்தைக்கட்டி பரதத்வம் விசாரிக்குமளவில். பெரியாழ்வார் வடபெருங் கோயிலுடையானுடைய நியமநத்தினுல் அச்சபைக்குச் சென்று உபநிஷதாதி ப்ரமாணங்களைக்கொண்டு ஸ்ரீமந்நாரா

யணனே பரதத்வமென்று நிர்ணயித்துக் கிழியறுத்தவளவில், பாண்டியன் மனக்களிப்புடனே இவரையானைமேலேற்றி வீதி வலம் வருகையில், ஸ்ரீய: பதியான ஸர்வேஸ்வரன் கருடாரூடனாய் நித்யஸூரிபரிஷத்ஸம் ஸேவிதனாய், பெரியாழ்வார் வைபவத்தையநுபவித்தாநந்திக்கக்கருதி யாகாசத்திலே வந்துநிற்க, பெரியாழ்வாரவனுடைய திவ்யவிக்ரஹத்தைக் கண்டு இதுக்கென்ன தீங்குவருகிறதோ வென்று சங்கித்து அவனுக்கு மங்களாசாஸநம பண்ணுகிறார்.

பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
பல்கோடி நூறுயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா வுன்
சேவடி செவ்விதிருக் காப்பு.

மல்-ஒருவராலுமடங்காத சாணூரமுஷ்டிகரென்கிற மல்லவர்க்கத்தை
ஆண்ட-நிரவித்த
திண்-திண்ணிய
தோள்-திருத்தோள்களையுடையனாய்
மணி-நீலரத்நம்போன்ற [னே
வண்ணா-வடிவழகையுடையவ
பல்லாண்டு பல்லாண்டு-பல வருஷங்களிலும்
பல்லாயிரத்தாண்டு-அநேகப்ரஹ்மகல்பங்களிலும்
பல்கோடிநூறுயிரம் இப்படியுண்டான காலமெல்லாம்
உன்-உன்னுடைய
செம்-சிவந்த
அடி-திருவடிகளின்
செவ்வி-அழகுக்கு
திருக்காப்பு-குறைவற்ற ரக்ஷையுண்டாகவேண்டுமென்று மங்களாசாஸநம்பண்ணுகிறார்.

(தா-ம்.) நீலரத்நம்போல் ஸ்பாமளமான திருமேனியொளியையும், அவ்வொளிக்குப்பரபாகமான அப்போதலர்ந்தசெந்தாமரைப்பூப்போன்ற திருவடிகளையும், சாணூராதி மல்லவர்க்கங்களை யெல்லாம் அநாயாஸமாக நிரவித்த தோள் வலியையுமுடையனாய் ,ஸர்வேஸ்வரத்வாத் ஸாதாரண லக்ஷணமான பரத்வஸௌலப்யங்களை யுடையனானஸ்வாமீ! உன்னுடைய இவ்வழகுக்குசற்றேனும் அழிவுவராதபடி அநேகம்வருஷம் ரக்ஷையுண்

டாக வேணும், இன்னுமநேகமாயிரம் வருஷங்களிலும் அநேகம் நூறாயிரம் வருஷங்களிலும் மங்களமுண்டாகவேணும் என்று, ஒருகால் சொல்லித்ருப்திபிறவாமையால் பலகாலும் மங்களாசாஸநம் பண்ணுகிறார்.

அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையுஞ் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்குமுழங்குமப் பாஞ்சசன்னியமும் பல்லாண்டே.

அடியோமோடும்-சேஷபூதரான வெங்களோடும்
நின்னோடும் - சேஷியானவுன்னோடும்
பிரிவின்றி-பிரிவில்லாமல்
ஆயிரம்பல்லாண்டு - இந்தஸம்பந்தம் நித்யமாய்ச்செல்லவேணும்
வடிவாய்-ஆபரண பூஷிதையாய்
நின்-ஸர்வசேஷியானவுன்னுடைய
வலமார்பினில் - வலத்திருமார்விலே
வாழ்கின்ற-பொருந்திவர்த்திகிற
மங்கையும்-நித்யயௌவநஸ்வபாவையான பெரியபிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்களும்
பல்லாண்டு- நித்யமாய்ச்செல்லவேணும்
சோதி-தேஜோராசியாயிருக்கிற
வடிவுஆர்-வடிவையுடையனாய்
வலத்து-உன்வலத்திருகையிலே
உறையும்-நித்யவாஸம்பண்ணுபவனாய்
சுடர்-பகைவரை யெரிக்குமவனான
ஆழியும்-திருவாழியாழ்வானும்
பல்லாண்டு-நித்யமாய்ச்செல்லவேணும்
படை-ஆயுதமாய்
போர்-யுத்தத்திலே
புக்கு-புகுந்து
முழங்கும்-கோஷியாநின்றுள்ள
அப்பாஞ்சசன்னியமும்- அந்தப் பாஞ்சஜந்யாழ்வானும்
பல்லாண்டு-நித்யமாய்ச்செல்லவேணுமென்கிறார்.

(தா - ம்) எங்கள் ப்ரயோஜநத்தைப் பாராமல் உன் ப்ரயோஜநத்தையேபார்த்து உனக்குமங்களாசாஸநம் பண்ணவிருக்கிற நாங்களும், ஸர்வசேஷியானநீயும் காலமுள்ளதனையும் பிரிவின்றி வாழவேணும், அமங்களங்களைப்போக்கி மங்களங்களை விளைக்கவல்லவளாய் உன் திருமார்பில் நித்யவாஸம்பண்ணும் பெரியபிராட்டியும், சத்ருஸேனையில் புக்கு அவர்களை யழிக்க

வல்லதாய் உன் வலதுதிருக்கையில் உக்வலமாய் விளங்குகிற திருவாழியும். தன்னுடைய கோஷத்தினாலே இருந்தவிடத்தி லிருந்து சத்துருக்களை மாள்விப்பதாய் உன்னிடவருகில்விளங் குகிற திருச்சங்கும் ஓரவத்யமின்றியே எக்காலும் வாழ்ந்திடுக.

வாழாட் பட்டுநின் றீருள்ளீரேல் வந்து மண்ணும் மண முங் கொண்மின், கூழாட் பட்டுநின் றீர்களை யெங்கள் குழுவி னில் புகுதலொட்டோம், ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்க ளிராக்கதர் வாழிலங்கை, பாழா ளாகப்படைபொரு தானுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

வாழ்ஆள் - கைங்கர்யரூபமான போகத்துக்கு
பட்டு- பொருந்தி
நின்றீர்-நிலைநின்றவர்களாய்
உள்ளீரேல்-இருப்பீர்களானால்
வந்து-விரைவாகவந்து
மண்ணும்-திருமுளைத்திருநாளுக்குப்புழுதிமண்சுமக்கையையும்
மணமும் - இந்தக்கல்யாணத்துக்கு அபிமானியாயிருக்கையையும் [கோள்
கொள்மின்-நீங்கள் ஸ்வீகரியுங்
கூழ்-சோற்றுக்காக
ஆள்பட்டு-அடிமையோலை யெழுதிக்கொடுத்து
நின்றீர்களை-கண்டவிடமெங்கும் நிற்கிறவுங்களை
எங்கள்குழுவினில் - அநந்யப்ரயோஜனரான வெங்கள்திரளிலே.
புகுதலொட்டோம்.சேரவொட்டோம்
நாங்கள்-நாங்கள்
ஏழாட்காலும்-முன்னேழ் பின்னேழ் நடுவேழ் ஆகிய இருபத்தொருதலைமுறையிலும்
பழிப்பிலோம்-குற்றமற்றிராநின்றோம்
இராக்கதர்-ராக்ஷஸர்
வாழ்-வர்த்திக்கிற
இலங்கை-லங்கையானது
பாழாளாக-ஆள்பாழாம்படியாக
படை-யுத்தத்திலே
பொருதானுக்கு-அன்று எதிரிகளம்பு மார்பிலேலதைக்கும்படி பொருதவனுக்கு
பல்லாண்டுகூறுதும்-இன்றிருந்து மங்களாசாஸநம்பண்ணிப் போகுவோம் சிலர் நாங்களென்கிறார்.

(தா - ம்.) ஓஜநங்களே! நாங்கள் ஏழுதலை முறையாக, தேஹாத்ப்ரமம், ஸ்வதந்த்ராத்ப்ரமம், அந்யசேஷத்வ ப்ரமம், உபாயாந்தராந்வயம், ஸ்வார்த்த கைங்கர்யம் ஆகிய தோஷங்க

ளொன்று மின்றியே, முற்கால் ராவணனையும் அவன்குலத்தையும் அவனுடையநகரத்தையு மழித்துஸஜ்ஜநங்களைக் கருணித்த இராகவன்விஷயமாகக மங்களாசாஸநம்பண்ணிப் பொழுதுபோக்குகிறோம். எங்கள் கூட்டத்தில், ஐச்வர்யம் முதலியக்ஷுத்ர பலங்களை யாசைப்பட்டுப் பிறர்க்கு அடிமைப்பட்டவர்களை சேர்த்துக்கொள்ளோம். நீங்கள் பகவத்கைங்கர்யம் பண்ணி உஜ்ஜீவிக்க விரும்பினீர்களாகில், எங்களுடைய ஸ்ரீ வைஷ்ணவகுலத்தில் சேர்ந்து அந்தரங்க கைங்கர்யங்களையும் மங்களாசாஸநங்களையும் பண்ணுங்கோள் என்று அநந்யப்ரயோஜனரை அழைக்கிறார். (3)

ஏடு நிலத்தி லிடுவதன் முன்னம்வந் தெங்கள் குழாம்புகுந்து, கூடு மனமு டையீர்கள் வரம்பொழி வந்தொல்லைக் கூடுமினோ, நாடு நகரமு நன்கறிய நமோ நாராய ணாயவென்று, பாடு மனமுடைப் பத்தருள் ளீர்வந்து பல்லாண்டு கூறுமினே.

ஏடு-பொல்லாங்கான
நிலத்தில்-மூலப்ரக்ருதியிலே
இடுவதன்முன்னம்-சேர்ப்பதற்குமுன்னே
வந்து-வந்து
எங்கள்குழாம்-அநந்யப்ரயோஜநரான வெங்கள்திரளிலே
புகுந்து-புகுந்து
கூடுமனமுடையீர்கள்-கூடவேணுமென்கிற நினைவுடையவர்களாயிருப்பீராயின்
வரம்பொழி-வரம்பொழிய
ஒல்லை-விரைவாக
வந்து-வந்து
கூடுமினோ-சேருங்கோள்
நாடும்-நாட்டிலுள்ள அவிசேஷஜ்ஞரும்
நகரமும்-நகரத்திலுள்ள விசேஷஜ்ஞரும்
நன்கறிய-நன்றாகவறியும்படி
நமோநாராயணாயவென்று-நமோநாராயணாயவென்று
பாடும்-பாடத்தக்க
மனமுடை-மனஸுண்டாம்படியான
பத்தருள்ளீர்-ப்ரேமத்தை யுடையீராகில்
வந்து-வந்து
பல்லாண்டுகூறுமின்-பல்லாண்டு பாடுங்களென்கிறார்.

(தா - ம்.) ஓ மானிடர்களே! நீங்களாசைப்படும்கைவல்யமென்பது பொல்லாது. அதுஐச்வர்யத்தைக்காட்டிலும் மேலா

யினும் அதில் புகுந்தவர்களுக்கு மறுஜந்ம மில்லாமையால் மற்றொருபுருஷார்த்தத்தை யடையப்போகாது. ஆகையால் - தனியிருப்பாகிய அக்கைவல்யத்தில் மனமறுத்து, உங்கள் ஸ்வரூபத்தையுணர்ந்து, அதுக்கநுரூபமான கைங்கர்யத்தை விரும்பினீர்களாகில், ப்ராக்ருதத்தை கைவிட்டுப் பெரியோர் புகழும்படி அவ்வழியைத்தவிர்த்து விரைந்து வந்து எங்களுடன்கூடி எம்பெருமான் திருநாமங்களைப்பாடி மங்களாசாஸநம் பண்ணப்பாருங்கோள் என்றுகேவலரை யழைக்கிறார். (4)

அண்டக் குலத்துக் கதிபதி யாகி யசுர ரிராக்கதரை, இண்டக் குலத்தை யெடுத்துக் களைந்த விருடீகேசன்றனக்குத், தொண்டக் குலத்தி லுள்ளீர்வந் தடிதொழு தாயிர நாமஞ்சொல்லி, பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத் தாண்டென்மினே.

அண்டக்குலத்துக்கு-அண்டஸமூஹத்துக்கு
அதிபதியாகி-தலைவனாய்
அசுரரிராக்கதரை அஸுரராக்ஷஸர்களுடைய
இண்டக்குலத்தை-நெருங்கின திரளை
எடுத்து-சேரத்திரட்டி
களைந்த-நிர்மூலமாகப்போக்கின.
இருடீகேசன்றனக்கு-இந்த்ரியங்களைத் தன்வசமாகநடத்தும் மவனுக்கு
தொண்டக்குலத்தில்-அடிமை செய்யுங்குலத்திலே
உள்ளீர்-உளரான நீங்கள்
வந்து-வந்து
அடி-ஸர்வேச்வரன்திருவடிகளை
தொழுது-தொழுது
ஆயிரநாமம்-அவன்திருநாமங்களையெல்லாம்
சொல்லி-வாயாரச்சொல்லி
பண்டைக்குலத்தை - பகவத்விமுகராயிருந்தகாலமான பழைய ஜாதியை
தவிர்ந்து-"நான் எனக்கு"-என்கிற நினைவோடு விட்டு
பல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்மின்-அநேகமாயிரம் ஸம்வத்ஸரங்கள் நித்யமாய்ச் செல்லவேணுமென்று மங்களாசாஸநம் பண்ணுங்கோள்.

(தா - ம்.) ஓ மனிதரே! நீங்கள், அண்டாதிபதியாய், ஹிரண்ய ராவணாதி துர்வர்க்கங்களை வேருடன்களைந்த ஸர்வேஶ்வர

ணைக்கிட்டி அங்கவஸ்த்ராதி அல்பபலங்களை வாங்கிக்கொண்டு போகையாகிற அவ்வழியைத்தவிர விருப்பமுடையீராகில், முன்னொழுக்கத்தைவிட்டு எங்களுடன்சேர்ந்து ஸர்வேஸ்வரனடி பணிந்து அவன் நாமங்களை வாயார இரைந்துபாடுங்கோள் என்று முமுக்ஷுக்களை யழைக்கிறார். (5)

எந்தை தந்தை தந்தை தந்தை தம்மூத்தப்பனேழ்படிகால் தொடங்கி, வந்து வழிவழியாட்செய்கின்றோந்திருவோணத்திருவிழவில், அந்திபம் போதி லரியுருவாகி யரியை யழித்தவனைப், பந்தனை தீரப்பல்லாண்டு பல்லாயிரத் தாண்டென்று பாடுதுமே.

எந்தை-நானும் என்னப்பனும்
தந்தை-அவனுக்கப்பனும்
தந்தை-அவனுக்கப்பனும்
தந்தை அவனுக்கப்பனும்
தம்மூத்தப்பன்-அவனுக்கு அப்பனும் பாட்டனுமாகிய

ஏழ்படிகால்தொடங்கி-ஏழுதலைமுறைகள் தொடங்கி

வழிவழி-முறைமுறையாக
ஆட்செய்கின்றோம் - தப்பாமே அடிமைசெய்கிறோம்
திருவோணத்திருவிழவில்-திருவோணமென்கிற திருநாளிலே
அந்தியம்போதில் - அஸுரர்க்கு பலம் வர்த்திக்கத்தக்க அந்திப்பொழுதிலே
அரியுருவாகி-ந்ருஸிம்ஹரூபியாய்க்கொண்டு
அரியை-ஆச்ரிதனான ப்ரஹ்லாதாழ்வானுக்கு சத்ருவான ஹிரண்யனை
அழித்தவனை - உருவழித்துப்பொகட்டவனுக்குண்டான
பந்தனைதீர-அனுக்கம்திரும்படி
பல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்று-பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று
பாடுதும்-பாடுவோம்

(தா - ம்) நாங்கள் ஏழுதலைமுறையாக தேவதாந்தரஸாதநாந்தா ப்ரயோஜநாந்தராதிகளைவிட்டு அநந்ய ப்ரயோஜநராய் வந்து அடிமையிலநவயித்தோம் இப்போது நாங்கள்செய்யும் கார்யமேதென்னில்; ஸந்த்யாகாலத்தில் நரஸிம்மமாய் அவதரித்து ஹிரண்யனையழித்த ஸர்வேஸ்வரனுடைய திருவோணத்திருநாளில் த்ருஷ்டி தோஷமறும்படி மங்களாசாஸநம் பண்ணுகிறோம் என்று அநந்யப்ரயோஜநர் வந்தார்கள். (6)

தீயிற் பொலிகின்ற செஞ்சுட ராழிதிகழ் திருச்சக்கரத் தின், கோயிற் பொறியாலே யொத்துண்டுநின்று குடிகுடி யாட்செய்கின்றோம், மாயப் பொருபடைவாணனை யாயிரந் தோளும் பொழிகுருதி பாயச் சுழற்றிய வாழிவல் லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

தீயில்-சந்த்ராதித்யர்களைக்காட்டிலும்
பொலிகின்ற-மிகவிளங்காநின்ற
செம்-சிவந்த
சுடர்-ஜ்யோதிஸ்ஸையுடைத்தாய்
திகழ்-ப்ரகாசியாநின்றுள்ள
திருச்சக்கரத்தின்கோயில்-திருவாழியாழ்வானெழுந்தருளியிருக்கிற கோயிலாய்
ஆழி-மண்டலாகாரமான
பொறியாலே-சிந்நத்தாலே
ஒற்றுண்டுநின்று-சிந்நிதராய்நின்று
குடிகுடி - எங்கள் ஸந்தாநமெல்லாம்
ஆள்செய்கின்றோம்-அடிமைசெய்வோமாய்வந்தோம்
மாயம்-க்ர்த்ரிமமாக
பொரு-போர்செய்யாநின்றுள்ள
படை-ஸேனையையுடையனை
வாணனை-பாணாஸுரனுடைய
ஆயிரந்தோளும்-ஆயிரந்தோள்களினின்றும்
குருதி-ரக்தமானது
மதகு-திறந்தாற்போலே
பொழிபாய - புறப்பட்டோடும்படி
சுழற்றிய-சுழற்றின
ஆழி-திருவாழியாழ்வானை நியமிப்பதில்
வல்லானுக்கு - ஸமர்த்தனானவனுக்கு
பல்லாண்டு கூறுதும் - திருப்பல்லாண்டு பாடுவோம்.

(தா - ம்.) நாங்களும் எங்களைச்சார்ந்தவர்களும் ஸகுடும்பமாகக் கைவல்யத்திலாசையற்று அத்யுஜ்ஜ்வலமான திருவாழியாலே புஜமூலத்தில் அங்கிதராய், எம்பெருமானுக்கு அடிமை செய்யப்புக்கோம். இப்போது செய்வதேதென்னில்; வஞ்சகப் போர்விளைக்கும் பாணாஸுரனது ஆயிரம் தோள்களை துணித்து ரத்தவெள்ளம் புறப்படவிட்ட திருவாழியையுடைய க்ருஷ்ணனுக்கு மங்களாசாஸநம் பண்ணுவோம் என்று கேவலர் வந்தார்கள். (7)

நெய்யிடை நல்லதோர்சோறும் நியதமு மத்தாணிச் சேவகமும், கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக்

குண்டலமும், மெய்யிட நல்லதோர் சாந்தமுந் தந்தென்னை வெள்ளுயி ராக்கவல்ல, பையுடை நாகப் பகைக்கொடி யானுக்குப் பல்லாண்டுகூறுவனே.

இடை-ஒத்தநிறையான
நெய்-நெய்யோடுகூடினதாய்
நல்லது நல்லதாய்
ஓர்-விலக்ஷணரஸோபேதமான
சோறும்-ப்ரஸாதத்தையும்
நியதமும்-எப்போதும்
அத்தாணிச்சேவகமும்-பிரியாத ஸேவையையும்
கை-திருக்கையாலேயிட்ட
அடைக்காயும்-வெற்றிலைப்பாக்கையும்
கழுத்துக்குப்பூணொடு- கழுத்துக்கிடும் ஆபரணமான கண்டியையும்
காதுக்குக்குண்டலமும்-செவிக்கிடும் ஆபரணமான குண்டலத்தையும்
மெய்யிட-உடம்பிலே பூசுகைக்கு யோக்யமான
நல்லது-நல்லபரிமளத்தாலே
ஓர்-ஒப்பற்றிருந்துள்ள
சாந்தமும்-சந்தநத்தையும்
தந்து-கொடுத்து
என்னை-தாஸபூதனன வென்னை
வெள்ளுயிர்-சுத்தஸ்வபாவனாக
ஆக்கவல்ல-செய்யவல்லனாய்
பையுடை-படத்தையுடைய
நாகம்-ஸர்ப்பத்துக்கு
பகை விரோதியான கருடனை
கொடியானுக்கு - கொடியாகவுடையவனுக்கு
பல்லாண்டு கூறுவன் - மங்களாசாஸநம் பண்ணுகிறேன்.

(தா - ம்.) தாரகபோஷக போக்யங்களான அந்நபாநாதிகளையும் நெய் முதலானவற்றையும் சந்தநகுஸும தாம்பூலாதிகளையும் நாங்கள் கேட்டதற்குப் பதின்மடங்காகப் ப்ரீதியுடன் அநந்யப்ரயோஜநமாகவளித்துத் தன் குணங்களிலென்னை யகப்படுத்தி அவற்றிலாசையை யழித்து அநந்யப்ரயோஜநனாக்கின கருடத்வஜனுக்குப் பல்லாண்டு பாடுவேன் என்று புகுந்தான். (8)

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை யுடுத்துக் கலத்ததுண்டு, தொடுத்த துழாய் மலர்சூடிக் களைந்தன சூடுமித்தொண்டர்களோம், விடுத்த திசைக்கருமந் திருத்தித் திருவோணத் திருவிழவில், படுத்தபைந் நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

உடுத்த-திருவரையிலேயுடுத்து
களைந்த-கழித்த
நின்-தேவரீருடைய [தை
பீதகவாடை-திருப்பீதாம்பரத்
உடுத்து-உடுத்தும்
கலத்தது - அமுதுசெய்து கலத்தில் மிகுந்திருப்பதை
உண்டு-ஸ்வீகரித்தும்
சூடிக்களைந்தன - முடித்துக்களையப்பட்டும் [ள
தொய்த்த-தொடுத்துமிருந்துள்
துழாய்மலர்-துழாய்மலர்களை
சூடும்-சூடிப்போகிற
இத்தொண்டர்களோம்-இப்படிப்பட்ட அடியாரிலே நாங்கள்
விடுத்த-ஏவின
திசைக்கருமம்- திக்கிலுள்ள காரியங்களை
திருத்தி-நன்றாகச்செய்து
திருவோணதிருவிழவில் - திருவோனமாகிற திருநாளிலே
படுத்த-படுக்கப்பட்டு
பை-ஸ்வஸ்பர்சத்தாலே விகஸிதமாகாநின்றுள்ள
நாகனை - திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே
பள்ளிகொண்டானுக்கு-கண்வளர்ந்தருளுமவனுக்கு பல்லாண்டுகூறுதும் - மங்களாசாஸநம் பண்ணுகிறோம்

(தா - ம்.) எம்பெருமான் உண்டுடுத்துச் சூடிக்களைந்ததை ப்ரஸாதோத்தேஸ்பமாக உண்டுமுடுத்தும் சூடுமவர்களுமான சேஷபூதரான நாங்கள் அவனேவலின்படி திருவோணத் திருநாளில் கண்ணெச்சில் வாராதபடி .அநந்தசாயிக்குப் பல்லாண்டு பாடுகிறோமென்று அநந்யப்பிரயோசநருடன் பல்லாண்டு பாடுகிறார். (9)

எந்நா ளெம்பெரு மானுன் றனக்கடி யோமென் றெழுத்துப்பட்ட, வந்நா ளேவடி யோங்க ளடிக்குடில் வீடுபெற் றய்ந்ததுகாண், செந்நாள் தோற்றித் திருமதுரையுட் சிலைகுனித்தைந்தலைய, பைந்நா கத்தலைப் பாய்ந்தவனேயுன்னைப் பல்லாண்டு கூறுதுமே.

எம்பெருமான் - எம்முடைய ஸ்வாமியே உன்றனுக்கு ஸர்வசேஷியானவுனக்கு
அடியோமென்று-சேஷபூதரென்று
எழுத்துப்பட்ட - அடிமைச்சீட்டெழுதிக்கொடுத்தநான்
எந்நாள்-எந்தநாள்
அந்நாளே-அந்தநாளே
அடியேங்கள்- தாஸபூதரானநாங்களும்
அடிக்குடில் - எங்கள்க்ருஹங்களிலுள்ள புத்ரபௌத்ராதிகளும்
வீடுபெற்று-விடப்பெற்று

உயந்தது-உஜ்ஜீவிக்கப்பெற்ருேம்
செம்- அழகியதான
நாள்-ரோஹிணீநக்ஷத்ரத்திலே
தோற்றி- திருதவதரித்து
திருமதுரையுள்-ஸ்ரீ வடமதுரையிலே
கம்ஸனுடைய ஆயுதசாலையிலே புக்கு
சிலைகுனித்து-வில்லைமுறித்தும்
ஐந்தலைய-ஐந்து தலைகளையுடையனுய்
பை-பரந்தபடத்தையுடைய
நாகத்தலை-காளியனென்னும் பாம்பின் தலையிலே
பாய்ந்தவனே-குதித்தவனே
உன்னை-உனக்கு
பல்லாண்டுகூறுதும்-மங்களாசாஸநம் பண்ணுகிருேம்.

(தா - ம்.) ஓ ஸ்வாமீ! நாங்கள் உனக்கு அடிமைப்பட்ட நாள் தொடங்கி எங்கள்குலம் முழுதும் உஜ்ஜீவித்துவிட்டது; மஹாபாக்யசாலியான ரோஹிணி நக்ஷத்திரத்தி லவதரித்து காளியன்தலைமீதாடிக் கொழுப்படக்கிக் கம்ஸனுடைய வில்லை முறித்தக்ருஷ்ணனுக்குப் பல்லாண்டு பாடுகிருேமென்று முன் கேவலராயிருந்து பாகவதரானவருடன் சேர்ந்து பல்லாண்டு பாடுகிருர். (10)

அல்வழக் கொன்று மில்லா வணிகோட்டியர் கோனபிமான துங்கன், செல்வனைப் போலத் திருமாலே நானு முனக்குப் பழவடியேன், நல்வகையால் நமோநாராய ணாவென்று நாமம் பல பரவிப், பல்வகை யாலும் பவித்திரனே யுன்னைப் பல்லாண்டு கூறுவனே.

திருமாலே-ஸ்ரீயःபதியானவனே
அல்வழக்கு- தப்பானவழக்குகள்
ஒன்றும்-ஒன்றுமே
இல்லா-இல்லாததாய்
அணி-ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான
கோட்டியர் - திருக்கோட்டியூரிலுள்ளார்க்கு
கோன்-தலைவராய்
அபிமாநதுங்கன்-"நான் எம்பெருமானுக்கடியன்" என்கிற அபிமாநத்திலுயர்ந்தவரான
செல்வனைப்போல் - செல்வநம்பியைப்போல
நானும் - சேஷபூதனை நானும்
உனக்கு-சேஷியானவுனக்கு
பழவடியேன் - பழையவடியேனுகையாலே
நல்வகையால்-விலக்ஷணேபாயத்தால்
நமோ - நான்எனக்குரியேனல்லேன்
நாராயணா-ஸர்வஸ்வாமியே
பல்வகையாலும் - ஸர்வப்ரகாரத்தாலும்

பவித்திரனே - பரிசுத்தனானவனே
என்று-என்று
நாமம்பல-உன்னுடைய திருநாமங்களையெல்லாம்
பரவி-வாயில்வந்தபடிசொல்லி
உன்னை-உனக்கு
பல்லாண்டு கூறுவன்-மங்களாசாஸநம் பண்ணுகிறேன்.

(தா - ம்.) தேஹாத்மாபிமாநம் தொடங்கி ஸ்வார்த்த கைங்கர்ய மளவாக உள்ள தீயவழிகளைத்துறந்து திருக்கோட்டியூரி லெழுந்தருளியிருக்கிற பாகவதாக்ரேஸரான செல்வநம்பியைப் போல் நானும் ஸ்ரீயஃபதியைப்போல் ஸஹஜதாஸ்யத்தைவஹித் தேன். இதுவரையில் ப்ரயோஜநாந்தரந்துக்காக ஜபஹோமாதி களில் உபயோகப்படுத்தின திருநாமங்களை இப்பொழுது அர்த் தத்துடனனுஸந்தித்தவனுப், என்னை இப்படி அநந்யப்ரயோஜ நனுக்கின பரிசுத்தனை உனக்கு பல்லாண்டு பாடுகிறேனென்று முன்பு புக்ஷுவாய் பாகவதனானவர் உன்னைப் பல்லாண்டு பாடு கிறார் (11)

பல்லாண் டென்று பவித்திரனைப் பரமேட்டியைச் சார்ங்க மென்னும், வில்லாண் டான்றன்னை வில்லிபுத்தூர்விட்டுணுசித் தன் விரும்பியசொல், நல்லாண்டென்று நவின்றுரைப்பார்நமோ நாராயணுயவென்று, பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந் தேத்துவர் பல்லாண்டே.

பவித்திரனை-பரிசுத்தனானவனுய்
பரமேட்டியை - பரமபதத்தைக்கலவிருக்கையாகவுடையனுய்
சார்ங்கமென்னும் - ஸ்ரீ சார்ங்கமென்கிற
வில்- வில்லை [ஷயமாக
ஆண்டான்தன்னை - ஆளுமவன்வி
வில்லிபுத்தூர் - ஸ்ரீவில்லிபுத்தூரிலவதரித்த
விட்டுணுசித்தன்-பெரியாழ்வார்
பல்லாண்டென்று-பல்லாண்டென்று
விரும்பிய-ப்ரேமத்தாலேயருளிச்செய்த
சொல்-பாட்டுகளை
நல்லாண்டென்று - சொல்லுகைக்கு ஏகாந்தகாலமென்று நினைத்து
நவின்றுரைப்பார் - இடைவிடாமல் சொல்லுமவர்கள்
நமோநாராயணுயவென்று-நமோநாராயணுயவென்று
பரமாத்மனை - சேதநாசேதநங்களை சரீரமாகவுடையவனை

சூழ்ந்திருந்து-சூழவிருந்து [ம் பல்லாண்டும்-காலமுள்ள தனையு	பல்லாண்டேத்துவர்-மங்களாசாஸநம்பண்ணப் பெறுவர்கள்.

(தா - ம்.) பரமபாவனனும், பரமபத நிலயனும், ஸ்ரீ சார்ங்கதாரியான ஸர்வேச்வரன் விஷயமாகப் பெரியாழ்வார் விருப்பத்துடனுரைத்த இத்திருப்பல்லாண்டை எப்பொழுது மநுஸந்திப்பவர்கள் பரமபதத்திற்சென்று ஸர்வகாலமும் பரமபுருடனைச் சுற்றிநின்று ஸ்வஸ்வரூபாநு ஸந்தாநபூர்வகமாகப் பல்லாண்டு பாடுவார்கள். (12)

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

திருப்பல்லாண்டு உரை-முற்றிற்று.

தொண்டரடிப் பொடியாழ்வார்
அருளிச்செய்த
திருப்பள்ளி யெழுச்சி.

𑌤𑌮𑍇𑌵 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌪𑌰𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌂
𑌰𑌙𑍍𑌗𑍇𑌶𑌯𑌂 𑌰𑌾𑌜 𑌵𑌦𑌰𑍍𑌹𑌣𑍀𑌯𑌂।
𑌪𑍍𑌰𑌾𑌬𑍋𑌧𑌿𑌕𑍀𑌂 𑌯𑍋𑌽𑌕𑍃𑌤 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌲𑌾𑌂
𑌭𑌕𑍍𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌰𑍇𑌣𑍁𑌂 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌮𑍀𑌡𑍇॥

தமேவமத்வா பரவாசுதேவம்
ரங்கேசயம் ராஜ வதர்ஹணீயம்
ப்ராபோதகீம் யோக்ருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரி ரேணும் பகவந்த மீடே.

பரவாசுதேவமேவ - பரமபதத்தி லெழுந்தருளி யிருக்கிற வாசுதேவனுகவே
தம்-அப்படிப்ரஸித்தனுய்
ரங்கேசயம்-(இப்பொழுது) ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டிருக்கிற ரங்காநதனையே
ராஜவத்-ராஜாவைப்போல்
அர்ஹணீயம்-பூஜநீயராக
மத்வா-எண்ணி

யஃ-எந்த தொண்டரடிப்பொடி யாழ்வரீர்
ப்ராபோதகீம்-எழுப்புகிற
ஸூக்திமாலாம்-பாசுரங்களை
அக்ருத-செய்தாரோ
பகவந்தம்-பூஜ்யரான
தம்-அந்த
பக்தாங்கிரிரேணும் - தொண்டரடிப்பொடியாழ்வாரை
ஈடே-ஸ்தோத்ரம் பண்ணுகிறேன்

(தா - ம்) பரமபதத்தி லெழுந்தருளியிருக்கிற பாவாசுதேவன் இப்பொழுது ஸ்ரீரங்கத்தில்வந்து ரங்கநாதனுய்க் கண் வளர்ந்தருள அவனைப் பள்ளியுணர்த்துகைக்காகத் திருப்பள்ளி யெழுச்சி யென்னும் திவ்யப்ரபந்தத்தைச் செய்தருளின தொண்டரடிப் பொடியாழ்வாரைநான் ஸ்த்தோத்ரம்பண்ணுகிறேன்

மண்டங்குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்
தொண்டரடிப்பொடி தொன்னகரம் - வண்டு
திணர்த்தவயற்றென்னரங்கத் தம்மானைப்பள்ளி
உணர்த்தும் பிரானுதித்தவூர்.

மாமறையோர் - மஹத்தானவேதாந்தங்களையறிந்த பெரியோர்கள்
வண்டு-வண்டுகள்
திணர்த்த-மதுபானம்பண்ணுகைக்காக நெருங்கிவர்த்திக்கிற
வயல் - வயல்களாலேசூழப்பட்ட
தென்-சுந்தரமான
அரங்கத்து-ஸ்ரீரங்கத்தில் கண்வளர்ந்தருளுகிற [ளை
அம்மானை-ஸ்வாமியானரங்கநாத
பள்ளியுணர்த்தும் - திருப்பள்ளியெழுப்பின

பிரான்-உபகாரகரான
மன்னிய-பொருந்திய [ரான
சீர்-கல்யாணகுணங்களையுடைய
தொண்டரடிப்பொடி-தொண்டரடிப்பொடியாழ்வார்
உதித்த-திருவவதரித்த
ஊர்-திவ்யதேசமானது
தொல்நகரம்-அநாதிபட்டணமானது [ன
மண்டங்கொடி என்பர்- திருமண்டங்குடியென்று சொல்லுவர்கள்.

(தா - ம்.) ஸகலஸம்பத்பரிபூர்ணரான திருவரங்கத்தில் பள்ளிகொண்ட பெரியபெருமாளைத் திருப்பள்ளி யுணர்த்தின தொண்டரடிப் பொடியாழ்வா ரவதருத்தரிளின திருமண்டங் குடியைப் பெரியோர்கள் தினந்தோறு மநுஸந்திப்பார்கள்.

(அவ) இத்தொண்டரடிப்பொடியாழ்வார், முன்பு கேவலம் ப்பிரச்ருநராயிருந்து, அநந்தரம் பெரியபெருமாள் விசேஷ கடாக்ஷம்பெற்று மஹாஜ்ஞாநாதிகராய், பரம பாகவதோத்தமராய்க்கொண்டு. தன்னைத் திருத்திபருளின பெரிய பெருமாளிடத்திற் க்ருதஜ்ஞதையாலே அவரை ஸாக்ஷாத்தாக ஸேவிக்கக்கருதி திருவரங்கத்திலே சென்று அடிபணிந்துநிற்கப் பெரியபெருமாள், தம்மை அழைத்தல் அணைத்தல் செய்யாமையைக்கண்டு இவர் நம்மைத்திருத்த இந்நாள் முயற்சிசெய்து நம்மைத்திருத்தி இப்போது அவ்விடாயாறக் கண்வளர்த்தருளுகிறார் என்று நினைத்துத் திருப்பள்ளி யுணர்த்துகிறார்.

கதிரவன்குணதிசைச் சிகரம்வந்தணைந்தான், கனவிருளக ன்றது காலையம்பொழுதாய், மதுவிரிந்தொழுகின மாமலரெல் லாம், வானவரரசர்கள் வந்துவந்தீண்டி, எதிர்திசை நிறைந்தன ரிவரொடும் புகுந்து, யிருங்களிற்றீட்டமும்பிடி யொடுமுரசும், அதிர்தலிலலைகடல்போன் றுளதெங்கும், அரங்கத்தம்மாபள்ளி யெழுந்தருளாயே

கதிரவன்-சூரியனானவன்
குணதிசை-கிழக்குதிக்கிலே
சிகரம்-உதயகிரியிலே
வந்தணைந்தான்-வந்துகூடினன்
கனவிருள்-(இராத்திரியில்) மிக் கிருந்த இருளானது
அகன்றது- (ஸவாஸமாகப்) போ யிற்று. திருவாராதனம் செய் கைக்கு உத்யோகிக்கக் கடவ தான
அம்-அழகிய [வர
காலைப்பொழுதாய்-உதயகாலம்
மா-பெரிய
மலரெல்லாம்-புஷ்பங்களெல்லா
விரிந்து-விகஸிதமாய் [ம்
மதுஒழுகின-தேன்வெள்ளமிடா நின்றன
வானவர்-தேவர்களும்
அரசர்கள்-இராஜாக்களும்
வந்துவந்து - ஒருவர்க்கொருவர் முற்கோலிவந்து
ஈண்டி-திரண்டு
எதிர்திசை - திருக்கண்ணோக்கா ன தெற்குத்திக்கிலே [ள்
நிறைந்தனர்-நிறைந்துநின்றார்க
இவரொடும்-தேவதைகளோடும் ராஜாக்களோடும்
புகுந்த-பிரவேசித்திருக்கின்றன
இருங்களிற்றீட்டமும்-பெரிய ஆண்யானைத்திரள்களும்
பிடியோடு - பெண்யானைத்திரள் களும்
முரசும்-பேரிகைகளும்
அதிர்தலில்-சப்திக்கும்போது
எங்கும்-எல்லாத்திக்குக்களிலும்
அலை-அலையெறியாநின்ற
கடல்போன்றுளது-ஸமுத்ரகோ ஷத்தையொத்திருந்தது ஆத லால்
அரங்கத்தம்மா-திருவரங்கச்செல் வனான தேவரீர்
பள்ளியெழுந்தருளாய்-திருப்பள் ளியுணர்ந்தருளிக் கடாக்ஷித்த ருளவேணுமென்கிறார்.

(தா - ம்.) திருவரங்கத்தில் கண்வளர்ந்தருளுகிற என் னுடையநாதனே! இப்பொழுது ஸூர்யோதயமாய்விட்டது. இருள்நீங்கிவிட்டது எழுந்திருக்கும் காலமாய்விட்டது. பூக் களலர்ந்து தேன்கள் பெருகாநின்றன, தேவர்களும் ராஜாக்க ளும்தேவரீரை ஸேவிக்கைக்காகநடந்து திருமுன்பேநின்றார்கள்

அவர்களுடன் வந்த யானைகளும் பேரீ வாத்யங்களும் கடல்போலே கோஷிபாநின்றன. ஆகையால் தேவரீர் பள்ளியெழுந்தருள வேணும்.

கொழுங்கொடி முல்லையின் கொழுமலரணவிக், கூர்ந்தது குணதிசைமாருதமிதுவோ, எழுந்தனமலரணைப் பள்ளிகொண்டன்னம் ஈன்பனிநனைந்ததம்மிருஞ் சிறகுதறி, விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய், வெள்ளெயிறுறவதன் விடத்தினுக் கனுங்கி, அழுங்கியவானையி னருந்துயர் கெடுத்த, அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே.

கொழு-செழுமையான ஸம்ச்ருத்தமான-வென்றபடி
முல்லையின்கொடி-முல்லைக்கொடியினுடைய
கொடி-சத்யோவிகஸிதமான
மலர்-புஷ்பங்களை
அணவி-தடவிக்கொண்டு
குணதிசைமாருதம்-கிழக்குத்திக்கின் காற்றானது
கூர்ந்ததுவிஞ்சியது-கூறுகைமிகுகை
இதுவோ-என்று
அந்தரங்கர் வந்தவர்களைக் காட்டுமாபோலே ஹஸ்தநிர்த்தேசத்தாலும் உக்தி வைலக்ஷண்யத்தாலும் காட்டினபடி
மலரணைப் பள்ளிகொண் டன்னம்-மலர்தாமரபுஷ்பமாகிற
அணை-படுக்கையிலே
பள்ளிகொண்டு-நித்திரைசெய்துகொண்டிருக்கிற
அன்னம்-ஹம்ஸமிதுநங்கள்
ஈன்-சொரிகிற வென்னுதல் உண்டானவென்னுதல்
பனி-பனியாலே
நனைந்த-நனைந்திருக்கிற
தம்-தங்களுடைய
இரு-பெரிய
சிறகு-பக்ஷங்களை
உதறி-சிலிர்த்துக்கொண்டு
எழுந்தன-விடிவுகண்டுணர்ந்தன
விழுங்கிய-காலைப்பிடித்து விழுங்காநின்றுள்ள
முதலையின்-நக்ரத்தினுடைய
பிலம்-பிலத்வாரத்துக்கு பர்தாளத்துக்கென்றபடி
புரை-ஸத்ருஸமான [ன
பேழ்வாய்-பிளந்தவாயிலுண்டா
பேழ்வாய்-பெரியவா யென்னலுமாம்
வெள்-வெளுத்த
எயிறு-தந்தங்களானவை
உற - ப்ராணனைப்பிடித்த பிடியிலே முடிக்கும்படிபற்ற
அதன்-அந்தப்பல்லினுடைய
விடத்தினுக்கு-விஷத்துக்கு
அனுங்கி-துவக்குண்டு
அழுங்கிய-நோவுபட்ட
ஆனையின் - ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய

அரு-தன்னாற்போக்கிக் கொள்ளவரிதான வென்னுதல்
துயர்-துக்கத்தை
கெடுத்த-போக்கினவனை
அரங்கத்தம்மா-கோயிலுக்கு நிர்வாஹகனானஸ்வாமி
பள்ளியெழுந்தருளாயே-நீ திருப்பள்ளி யுணர்ந்தருளவேண்டும்

(தா - ம்.) முன்பொருகால் முதலையானது, கஜேந்த்ராழ்வானுடைய காலைக் கவ்வி பாதாளம்போய் அதிபயங்கரமான தன் வாயிலுள்ள பற்களினால் விஷமுறக் கடித்த வளவில், அவ்வானையின் பெருந்துயரை நீக்கினரங்கநாதனே! முல்லைப்பூக்கள் ஸூர்யகிரணத்தினா லுலர்ந்து அதில் நின்றும் பெருகும் தேனினை யளாவிக்கொண்டுவந்து கீழ்காற்றானது வீசாநின்றது. தாமரை மலர்களில் படுத்திருந்த ஹம்ஸபக்ஷிகள் உதயமானவளவே ராத்திரி பனியினால் நனைந்த தன்சிறகுகளை யுதறிக்கொண்டு எழுந்திருந்தன. ஆகையால் தேவரீர்பள்ளி யுணர்ந்தருளவேண்டும்.

சுடரொளிபரந்தன சூழ்திசை யெல்லாம், துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப், படரொளி பசுத்தனன் பனிமதியிவனோ, பாயிருளகன்றது பைம்பொழிற்கமுகின், மடலிடைக்கீறி வண்பாளைகணாற, வைகறைகூர்ந்தது மாருதமிதுவோ, அடலொளிதிகழ்தரு திகிரியந்தடக்கை, அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே.

சூழ்திசையெல்லாம்சூழ்-சூழ்ந்த
திசை-திக்குகள்
எல்லாம்-ஸமஸ்தமும்
சுடர்-ஆதித்யனுடைய
ஒளி-தேஜஸ்ஸானது
பரந்தன-விஸ்த்ருதமாய்த்தன இப்படி-ஆதித்யனுதயமாகவே
பனிமதியிவனோ-இந்தக்குளிர்ந்த சந்த்ரனென்றுநினைத்தேசிக்கை
துன்னிய-நெருங்கின
தாரகை-நக்ஷத்ரங்களினுடைய
மின்னொளி-மிக்கதேஜஸ்ஸான
சுருங்கி-குறைந்து
படரொளி-படர்வ்யாபியாகன்றது
ஒளி-பிரகாசம்
பசுத்தனன்-தானும்பசலை நிறமுண்டாய் வைவர்ண்யத்தை யடைந்தான்
பாய்-பரவிய
இருள்-அந்தகாரம்

அகன்றது-நிரஸ்தமாயிற்று
பைம்பொழில்-கமுகின்
பைம்பொழில் - ஜலஸம்ருத்தியாலே பசுமையையுடைய பொழிலிலிருக்கிற
கமுகின் - க்ரமுகவ்ருக்ஷங்களிலுண்டான
பைம்பொழிற்கமுகின் - கமுகின் பைம்பொழிலென்று அந்வயித்தும் பசுத்தகமுகஞ் சோலையிலுண்டான வென்னவுமாம்
மடல்-ஓலையினுடைய
இடை-மத்யத்திலிருக்கின்றனவாய்
வள்கீறி-உதாரமாய்விகஸிதமாய்
பாளைகள்-குச்சங்களினுடைய
நாற-பரிமளமானது உண்டாகும்படி
வைகறை-விடியற்காலத்தில்
மாருதம்-காற்றானது
கூர்ந்தது-விஞ்சியது
கூருகை-மிகுகை
இதுவோ-இதுவோவென்று நிர்த்தேசமாகையால்
அடர்-மிடுக்கையுடைத்தான
ஒளி-தேஜஸ்ஸானது
திகழ்தரு-ப்ரகாசியாநிற்கிற
திகிரி-திருவாழியால்வந்த
அம்-அழகையுடையதாய்
தடம்-விசாலமான
கை-திருக்கைகளையுடைய
திருவாழியைச்சொன்னது - பாஞ்சஜந்யத்துக்கும் மற்றுமுள்ள திவ்யாயுதங்களுக்கு முபலக்ஷணம்
அரங்கத்தம்மா-கோயிலுக்கு நிர்வாஹகனனஸ்வாமி
பள்ளியெழுந்தருளாயே-நீதிருப்பள்ளியுணர்ந்தருளவேண்டும்.

(தா - ம்.) அத்யுஜ்வலமான திருவாழியை யழகிய திருக்கையிலேந்தின அழகிய மணவாள நாயனே! ஸூர்யகிரணங்களெங்கும் வ்பாபித்தன. சந்திரனும் நக்ஷத்ரங்களும் ஒளி மழுங்கிப்போயின. இருள் பூமியில் நின்று மகன்றது. அழகிய பாக்குச் சோலைகளில் பாளைகளலர்ந்து இலைவழி யேமதுவெள்ளமிட அதையணைந்து விடியற்காலத்தில் வீசும் காற்றானது எங்கும் வ்யாபித்தது. ஆகையால் தேவரீர் திருப்பள்ளி யுணர்ந்தருளவேணும். (3)

மேட்டிள மேதிகள் தளைவிடுமாயர்கள் வேய்ங்குழலோசையும் விடைமணிக்குரலும், ஈட்டியவிசைதிசை பரந்தனவயலுள், இரிந்தன சுரும்பினம் இலங்கையர்குலத்தை, வாட்டிய வரிசிலை வானவரேறே, மாமுனிவேள்வியைக் காத்தவபிரதம், ஆட்டிய வடுதிற லயோத்தியெம்மரசே, அரங்கத்தம்மாபள்ளியெழுந்தருளாயே.

மேடு-உயர்ந்த
இளமேதிகள் - இளங்கன்றுனள ருமைகளை
தளை-கட்டை
விடும்-அவிழ்த்து விடுகையே ப்ர யோஜநமென் றிருக்கிற
ஆயர்கள்-கோபாலர்களுடைய
வேய்ங்குழல் - வேணுவினுடைய குழலிலுண்டான
ஓசையும்-இராகமும்
விடை-நாகுகளின் மேலே செருக்கியோடுகிற வ்ருஷபங்களினுடைய
மணி-கழுத்திலே கட்டிய கண்டையினுடைய
குரலும்-ஓசையும் [சையானவை
ஈட்டியஇசை-இந்தத்திரண்ட ஓ
திசை-திக்கெங்கும்
பரந்தன-வ்யாபித்திருக்கின்றன
சுரும்பு இந்தக்குழலினோசையும் மணியினோசையுங்கேட்ட வண்டுகளினுடைய
இனம்-கூட்டங்களானவை
வயலுள்-பழனங்களுக் குள்ளிருக்கிற தாமரை செங்கழுநீரில் நின்றுமெழுந்து
இரிந்தன-சிதறி ஓடின
இலங்கையர்-இலங்கையிலுண் டான ராக்ஷஸருடைய
குலத்தை-கூட்டங்களை
குலத்தை யென்கிற ஒருமையை இலங்கையரென்கிற பன்மையாலே கூட்டங்களை யென்று யோஜிப்பது
வாட்டிய-வாடப்பண்ணின தத்தப்பண்ணின வென்றபடி
வரிசிலை-வரிகட்டுக்களையுடைய
சிலை-தநுஸ்ஸையுடையனாய்
வானவர்-நித்ய ஸூரிகளுக்கெல்லாம்
ஏறே-நிர்வாஹக னானவனே
அன்றிக்கே இலங்கையர் குலத்தை வாட்டிய வரிசிலை-இலங்கையர் குலத்தை வரிசிலை வாட்டியவெனவைத்து இலங்கையி லுண்டான ராக்ஷஸக் கூட்டங்களை வில்லாலே நிரவித்தவனென்னவுமாம்
தநுஸ்ஸாலே என்றது-பாணங்களினாலே யென்றபடி
மா-மஹாத்மாவான
முநி-விசுவாமித்ரருடைய
வேள்வியை-யாகத்தை
காத்து-ரக்ஷித்து
அவபிருதம்-அவப்ருதஸ்நாநத்தை
ஆட்டி-பண்ணுவித்து
அவ்வடுதிறல்அவ்-அந்த ப்ரதிபதங்களை அடு முடிக்கைக் கடியான
திறல்-வல்லமையுடையனாய்
அயோத்திஎம் - அயோத்திக்கும் எமக்கும்
அரசே நிர்வாஹகனானவனே
அரங்கத்தம்மா-கோயிலுக்கு நிர்வாஹகனான ஸ்வாமி
பள்ளியெழுந்தருளாயே-நீ திருப்பள்ளி யுணர்ந்தருளவேண்டும்.

(தா - ம்.) முற்காலத்தில் லங்காவாசிகளான ராக்ஷஸரை ஸமூலமாக வெரித்த சதுர்சாரியான தேவாதிதேவனே! விஸ்வாமித்ரனுடைய யஜ்ஞத்தைக் காத்துப் பூர்த்திசெய்வித்த மிடுக்

கனே! அயோத்யாவாசிகளுக்கும் எங்களுக்கும் கோவானவனே! உயரமாக வளர்ந்த ஒருமைக்கன்றுகளைக் கட்டவிழ்த்துவிட்டு மந்தையில் சேர்த்துக் குழலூது மிடையருடைய குழலோசையும், திக்குகளெங்கும் பரவின. வண்டுகள் கண்விழித்து வயல்களில் பறந்தோடிப்போயின. ஆகையால் திருக்கண்கள் விழித்தருளவேணும். (4)

புலம்பினபுட்களும் பூம்பொழில்களின்வாய், போயிற்றுக் கங்குல் புகுந்ததுபுலரிக், கலந்தது குணதிசைக்கனைகடலரவம், களிவண்டுமிழற்றிய கலம்பகம்புனைந்த, அலங்கலந்தொடையல் கொண்டடியிணைபணிவான், அமரர்கள்புகுந்தன ராதலினம்மா, இலங்கையர்கோன் வழிபாடுசெய்கோயில், எம்பெருமான்பள்ளி யெழுந்தருளாயே.

பூம்பொழில்களின்-பூ-புஷ்பங்களாலே நிறைந்த அன்றியே
பூ-அழகிய வென்னவுமாம்
பொழில்களின்-சோலைகளின்
வாய்-இடத்திலேயிருந்து
புட்களும்-பக்ஷிகளும்
புலம்பின-த்வநிக்கின்றன
கங்குல்-ராத்ரியானது
போயிற்று-நீங்கிற்று
புலரி-பகற்காலம்
புகுந்தது-ப்ரவேசித்தது
குணதிசை-கீழ்த்திக்கிலே
கனை-கோஷிக்கிற
கடல்-ஸமுத்ரத்தினுடைய
அரவம்-த்வநியானது
கலந்தது-வ்யாபித்தது
களிவண்டு மிழற்றிய
களி-மதுபானத்தைப் பண்ணிக்களிக்கிற
வண்டு-ப்ரமரங்கள்
மிழற்றிய-சப்திக்கின்றன

கலம்பகம்-புனைந்த
கலம்பகம் - நாநாவித புஷ்பங்களாலே
புனைந்த-தொடுத்ததாய்
அலங்கல்-அசையா நிற்பதாய்
அம்-மழகிய
தொடையல்-மாலையை
கொண்டு-மிகவும்அபிநிவேசத்துடனேந்திக்கொண்டு
அடி-திவருடிகள்
இணை-இரண்டையும்
பணிவான்-மாலைகளை அலங்கரித்து வணங்குகைக்காக
அமரர்கள்-தேவர்கள் [ர்கள்
புகுந்தனர்-ப்ரவேசித்து நிற்கிரு
ஆதலின்-ஆகையால்
அம்மா-ஸர்வஸ்வாமியானவனே
இலங்கையர்-இலங்கா வாஸிகளுக்கு
கோன்-தலைவனை விபீஷணாழ்
வழிபாடு-வழிபாட்டை [வான்

செய்-செய்கிற
கோயில்-ஸ்ரீரங்கத்திலே யெழுந்தருளியிருக்கிற
எம்பெருமான் - எமக்கு ஸ்வாமியானவனே
பள்ளியெழுந்தருளாயே-நீ திருப்பள்ளியுணர்ந்தருளவேண்டும்.

(தா – ம்.) லங்காதிபனான விபீஷணாழ்வான் வந்து கைங்கர்யம் பண்ணுகைக்குப் பாங்காகக் கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிற வென் ஸ்வாமியே! பொழுது விடிந்தது, சோலைகளில் பக்ஷிகள் கூவுகின்றன, கடலோசை மிக்குவாராநின்றது. தேவர்கள், தேவரீருக்கு ஸமர்ப்பிக்கைக்காக அழகிய மாலைகளை யேந்திக்கொண்டு வந்து நின்றார்கள், ஆகையால் தேவரீர் திருப்பள்ளி யுணர்ந்தருளவேணும். 5

இரவியர் மணிநெடுந்தேரொடுமிவரோ, இறையவர் பதினொருவிடையருமிவரோ, மருவியமயிலின னறுமுகனிவனே மருதரும்வசுக்களும் வந்துவந்தீண்டி, புரவியோடாடலும் பாடலும்தேரும், குமரதண்டம் புகுந்தீண்டிய வெள்ளம், அருவரையனைய நின்கோயின்முன்னிவரோ, அரங்கத்தம்மாபள்ளி யெழுந்தருளாயே.

இரவியர்-துவாதசாதித்யாகள்
மணி-அழகிய
நெடு-பெரிய
சிரேஷ்டமான வென்றபடி
தேரோடும்-ரதங்களோடே கூட வந்தார்கள்
இவரோ-இவரோ என்று ஹஸ்த நிர்தேசம்
இறையவர்-ஜகத்துக்கு நிர்வாஹகர்களான
பதினொரு ஏகாதச ருத்ரர்களும்
இவரோ-இவரோ என்று ஹஸ்த நிர்த்தேசம்
மருவியமயிலினன்-மயூர வாஹனத்தைக் கிட்டின
னும்
அறுமுகன்-ஷண்முகனான புத்ர
இவனே-இவனே என்று ஹஸ்த நிர்த்தேசம்
ருத்கணங்களும்
மருதரும் - நாற்பத்தொன்பதும
வசுக்களும்-அஷ்டவசுக்களும்
வந்து வந்து ஈண்டி-வந்து வந்து நெருங்கி
புரவியோடு-கீழ்ச் சொன்னவர்களுடைய வாஹனங்களோடெ
ன்னுதல் [னுதல்
தேரில் பூட்டிய குதிரை யென்
ஆடலும்-ந்ருத்தஞ் செய்தலும்
பாடலும்-கீர்த்தநஞ்செய்தலும்
தேரும்-தங்கள் தங்கள் ரதங்க

ளும் உடையனவாய்
குமரதண்டம் புகுந்து-தேவஸே
நா ஸமூஹங்கள்வந்து புகுந்து
ஈண்டிய-திரண்ட
வெள்ளம்-நால்வரிருவரன்றியே
அநேகங் கூட்டங்கள் [ரைக்கு
அருவரை-செம்பொனாகிய அருவ
அனைய-ஒத்த
நின்-தேவரீருடைய
கோயில்-ஸந்நிதியில்
முன் இவரோ-முன்னே
எல்லாருந் திரண்டுவந்து நின்
றூர்கள்.
அரங்கத்தம்மா பள்ளியெழுந்தரு
ளாயே-கோயிலுக்கு நிர்வாஹ
கனான ஸ்வாமியே தேவர் திரு
ப்பள்ளி யுணர்ந்தருளிக் கடா
க்ஷிக்க வேண்டும்.

(தா-ம்.) திருவரங்கத்தில் பள்ளிகொண்ட ஸ்வாமியே! பன்னிரண்டு ஆதித்யர்களும், பதினொரு ருத்ரர்களும், ஸுப்பிரமண்யனும் எழுமருத்துக்களுட் எட்டு வஸுக்களும் தேர், ருஷபம், மயில் முதலாகிய தங்கள் தங்கள் வாகநங்களின் மேலேறி ஸமஸ்த பரிவாரங்களுடனே வந்து நெருங்கி நின்று தேவரீர் ஸந்நிதி முன்பே ஆடவும் பாடவும் செய்து தேவரீர் கடாக்ஷத்தை யெதிர்பார்க்கிறூர்கள். ஆகையால் அவர்களைக் கடாக்ஷிக்கைக்காகத் திருப்பள்ளி யுணர்ந்தருள வேணும். 6

அந்தரத்தமரர்கள் கூட்டங்களிவையோ அருந்தவமுனி வரு மருத்தருமிவரோ, இந்திரனானையும் தானும்வந் திவனே, எம்பெருமானுன கோயிலின்வாசல், சுந்தரர் நெருக்கவிச்சாதரர் நூக்க. இபக்கரும் மயங்கினர் திருவடித்தொழுவான், அந்தரம் பாரிடமில்லை மற்றிதுவோ, அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே.

அந்தரத்து-ஆகாசத்தில்
தேவலோகத்தில்-என்றபடி [ய
அமரர்கள்-தேவதைகளினுடை
கூட்டங்கள்-ஸமூஹங்கள்
இவையோ-இவைகளும்
அரு-பெறுதற்கரிய
தவமுனிவரும்-தபோநிஷ்டரான
முனிவர்களும்
மருதரும்-மருத்தேவதைகளும்
இவரோ இவர்களும்
இந்திரன்-தேவேந்த்ரனானவன்
ஆனையுந்தானும் வந்து - தன்னு
டைய வாஹநமான ஐராவதமுந்
தானுமாக வந்துநின்றான்
இவனே-இவனே என்றுஹஸ்த
நிர்த்தேசம்

எம்பெருமான்-எனக்கு ஸ்வாமி யான
உன் - உனனுடைய
கோயிலின்வாசல்-திருவாசலிலே வந்தார்களென்று கீழே அந்வ
சுந்தரர்-கந்தர்வர் [யம்
நெருக்க-சரீரத்தோடுசரீரம்நெரு
விச்சாதரர்-வித்யாதரர் [க்க
நூக்க-தள்ள
இயக்கரும்-யக்ஷர்களும்
மயங்கினர்-நின்றனர்

திருவடிதொழுவான்-தேவர்திரு வடிகளை வணங்குகைக்கு
அந்தரம்-ஆகாசத்திலும்
பார்-பூமியிலும்
இடமில்லை-இடமில்லாமல்
மற்றிதுவோ-தேவர் ஸந்நிதியே யிடமாகவந்தார்கள்
அரங்கத்தம்மா பள்ளியெழுந்தரு ளாயே-கோயிலுக்கு நிர்வாஹ கனுனவனே நீ பள்ளியுணர்ந் தருளவேண்டும்.

(தா - ம்.) திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்வாமியே! ஆகாசத்தில் கூட்டம் கூட்டமாக தேவர்களும் ஸப்தரிஷிகளும் வந்து நின்றார்கள், இந்த்ரனும் ஐராவதத்தின் மேலேறி வந்து இதோ நின்றான்; தேவரீர் ஸந்நிதி வாசலில் தேவரீரை சேவிக்கைக்காக வந்து கந்தர்வர்கள் இடமில்லாமலே நெருக்குகிறார்கள். வித்யாதரர் தள்ளுகிறார்கள்; யக்ஷர்கள் அந்த நெருக்குப் பொறுமே மோஹித்தார்கள், இப்படி ஆகாசமும் பூமியும் இடமில்லாமல் நிறைந்து விட்டது, அவர்களுக்கு ஓலக்கம் கொடுக்க வெழுந்தருள வேணும். 7

வம்பவிழ்வானவர் வாயுறைவழங்க, மாநிதிகபிலையொண் கண்ணாடிமுதலா, எம்பெருமான்படி மைக்கலம்காண்டற், கேற்பனவாயின கொண்டுநன் முனிவர், தும்புருநாரதர் புகுந்தனரிவரோ தோன்றினனிரவியுந் துலங்கொளி பரப்பி, அம்பரதலத்தில் நின்றகல்கின்ற திருள்போய், அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே.

வம்பவிழ்-வம்பு பரிமளமானது
அவிழ்-புஷ்பஜாதியினின்றும் அவிழ்ந்துவீசுகிறவானவர்-தேவ லோக வாசிகளான தேவர்கள்
வாயுறை-அறுகம்புல்

விசேஷண மாக்கவுமாம்
வழங்க-கொடுக்க
மாநிதி
மா-மஹத்தான [தல்
நிதி-சங்கநிதி பத்மநிதி யென்னு

மாநிதியென்று மஹார்க்கமென்றுதல்
இவைகளும்
கபிலை-பசுக்களும்
ஒண்-ஒள்ளிய
ஸ்லாக்கியமான வென்றடி
கண்ணடிமுதலா-முதலானவை யெல்லாம்படிமைக்கலம்எம்பெருமான்-எமக்கு நிருபாதிகஸ்வாமியானவனே
காண்டற்கு ஏற்பன ஆயினகொண்டு-உன்னைக் காண்கைக்குஉனக்கு ஸத்ருஸ மானவற்றைத் தங்கள் தங்கள் கையிலேந்திக்கொண்டு
நன்முனிவர்-நல்லமுனிவரும்
தும்புரு-தும்புருவும்
நாரதன்-ஸ்ரீநாரதபகவானும்
இவரோ-இவர்களெல்லாம்
புகுந்தனர்-வந்து நின்றூர்கள்
இரவியும்-சூரியனும்
துலங்கொளி - மிக்கதேஜஸ்ஸை பரப்பி
விஸ்தரிப்பித்துக்கொண்டு
தோன்றினன் – வந்து தோன்றினன்
இருள்-அந்தகாரமானது
அம்பரத்தலத்தினின்று - ஆகாசத்திலும் ஸஞ்சரிக்க வொண்ணதபடி
போய்-நசித்துப்போய்
அகல்கின்றது-நிரஸ்தமாயிற்று
அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே-ஆதலால் கோயிலுக்கு நிர்வாஹகனானவனே நீபள்ளியுணர்ந்தருளவேண்டும்.

(தா-ம்.) தேவரீர் பள்ளியுணர்ந்தருளும்போது மங்களத்ரவ்பங்களை நாண்பிக்கைக்காக தும்புருவும், நாரதரும், மற்றுமுள்ள தேவர்களும், அறுகம்புல், சங்கநிதி பத்மநிதி, காமதேனு ஸ்படிகமயமான பூர்ணகும்பங்கள் முதலானவற்றை யேந்திக்கொண்டு வந்து இந்தா நிற்கிறூர்கள். சூர்யோதயமாய் விட்டது. இருள் நீங்கி வெளிச்சமெங்கும் பரவிற்று. ஆகையால் தேவரீர் பள்ளி புணர்ந்தருள வேணும். 8

ஏதமில் தண்ணுமை யெக்கம்மத்தளி, யாழ்குழல் முழவமோடிசைதிசை கெழுமிக், கீதங்கள் பாடினர் கின்னரர்கருடர் கந்தருவரு மிவர்கங்குலு வெல்லாம், மாதவர் வானவர் சாரணரியக்கர், சித்தரு மபங்கினர் திருவடித்தொழுவான், ஆதலினவர்க்கு நாளோலக்க மருள அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே.

ஏதம்-குற்றம்
இல்-இல்லாதிருக்கிற
தண்ணுமை-சிறு பறையும்
எக்கம்-ஏகதந்த்ரி என்றுமாம்
மத்தளி-சிறுமத்தளியென்ன
யாழ்-வீணையென்ன
குழல்- புல்லாங்குழலென்ன
முழவம்-பெருமத்தளமென்ன
பெருவாயனென்னவுமாம்
ஒடு - இவற்றிலுண்டான
இசை-நாதங்களானவை
திசை-திக்குகளெங்கும்
கெழுமி-உண்டாகி
கங்குலுமெல்லாம்-ராத்திரி காலங்களிலுமெல்லாம்
கீதங்கள்பாடினர்-கீதங்களைப்பாடினார்
கின்னரர்-கின்னரர்கள்
கருடர்-கருடர்கள்
கந்தருவருமிவர்-கந்தர்வர்களுமாகிய இவர்கள்
மாதவர்-மஹத்தான தவத்தையுடைய ருஷிகள்
வானவர்-வைமாநிகரான தேவர்கள்
சாரணர்-சாரணர்கள்
இயக்கர்-யக்ஷர்
சித்தரும்-சித்தரும்
திருவடி-தேவரீர் திருவடிகளை
தொழுவான்-ஸேவிக்கைக்கு
மயங்கினர் மோஹித்து நிற்கிறார்கள்
ஆதலில்-ஆகையால்
அவர்க்கு-கீழ்ச் சொன்னவர்களுக்கு
நாள்-ப்ராதக் காலத்திலே
ஒலக்கம்-திருவோலக்கம்
அருள்வான்-வாழும்படி க்ருபை செய்ய
அரங்கத்தம்மாபள்ளி யெழுந்தருளாயே-கோயிலுக்கு நிர்வாஹகனானவனே நீ திருப்பள்ளியுணர்ந்தருளவேண்டும்.

(தா-ம்.) ஓ! அரங்கநாதனே! கின்னரர், கருடர், கந்தர்வர், யக்ஷர், சாரணர், ஸித்தர், தேவரிஷிகள் முதலான மற்றுமுள்ள தேவர்களெல்லாம், வீணை, புல்லாங்குழல், மத்தளம், தாளம், சிறுபறை முதலிய வாத்யங்களுடன் செவிக்கின்பமாகவும் திசைகளெங்கும் வ்யாபிக்கும்படியாகவும் இரவெல்லாம் பாடி தேவரீரைத் திருவடித்தொழ வந்துநின்றார்கள், ஆதலால், அவர்களுக்குத் திருவோலக்கம் கொடுக்கைக்காகத் திருப்பள்ளி யுணர்ந்தருள வேணும். 9

கடிமலர்க்கமலங்கள் மலர்ந்தன விவையோ, கதிரவன் கனைகடல் முளைத்தன னிவனோ, துடியிடையார்சுரி குழல்பிழிந்துதறித் துகிலுடுத்தேறினர்சூழ்புனலரங்கா, தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள்தொண்ட

ரடிப் பொடியென்னும், அடியனை யளியனென் றருளி யுன்னடியார்க், காட்படுத்தாய் பள்ளியெழுந்தருளாயே.

கடி-வாசனையையுடைய
கமலங்கள் - தாமரை புஷ்பங்கள்
மலர்ந்தன-நன்றுகமலர்ந்தன
இவையோ - தேவர் பார்த்தருள வேண்டுமென்று நிர்த்தே சிக்கை
கதிரவன்-ஆதித்யனனவன்
கனை-கம்பீரமான
கடல்-ஸமுத்திரத்தில் நின்றும்
முளைத்தனன்-உதித்தான்
இவனோ - இவனை வினவியருள வேண்டுமென்று நிர்த்தேசம்
துடி-உடுக்கைப்போலிருந்துள்ள
இடையார் - மத்யத்தை யுடைய ஸ்த்ரீகளானவர்கள்
சுரி-சுருண்டிருக்கிற
குழல்-கேசங்களை
பிழிந்து-ஸ்நாநஞ்செய்துபிழிந்து
உதறி-உதறி
துகில்-வஸ்த்ரங்களை
உடுத்து - தங்களரையிலே தரித்துக்கொண்டு
ஏறினர்-வந்தார்கள்
சூழ்புனல்சூழ்-சூழ்ந்துவ்யாபித்திருக்கிற
புனல்-ஜலஸம்ருத்தியையுடைய,
காவேரியையுடைய
அரங்கா-ஸ்ரீரங்கஸ்த்தல வாசியானவனே

தொடையொத்த துளவமும்-தேவர்க்கு தகுந்த திருத்துழாய் மாலையும்
கூடையும்-மாலைக் காதாரமான குடலையும்
பொலிந்து - மாலையுங் குடலையுமாய்ப் பொலிந்து ப்ரகாசித்தென்றபடி
தோன்றிய-உண்டான
தோள்-புஜங்களையுடையவனும்
தொண்டர் - அடியாரான ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய
அடி.-திருவடிகளிலுண்டான
பொடியென்னும் - ரேணுவென்கிற பேரையுடையனை
அடியனை - தாசபூதனை வென்னை
அளியனென்று - ஸ்னேஹிதனென்று
அருளி-கிருபைபண்ணி
உன்-உன்னுடைய
அடியார்க்கு-தாஸர்களுக்கு
ஆட்படுத்தாய்-தாஸ்யத்திலே நிலைநிறுத்தினவனே யென்று முன்னிலை
பள்ளியெழுந்தருளாயே-நீ திருப்பள்ளி யுணர்ந்தருளிக் கடாக்ஷித்தருளவேண்டும்.

(தா - ம்.) சோலை சூழ்ந்த திருவரங்கத்தில் கண்வளர்ந்தருளுகிற ஸ்வாமி! புஷ்பங்கள் அலர்ந்து பரிமளம் வீசுகின்றது. சூரியனும் உதித்து விட்டான், நுண்ணிடையாரான ஸத்ரீகளும் ஸ்நாநம் செய்து மயிரை யுதறி வஸ்திரத்தையணிந்து

கரையேறினார்கள்; தேவரீருக்குச் சாத்துகைக்காகத் திருத்து ழாய் மாலையையும் அதையிட்டு வைக்கும் பூக்குடலையும் தோ ளிலே போட்டுக் கொண்டு தொண்டரடிப்பொடியென்று பேரை யுடைய அடியேனை க்ருபை பண்ணி தேவரீருடைய அடியார்க்கு அடியானாக ஆக்கியருளுகைக்காகத் திருப்பள்ளி யுணர்ந்தருள வேணும். 10

திருப்பள்ளி யெழுச்சி

முற்றிற்று.

ஆண்டாள் திருக்கல்யாணம்.

பெரியாழ்வார் ஆண்டாளை வளர்த்தார் 7-வயதுயாகி விட்டது பிறகு எம்பெருமானை ஸ்தோத்திரம் செய்தார் ஸ்ரீ ரங்கநாதன் ப்ரத்தியக்ஷராய் சொப்பனம் சாதித்தார்.

ஸ்வப்னப்படியே பெரியாழ்வார் கோதையாருடன் கோயிலுக் கெழுந்தருளினர்.

பிறகு அழகியமணவாளனாகிய எப்பெருமான் ஆழ்வாரைக்கடாக்ஷித்து உமது இஷ்டப்படியே பங்குனியுத்திரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வருகிறோம்; நீர் கோதையாருடன் முன்னதாகப் போமென்று ஆக்ஞாபிக்க விடைபெற்றுப் பொற்சிவிகையில் கோதையை யெழுந்தருளப்பண்ணித் தாமும் வேறு சிவிகையிலெழுந்தருளி அனேக ஸம்பிரமங்களுடன் இடையிலுள்ள திவ்யதேசங்களிலெழுந்தருளிய எம்பெருமானை யடிபணிந்து ஸ்ரீவில்லிபுத்தூரையடைந்து அந்நகரிலுள்ளவர்கள் எதிர்கொள்ள வடபத்ர சாயியின் ஸந்நிதிக்கெழுந்தருளி எம்பெருமானை ஸேவித்துத் தமது திருமாளிகைக்கெழுந்தருளினர். பின்பு அழகியமணவாளர் பங்குனியுத்திரத்தில் கோதையாரைப் பாணிக்ரஹணஞ் செய்து கொள்ள எழுந்தருளுவதான சுபச்செய்தியை அந்நகர்த்திலுள்ள பலருக்கும் அறிவிக்க அனைவரும் கேட்டுமகிழ்ந்து ஆழ்வார் திருமாளிகைக்குவந்து கோதையாரையும் ஆழ்வாரையும் பலமுறைஸேவித்து ஸ்தோத்திரஞ்செய்து எங்களது கண்களினல் பிரம்மாதி தேவர்களுக்கும் கிடைத்தற்கருமையாகிய ஸ்ரீமந்நாராயணனது மணவாளக்கோலத்தை ஸேவித்து க்ருதார்த்தர்களாகும்படி செய்யும் உதவிக்கு என்ன பிரதியுபகாரம் செய்வோமென்று நாநாவிதயாகவுவந்துவிடைபெற்றுத் தங்கள் தங்கள் கிருகங்களிற்சென்று தங்கள் தங்கள்வீதிகளில் மலர்ப்பந்தல்-சித்திரப்பந்தல்-சித்திரக்கொடி-மகரதோரணம் முதலாகிய அலங்காரங்களைச்செய்து மாளிகை முகப்புகள்தோறும் மலர்மாலைமுதலிய மாலைகளைத்தூக்கி

வாழை கமுகு முதலியவைகளை நாட்டி பூரணகலசங்கள் முக விளக்குகள் கண்ணாடிகள் முதலிய அஷ்டமங்களங்களை நிரப்பித் தாங்களும் ஆடையாபரண முதலிய அலங்காரங்களைச் செய்துகொண்டும் ப்ராஹ்மண போஜனமுதலிய தருமங்களைச் செய்துகொண்டும் பங்குனியுத்திரம் எப்போது வருமென்று எதிர்பார்த்திருந்தார்கள். இவ்வாறிருக்க எம்பெருமான் அருளியபடி பங்குனியுத்திரத்தில் பெரியாழ்வார்தமது திருமாளிகையை யலங்கரித்து விவாஹஞ்செய்தற்குவேண்டிய உபகரணங்களையெல்லாம் நிறப்பி பேரிகை மத்தளம் தாளமுதலிய மங்களவாத்தியங்கள் கோஷிக்கவும் நாடகக் கன்னிகையர் நடிக்கவும் கீதம்பாடவும் அழகிய மணவாளரையெதிர்நோக்கியிருந்தார்.

பின்பு ஸ்ரீமந்நாராயணன் ஆக்ஞைப்படி பிரம்மா ருத்திரன் தேவேந்திரன்முதலான தேவர்களும், கந்தர்வர்-கிம்புருடர்-கின்னரர் - சித்தர் - முனிவர் - முதலான பதினெண் கணத்தாரும் ஸ்ரீ வில்லிபுத்தூரையடைந்து ஆழ்வாரது திருமாளிகையிற்சென்று கோதையாரையும் ஆழ்வாரையும் வணங்கிப் பலவிதமாகப்புகழ்ந்து கோதையாரை யலங்காரஞ் செய்வித்து வடபத்திரசாயியின் கோயிலை அலங்கரித்து ஸேவித்திருந்தார்கள். இவ்வாறிருக்கக் கோதையார் அழகிய மணவாளனை இன்னும் எழுந்தருளக்கண்டேனில்லையே என் செய்வேனென்று மனமுருகி, பெரிய திருவடியைக்குறித்து ஸ்தோத்திரம்செய்ய அவர்வந்து எதிர்நிற்க அவரைநோக்கி என்னுயிர்த்தலைவனுகிய ஸ்ரீரங்கநாதனை நீர்போய் அழைத்து வரவேண்டும்; அப்படிசெய்தால் நாமும் அவருமிருக்கின்ற ஆஸனத்தில் நீருமிருப்பீர் என்றுசொல்ல அதுகேட்டு அவர், இதோ அவ்வாறே செய்கின்றேன் என்று அந்தக்ஷணமே ஸ்ரீரங்கத்திற்குப்போய் ஸ்வாமியை ஸேவித்து, தேவரீர்

இன்னுமரைக்கணம் எழுந்தருளத் தாழ்ந்தால் கோதையார் உயிர்தரியாரென்று விண்ணப்பஞ்செய்ய. அதுகேட்டருளி எம்பெருமான் அவர் திருத்தோள்களி லாரோகணித்துக் கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூருக்கெழுந்தருளினர். அதுகண்டு பிரம்மாதிதேவர்களும் மற்றவர்களும் ஆனந்தபரவசராய்த் தண்டன் ஸமர்ப்பித்து ஸ்தோத்திரஞ்செய்ய ஸ்வாமியும் கருடனைவிட்டிறங்கி வடபெருங் கோயிலுக்கெழுந்தருள, பெரியாழ்வார் கோதையாருடன்வந்து எம்பெருமானையடிபணிந்து என்புத்திரியாகிய கோதையாரை தேவரீருக்குக் கொடுத்தேனென்று தாரைவார்த்து விவாகோத்ஸவத்துக்கு வேண்டிய சடங்குகளைச்செய்விக்க எம்பெருமானும் கோதையாருக்குத் திருமங்கலியதாரணஞ் செய்தருளினர். அதுகண்டு தேவர்கள் புஷ்பமாரிபெய்தும்,முனிவர்களாசீர்வதித்தும், ஆனந்தபரவசத்தராயிருந்தார்கள். திருக்கலியாணத்தை ஸேவித்த ஸ்ரீவைஷ்ணவர்கள் முதலிய பலரும் விசேஷமாக மனமகிழ்ந்து, ஆத்மலாபத்தைப் படைந்தவர்களாயிருந்தார்கள். சுமங்கலிகள் மங்களம்பாட மற்றச் சடங்குகள் முழுதும் முடிக்க, எம்பெருமான் நாய்ச்சியாருடன் ஸகலஸம்பிரமங்களுடன் வெள்ளையானையின்மேல் எழுந்தருளி ஊர்க்கோலம் வந்தருளித்திருக்கல்பாணத்தை ஸேவிக்கவந்த தேவர்-முனிவர்-பாகவதர்-முதலிய யாவருக்கும் அனுக்ரஹஞ்செய்து விடைகொடுத்தருளி, பெரியாழ்வாரை நோக்கி ஆழ்வாரே நீர் நமது மாமனாராகக் கடவீரென்று நியமித்து ஸ்ரீரங்கத்துக்கு வாருமென்று திருவாய்மலர்ந்தருளிச் சூடிக்கொடுத்த நாய்ச்சியாராகிய கோதையாருடன் திருவரங்கம் பெரியகோயிலுக்கு எழுந்தருளினர்.

பின்பு ஆழ்வாரும் வடபத்ரசாயியை ஸேவித்து அங்கு நின்றும் புறப்பட்டு ஸ்ரீரங்கத்துக் கெழுந்தருளி எம்பெரு

மான் ஸந்நிதியிற்சென்று தண்டன் ஸமர்ப்பித்துக் கைகுவித்துஸ்தோத்திரஞ்செய்துகொண்டுநிற்க, அழகியமணவாளன் பெரியாழ்வாரை நோக்கி நீர் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒருகோயில் கட்டி ஓராஸநத்தில் நம்மையும் கோதையையும் கருடனையும் எழுந்தருளப்பண்ணி ஆராதனஞ் செய்துகொண்டிருமென்று ஆக்கியாபித்தருள அந்தப்படியே கட்டுவித்து அதில் எம்பெருமான் முதலாக மூவரையு மெழுந்தருளப்பண்ணி இந்த லீலாவிபூதியில்-அறு-ஸம்வத்ஸரம் எம்பெருமானை ஆராதித்துக்கொண்டிருந்த பெரியாழ்வார் பின்பு சூடிக்கொடுத்த நாய்ச்சியார் முன்னிலையாகத் திருமந்திரத்தையோதி ஸ்ரீமந் நாராயணனது திருவடிகளையடைந்தார்.

ஆண்டாள் திருக்கல்யாணம்

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சூடிக்கொடுத்த நாச்சியார் அருளிச்செய்த

திருப்பாவை.

"ஸ்ரீமந்நாராயணன் திருவாய்ப்பாடியிலே கண்ணனாகத் திருவவதரித்த காலத்தில் இடைப்பெண்களுக்கும் கண்ணனுக்கும் கண்ணோட்ட முண்டாகாதபடி இடையர்கள் பெண்களை நிலவறைகளிலே காவலிட்டு வைக்க. பெண்களது மனோரதத்தினாலும் இதை அடியொத்தின கண்ணன் ஸங்கற்பத்தினாலும் மழையின்றிக்கே பொழிய கோதனரான இடையர் பெண்களை நோன்பு நோற்கச் சொல்லி கண்ணனைக்கூட இருந்து நோன்பை நிறைவேற்றி வைக்கும்படி வேண்டிக்கொண்டு பெண்களை அவன்கையிலே காட்டிக்கொடுக்க, இடைப்பெண்களும் மார்கழி நீராட்ட மென்னும் அந்நோன்பின் முகமாகக் கண்ணனோடு கலந்து பரிமாறி மனோரத பூர்த்தியடைந்தார்கள்." என்னும் விருத்தாந்தத்தைக் கேட்டறிந்த ஆண்டாள் இடைப்பெண்களை அநுசரித்துக்கொண்டு அருளிச்செய்தது இத் திருப்பாவைப் பிரபந்தம்.

பராஸரபட்டர் அருளிச்செய்தது.

𑌨𑍀𑌳𑌾𑌤𑍁𑌙𑍍𑌗 𑌸𑍍𑌤𑌨𑌗𑌿𑌰𑌿𑌤𑌟𑍀 𑌸𑍁𑌪𑍍𑌤𑌮𑍁𑌦𑍍𑌬𑍋𑌧𑍍𑌯 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂
𑌪𑌾𑌰𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌤 𑌶𑌿𑌰𑌸𑍍𑌸𑌿𑌦𑍍𑌧 𑌮𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑌨𑍍𑌤𑍀
𑌸𑍍𑌵𑍋𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌾𑌯𑌾𑌂 𑌸𑍍𑌰𑌜𑌿 𑌨𑌿𑌗𑌳𑌿𑌤𑌂 𑌯𑌾 𑌬𑌲𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌭𑍁𑌙𑍍-
𑌕𑍍𑌤𑍇, 𑌗𑍋𑌦𑌾 𑌤𑌸𑍍𑌯𑍈 𑌨𑌮 𑌇𑌦𑌮𑌿𑌦𑌂 𑌭𑍂𑌯 𑌏𑌵𑌾𑌸𑍍𑌤𑍁 𑌭𑍂𑌯𑌃 ॥

நீளாதுங்க ஸ்தநகிரிதட ஸுப்த முத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம்ஸ்ருதிசத சிரஸ்ஸித்த மத்யாபயந்தீ
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜிநிகளிதம் யாபலாத் க்ருத்ய புங்தே
கோதாதஸ்யை நமஇதமிதம் பூயஏவாஸ்து பூயஃ

[பதஉரை.]

நீளா - நீளாதேவியின் அம்ஸப்பூதையான நப்பின்னை பிராட்டியுடைய
துங்க - உயர்ந்த
ஸ்தந - ஸ்தநங்களாகிற
கிரி - பர்வதங்களின்
தடி - ப்ரதேசவிசேஷத்தில்
ஸுப்தம் - நித்திரைபண்ணுகிற
க்ருஷ்ணம் - க்ருஷ்ணனை
உத்போத்ய - திருப்பள்ளியுணர்த்தி
ஸ்வம் - ஸ்வதஃப்ரமாணமான
ஸ்ருதி ஸத - வேதஸஹஸ்ரங்களின்
ஸிரஃ-ஸிரஸ்ஸில்
ஸித்தம்-ஸித்தமாயிருக்கிற [ளை
பாரார்த்யம்-விஸேஷார்த்தங்க
அத்யாபயந்தீ-அத்தியயநம் பண்ணிவித்தவளாய்
உச்சிஷ்டாயாம்-ஸேஷம் செய்யப்பட்ட
ஸ்ரஜி-திருமாலையில்
நிகளிதம்-பத்தநான
க்ருஷ்ணம்-கண்ணனை
பாலாத்க்ருத்ய - ஸ்வாதுவ்ருத்தி பண்ணி
யா-யாதொருப்ரவித்தியுடைய
கோதா-கோதைநாயகி
புங்தே-உண்ணுஞ் சோறுதியகாபுஜித்தாளோ
தஸ்யை-அந்தகோதைநாயகியின் பொருட்டு
இதம் இதம்-இந்த இந்த
நமஃ-மங்களம்
பூயஃஎவ-பின்புஅப்படியே
அஸ்து-ஆகக்கடவது
பூயஃபின்பும்
அஸ்து-ஆகக்கடவது.

உய்யக்கொண்டா ரருளிச்செய்தது.

அன்ன வயல்புதுவை யாண்டா ளரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாணற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்.

அன்னம்-ஹம்ஸங்களால் நெருங்கிய
வயல்-கழனிகளாற் சூழப்பட்ட
புதுவை - ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகையான
ஆண்டாள்-கோதைநாயகி

அரங்கற்கு-ரங்காத்யக்ஷனுக்கு
பன்று-ஆராய்ந்தருளிச்செய்த
திருப்பாவை-திருப்பாவையாகிய இந்த திவ்ய ப்ரபந்தத்தை
பல்-பல
பதிகம்-பத்துக்களாக
பன்னு-செய்து
இன்-இனிய
இசையால்-ஸாமகாநத்தால்
நல்-விலக்ஷணமான
பாமாலைபாடி-தமிழ் மாலையாகப் பாடி அநுஸந்தித்து
கொடுத்தாள்-ஸமர்பித்தவளை
பூமாலை-திருமாலையை
சூடி-அணிந்து
கொடுத்தாளை-ஸமர்பித்தவளை
சொல்-ஸ்துதிப்பாயாக.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய்—நாடிநீ
வேங்கடவற்கென்னை விதியென்றவிம்மாற்றம்
நாம்கடவா வண்ணமே நல்கு.

சூடி-புஷ்பமாலைகளை அணிந்து
கொடுத்த-ஸமர்ப்பித்த
சுடர்-உஜ்வலமான
கொடியே-கொடிபோல்பவளே
தொல்-அநாதியான
பாவை-திருப்பாவையை
பாடி-திவ்யகானத்தால் பாடி
அருள-க்ருபைபண்ண
வல்ல-ஸமர்த்தையான
பல்-பலவகைப்பட்ட
வளையாய்-கங்கண விஸேஷாபரணங்களை யுடையவளே
நீ-தேவரீர்
நாடி-உத்தேசித்து
வேங்கடவற்கு - திருவேங்கடத்தானுக்கு
என்னை-அடியேனை
விதி-விதிக்கவேணும்
என்ற-என்றுப்ரார்த்தித்த
இம்-இத்தன்மையான
மாற்றம்-திவ்யஸூக்தியை
நாம்-அஸ்மதாதிகள்
கடவா-அதிக்ரமிக்காத
வண்ணமே-உபாயத்தையே
நல்கு-க்ருபைபண்ணும்.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போன்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர்புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

மார்கழி-மார்கழி யென்கிற
திங்கள்-மாசத்தில்
மதி-சந்திரனால்
நிறைந்த-ஸம்பூர்ணமான
நல்லநாள்-நல்லதினத்தில்
நீராட-தீர்த்தமாடுகிறதற்கு
போதுவீர்-வருகிறவர்கள்
போதுமின் வாருங்கோள்
நேர்-விலக்ஷணமான
இழையீர்-ஆபரணங்களையுடைய
சீர்-ஸம்பத்தினால்
மல்கும்-பரிபூரணமான
ஆய்ப்பாடி-திருவாய்ப்பாடியில்
செல்வம்-சம்பத்தையுடைய
சிறுமீர்காள்-சிறுபெண்களே
கூர்-கூர்மையான
வேல்-வேலாயுதத்தையுடைய
கொடும்-க்ரூரமான
தொழிலன்-வ்யாபாரமுடைய
நந்தகோபன் - நந்தகோபாலனு
டைய
குமரன்-குமாரனானவனும்
ஏர்-சௌந்தர்யத்தினால்
ஆர்ந்த-ஸம்பூர்ணமான
கண்ணி-நேத்ரங்களையுடைய
எசோதை-எசோதைப்பிராட்
டிக்கு
இளஞ்சிங்கம்-இளஞ்சிங்கமானவ
னும்
கார்-மேகத்தைப்போன்ற
மேனி-திருமேனியை யுடையவ
னும்
செங்கண்-புண்டரீகாக்ஷனும்
கதிர்-சூர்யனையும்
மதியும்-சந்திரனையும்
போல்-ஒத்த
முகத்தான்-திருமுகமண்டலத்
தை யுடையவனுமான
நாராயணனே-ஸர்வஸ்வாமியா
னவனே
நமக்கே-வ்ரதோபவாஸிகளான
நமக்கே
பறை-வாத்ய விசேஷங்களை
தருவான்-ப்ரஸாதிப்பான்
பாரோர்-லோகத்தார்
புகழ்-கீர்த்திக்கும்படியாக
படிந்து-பொருந்தி
ஏல் ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடி
கிறது.

(தா - ம்) நம் நோன்புக்கேற்க மாதம் மார்கழி மாதமாய் பக்ஷமும் சுக்லபக்ஷமாய் வாசித்தபடி பாருங்கோள் நாம் அபி முக்யத்தோடு சென்று பற்றினால் நம் கண்ணன் நமது நோன்பை முடித்து வைப்பன். ஆகையால் ஊரார் புகழும்படி நோன்புக்காக மார்கழி நீராட மனமுடைய தோழிமார் எல்லாரும் வாருங்கள் என்றழைக்கிறது. (1)

வையத்து வாழ்வீர்காள் நாமுநப்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி

மையிட் டெழுதோ மலரிட்டு நாம்முடியோம்
செய்யா தனசெய்யோந் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையு மாந்தனையுங் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்.

வையகத்து-பூமியில்
வாழ்வீர்காள்-ஸுகிக்கிற பாக்கியவதிகளே
நாமும்-நாங்களும்
நம்-எங்களுடைய
பாவைக்கு-நோன்புக்கு
செய்யும்-செய்யத்தக்க
கிரிசைகள்-க்ருத்யங்களை
கேளீரோ-கேளுங்கோள்
பாற்கடலுள்-க்ஷீரசமுத்ரத்தில்
பையத்துயின்ற-லகுநித்தைபண்ணுகிற
பரமன்-ஸர்வாதிகனான ஸ்ரீயஃபதியினுடைய
அடி-திருவடிகளை
பாடி-அநுஸந்தித்து
நெய் உண்ணோம்-நெய்யைத்தின்னமாட்டோம்
பால் உண்ணோம்-பாலைக்குடிக்கமாட்டோம்
நாட்காலே-அத்யந்த ப்ராதக்காலத்திலே
நீராடி-தீர்த்தமாடி
மையிட்டெழுதோம்-மையிடக்கடவர்களல்லோம்
மலரிட்டுநாமுடியோம்-புஷ்பத்தை சூடிக்கொள்ளக் கடவர்களல்லோம்
செய்யாதன-செய்யத்தகாதகாரியங்களை
செய்யோம்யாம்-செய்வதில்லை
தீக்குறளை-பொல்லாதவார்த்தைகளை
சென்றோதோம்-ஒருவரிடத்துச் சென்று காதில் உரையோம்
ஐயமும்-உபகாரமும்
பிச்சையும்-இரப்பவர்களுக்கு உணவும்
ஆந்தனையும்-ஆகுமளவும்
கைகாட்டி-கொடுத்து [தை
உய்யும் ஆறு-உஜ்ஜீவநப்ரகாரத்
எண்ணி-அநுஸந்தித்து
உகந்து-ஸந்தோஷிக்கும்படியாக
எல் ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) கண்ணன் வந்து பிறந்திருக்கும் பூமியில்பிறந்த பாக்கியசாலிகளே! யாம் ஸ்வஸத்தமாய் நெய் பால் உண்பதையும் நாமாகவே மையிட்டுக்கொள்வதையும் பூமுடித்துக்கொள்வதையும் தவிர்ந்து அகிருத்தியங்களைச் செய்யாமலும் கோட் சொல்லாமலும் நமக்கு கூடும்வரையில் பரோபகாரம் செய்து கொண்டும் இருந்து நாம் பிழைக்கும்படி உவப்போடே க்ஷீராப்தி நாதனைப் பாடக்கடவோம் இதுவே நோன்புக்காக நாம் வைத்துக்கொள்ள வேண்டிய நியமம் என்கிறது. (2)

ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கணம் பாவைக்குச் சாற்றிநீ ராடினல்
தீங்கின்றி நாடெல்லாந் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெறுஞ்செந்நெ லூடு கயலுகளப்
பூங்குவளைப் போதிற் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடநிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். 3

ஓங்கி-வளர்ந்து
உலகு-லோகங்களை
அளந்த-அளவிட்ட
உத்தமன்-உத்தமனுடைய
பேர்-திருநாமத்தை
பாடி-அநுஸந்தித்து
நாங்கள்-நாங்களும்
நம்-நம்முடைய
பாவைக்கு-நோன்புக்கு
சாத்தி-ஒருப்பட்டு
நீராடினல்-தீர்த்தமாடினல்
தீங்கின்ற-அநாவ்ருஷ்டி தோஷ மில்லாமல்
நாடெல்லாம்-ஸமஸ்ததேசங்களு[ம்]
திங்கள்-மாசத்துக்கு
மும்மாரி-மூன்று மழை
பெய்து-வர்ஷித்து
ஓங்கு-வளர்ந்த
பெருஞ்செந்நெல்-பருமனுன நல்ல சம்பா நெற் பயிரின்
ஊடு-நடுவே
கயல்-சேல்கெண்டைகள்
உகள-குதித்து விளையாட
பூங்குவளைப்போதில்-விகஸிதமான நெய்தல் புஷ்பங்களில்
பொறிவண்டு-புகரையுடையவண்டுகள்
கண்படுப்ப-நித்ரிக்க
தேங்காதே-அசைவன்றிக்கே
புக்கு-ப்ரவேஸித்து
இருந்து-பூமியிற் படிந்திருந்து
சீர்த்த முலை-கனமான மடிகளை
பற்றி-பிடித்து
வாங்க-மீட்க
குடம்-குடங்களை
நிறைக்கும்-பூரிக்கும்
வள்ளல்-ஔதார்த்தத்தை யுடைய
பெரும் பசுக்கள்-ஸ்ரேஷ்டமான பசுக்கள்
நீங்காத செல்வம்-என்றும் விலகாத சீர்மை (சம்பத்து)
நிறைந்து-ஸம்ருத்தமாம்படியாக
ஏல் ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) திரிவிக்கிரமனுய் அவதரித்து உலகையெல்லா மளந்தருளின ஸ்ரீமந் நாராயணனது திருநாமத்தைப் பாடிக் கொண்டு நாம் மார்கழி நீராடி நோன்பு நோற்போமாயின், நாதம்

மும்மாரி பெய்து வயல்களில் பயிர்கள் செழித்து நீர்வளம் மிகுந்து பசுக்கள் குடங் குடமாகப் பால் கறக்கும்படி மதித்து இவ்வாருகிய எல்லாச் செல்வமும் நீங்காது நிலைபெறு மென்று நோன்பினுல் உண்டாகும் பயனைச் சொல்லுகிறது. (3)

ஆழி மழைக்கண்ணு ஒன்றுநீ கைகரவேல்
  ஆழியுள் புக்கு முகந்து கொடார்த்தேறி
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கறுத்து
  பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
  தாழாதே சார்ங்க முதித்த சரமழைபோல்
வாழ உலகினிற் பெய்திடாய் நாங்களும்
  மார்க்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 4

ஆழி-கம்பீரமான
மழை-வர்ஷத்துக்கு
கண்ணு-நிர்வாஹகனை
ஒன்றும்-அற்பமும்
நீ-நீயும் [ல்
கைகரவேல்-ஔதார்யந்தப்பாம
ஆழியுள்புக்கு-ஸமுத்ரத்திலேப்ர
  வேசித்து [ணி
முகந்துகொடு-ஜலபானம்பண்
ஆர்த்து-கர்ஜித்து
ஏறி-ஆகாசமேறி
ஊழிமுதல்வன் - உகமுடிவிலுள்
  ள ஆதிக்கடவுள் திருமால்
உருவம்போல் - திருமேனியைப்
  போலே
மெய்-உடம்பு
கறுத்து-கறுப்பாய்
பாழி-கம்பீரமாய்
அம்-சுந்தரமான [தான
தோளுடை - தோள்களையுடைய
பற்மநாபன்-பத்மநாபனுடைய

கையில்-ஸ்ரீஹஸ்தத்தில்
ஆழிபோல்-திருவாழிபோல
மின்னி-ஒளிசெய்து
வலம்புரிபோல் - தக்ஷிணுவர்த்த
  ஸங்கம்போல
நின்று-சலியாமல் நின்று
அதிர்ந்து-கோஷித்து
தாழாதே-தாமதியாதே
சார்ங்கமுதித்த - ஸ்ரீசார்ங்கத்தி
  னுலே பிறந்த
சரமழைபோல்-சரவர்ஷம்போல
உலகினில்-லோகத்தில்
வாழ-வ்ருத்தியடையும்படியாக
நாங்களும்-நாங்களெல்லோரும்
மகிழ்ந்து-ஸந்தோஷித்து
மார்கழி-மார்கழிமாசத்திலே
நீராட-தீர்த்தமாடும்படியாக
பெய்திடாய்-வர்ஷியாய்
ஏல்ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்புஇனி
  து முடிகிறது.

(தா - ம்.) மேகமே நீ கடலின் நடுவில் புகுந்து வேண்டுமளவு நீர் முகந்து கொண்டு எம்பெருமான் போற்கறுத்த வுருவத்தோடு ஆகாயமெங்கும் பரவி, அவனது சக்கிரம்போல் மின்னி, சங்கம்போல் ஒலித்து, அவன் வில்லிலிருந்து வரும் பாணம்போலே ஓயாத தாரையாக மழை பெய்யக் கடவாய், நாங்கள் மார்கழி நீராடுவதற்காக நீசெய்யவேண்டியதிதுவே யென்று பர்ஜந்ய தேவதைக்குக் கட்டளையிடுகிறது. 4

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் மணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவா னின்றனவும்
தீயினிற் றூசாகும் செப்பேலோரெம்பாவாய். 5

மாயனை-ஆச்சரிய சேஷ்டிதங்களை யுடையனாய்
மன்னு-பகவத்ஸம்பந்தம் நிலைபெற்ற
வடமதுரைமைந்தனை-த்வாரகைக்கு நிர்வாஹகனை
தூய-பரிசுத்தமான
பெருநீர்-ஏராளமான ஜலமுடைய
யமுனைத்துறைவனை-யமுனாதீரவாஸியானவனை
ஆயர்-யாதவர்களுடைய
குலத்தினில்-ஜாதியில்
தோன்றும்-ப்ரகாசிக்கிற
அணிவிளக்கை-திருவாய்ப்பாடிக்கு மங்களதீபவினை
தாயை-அசோதைப்பிராட்டியுடைய
குடல-கர்ப்பத்தை
விளக்கம்செய்த-ப்ரகாஶிப்பித்த
தாமோதரனை-கண்ணபிரானை
தூயோமாய்-பரிசுத்தராய்
வந்து-விடைகொண்டு
நாம்-நாங்கள்
தூயமலர்கள்-பரிசுத்தமான புஷ்பங்களை
தூய்-ஸமர்ப்பித்து
தொழுது-ஸேவித்து
வாயினால் பாடி-வாக்கினால் ஸ்தோத்ரம் பண்ணி
மனத்தினால்-மநஸ்ஸாலே
சிந்திக்க-த்யாநிக்க
போய்பிழையும்-முன்செய்த தீவினையும்
புகுதருவா நின்றனவும்-இனி நேரிடத்தக்க பாவங்களும்
தீயினில்-நெருப்பிற்பட்ட

தூசாகும்-பஞ்சுபோல் ஆய்விடும்
செப்பு-அவன் திருநாமங்களை யநுஸந்திக்கும்படியாக
ஏல் ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்.எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) ஆச்சர்யமான சேஷ்டிதங்களை யுடையனும் இடையர் குலத்தை மேன்மை பெறுவிக்கவந்து பிறந்த கண்ணனைக்கிட்டி பரிசுத்தமான மனத்தோடு நன்மலர்களைத்தூவி வாயாரவாழ்த்தி கையாரத்தொழுது மனமார தியானிக்கில் முன்வினைகளும் இனிவரும் வினைகளும் நெருப்பிற்பட்ட பஞ்சுபோலழிந்து விடுமென்று நோன்பின்பெருமை கூறுகிறது.

புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவங் கேட்டிலையோ
பிள்ளா யெழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவிற் றுயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள வெழுந்தரி இயென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 6

புள்ளும்-பக்ஷிகளும்
சிலம்பினகாண்-கூவிப்போகாநின்றனகாண்
புள்ளரையன்-பெரிய திருவடிக்கு ஸ்வாமியானவனுடைய
கோயிலில்-கோயிலிலே
வெள்ளைவிளி-வெளுப்பாய் கோஷிக்கிற
சங்கின்-சங்கத்தினுடைய
பேரரவம்-மஹா கோஷத்தை
கேட்டிலையோ- கேட்கவில்லையோ
பிள்ளாய்-சிறுபெண்ணே [யோ
எழுந்திராய்-எழுந்திரு
பேய்-பூதனையினுடைய
முலை-ஸ்தநங்களில்
நஞ்சு-விஷத்தை
உண்டு-அமுதுசெய்து
கள்ள-வஞ்சகனான
சகடம்-சகடாசுரனை [லைய
கலக்கு அழிய-சேர்க்கை நிலைகு
காலோச்சி-ஸ்ரீபாதத்தாலே ஸ்பரிசித்து
வெள்ளத்து-க்ஷீரார்ணவத்திலே
அரவில் - திருவநந்தாழ்வான் மேலே
துயில்-யோகநித்திரையை
அமர்ந்த-விரும்பிய
வித்தினை-காரணபூதனை

உள்ளத்துக்கொண்டு-பரிசுத்தா
  ந்தக் கரணத்திற்கொண்டு
முனிவர்களும்-மநநவீலரும்
யோகிகளும்-யோகாப்பியாசம்
  பண்ணுமவர்களும்
மெள்ள எழுந்து-அசையாமல்நி
  த்திரைவிட்டெழுந்து

அரியென்ற-ஹரிஹரி என்கிற
பேரரவம்-மஹாகோஷங்கள்
உள்ளம்-ஹ்ருதயங்களிலே
புகுந்து-ப்ரவேசித்து
குளிர்ந்து-குளிரும்படி
ஏல் ஓர்-தகுந்த ஒப்பற்ற [கிறது.
எம்பாவாய்-எமது நோன்பு முடி

(தா - ம்.) இவ்வாறு நோன்பின் முறைகளைப் பேசிய பின்பு எல்லோரும் அவரவர் மாளிகைகளில்போய்ப் படுத்தார்கள். பின் மாலைப்பொழுதில் எல்லோரும் கூடிச்சென்று கண்ணனை யெழுப்பி அழைத்துக்கொண்டு நீராடப்போக வேண்டுவதென்றும் முன்னே கண்விழித்தவர்கள் உறங்குகிறவர்களை யெழுப்பவேண்டுவதென்றும் ஏற்பாடு செய்துகொண்டார்கள். அந்தப்படி ஒவ்வொருவராய் உணர்ந்தவர்கள் விடிந்தமைக் கடையாளங்களைச் சொல்லிக்கொண்டு உறங்குகிறவர்களை ஒவ்வொருவகையாய் எழுப்புகிறார்கள்.

பறவைகளுணர்ந்து கூவுகின்றன. ஸ்ரீமந் நாராயணனது சந்நிதியில் திருப்பள்ளியுணர்த்திக்காக வெண்சங்க மூதுகிறார்கள். தம்மனதில் குடிகொண்ட வெம்பெருமானுக்கு பரிசிரமம் உண்டாகாதபடி மெதுவாக எழுந்து மஹரிஷிகள் அரி அரி என்று திருநாமஸ்மரணம் செய்கிறார்கள். நீ எழுந்திருப்பாயாக என்று, பகவத் விஷயத்திற்கும் புதிதாயிருப்பவளொருத்தியை யெழுப்புகிறது. (6)

கீசுகீ சென்றெங்கு மானைச்சாத் தங்கலந்து
  பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே
காசும் பிறப்புங் கலகலப்பக் கைபேர்த்து
  வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்
ஓசைப் படுத்த தயிரரவங் கேட்டிலையோ
  நாயகப் பெண்பிள்ளாய் நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவுநீ கேட்டே கிடத்தியோ
  தேச முடையாய் திறவேலோ ரெம்பாவாய்.

கீசுகீசென்று-கீசுகீசு என்று
எங்கும்-ஸர்வதிக்ருகளிலேயும்
ஆனைச்சாத்தம்-பரத்வாஜபக்ஷி
கள்
கலந்து-ஸம்ஸ்லேஷித்து
பேசின-பேசிய
பேச்சு-வார்த்தைகளினுடைய
அரவம்-ஸப்தங்களை [யோ
கேட்டிலையோ-கேட்கவில்லை
பேய்ப்பெண்ணே-பேய்ப்பிள்ளா
காசும்-அச்சுத்தாலியும் [ய்
பிறப்பும்-அமைத்ததாலியும்
கலகலப்ப-கலகலவென்று ஸப்
திக்க
கைபேர்த்து-கைகளைப்பேர்த்த
வாசம்-பரிமளத்தால்
நறும்-பரிமளிக்கிற
குழல்-அளகபாரங்களையுடைய
ஆய்ச்சியர்-கோபிகாஸ்திரீகள்
மத்தினல்-மத்தாலே
ஓசைபடுத்த-கடையப்பட்ட
தயிர்-தயிரின்
அரவம்-கோஷம்
கேட்டிலையோ-கேட்கவில்லை
நாயகம்-ஸ்வாமியான [யோ
பெண்பிள்ளாய்-பெண்பிள்ளை
நாராயணன்-ஸ்ரீயঃபதியினுடை
மூர்த்தி-மூர்த்தியான [ய
கேசவனை - கேஸிஹந்தாவான
க்ருஷ்ணனை
பாடவும்-பாடிவரவும்
நீ-நீதான்
கேட்டே-கேட்டும்
கிடத்தியோ-உறங்குகிருயோ
தேசமுடையாய்-தெளிவை
யுடைத்தானவளாய்
திற-திருவாசல் திறப்பாயாக
ஏல் ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடி
கிறது.

(தா - ம்) வலியன் குருவிகள் உணர்ந்து காலைக்கலவிகலை ந்து கீச்சுக்கீச்சென்று கூவுகின்றன. ஆய்ச்சிமார் ஆபரணங்கள் ஒலிக்கும்படி தயிர்கடைகிருர்கள். நாங்கள் இங்கு நின்று நாரா யணனைப் பாடிக்கொண்டிருக்கவும் நீ உறங்குவதேன் எழுந்து வந்து கதவைத் திறவாயென்று, பகவத்விஷயத்தில் பழகியிரு ந்து புதுமை பாவித்திருப்பா ளொருத்தியை யெழுப்புகிறது. ()

கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்ருரைப் போகாமற் காத்துன்னைக்
கூவுவான் வந்துநின்ருேம் கோது குலமுடைய
பாவா யெழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய்ப் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் ருராய்ந் தருளேலோ ரெம்பாவாய் 8

கீழ்-கீழ்த்திக்கில்
வானம்-ஆகாயம்
வெள்ளென்று-வெளுத்தவென்]று
எருமை-மஹிஷங்கள்
சிறுவீடு-சிறிது விடுதலாய்
மேய்வான்-(பனிப்புல்லை)மேயும் பொருட்டு
பரந்தனகாண்-ஸ்வேச்சையாக வநங்களிலே வர்தித்தது
மிக்குள்ள-உன்னை யொழிந்த
பிள்ளைகளும்-பெண்பிள்ளைகளு
போவான்-போகிறதற்காக [ம்
போகின்றாரை-போகின்றவர்களை
போகாமல்-போகாதபடிக்கு
காத்து-தடுத்து
உன்னைக்கூவான்-உன்னை அழைக்கவேண்டி
வந்து-நாங்களே வந்து
நின்றோம்-வாசலிலேநிற்கிறோம்
கோதுகல முடைய-களதூஹலமுடைய
பாவாய்-பெண்பிள்ளாய்
எழுந்திராய்-எழுந்திரு
பாடி-ஸ்ரீ க்ருஷ்ணன் கல்யாண குணங்களையநுசந்தித்து
பறை-வாத்யவிசேஷத்தை
கொண்டு-எடுத்துக்கொண்டு
மா-குதிரை வடிவு கொண்டு வந்த கேஸி என்னும்
வாய்-வாயை
பிளந்தானை-இருபிலவாகக்கீண்டவனை
மல்லரை-சாணூராதி மல்லர்களை
மாட்டிய-ஸம்ஹரித்த
தேவாதிதேவனை-தேவர்களுக்கு தேவனானவனை
சென்று-சந்திக்குச்சேர்ந்து
நாம்-நாமெல்லாரும் [ல்
சேவித்தால்-ப்ரபத்தி பண்ணினு
ஆவாவென்று-ஐயோ ஐயோ வெ
ஆராய்ந்து-விசாரித்து [ன்று
அருள்-க்ருபைபண்ணுவான்
ஏல்-ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) கிழக்கு வெளுத்தது எருமைகள் பனிப்புல் மேய வயலெங்கும் பரந்தன ஆயர்பாடியில் பெண்பிள்ளைகள் நீராடப்போகப் போனவர்களைத் தடுத்து உன்னை அழைத்துப் போகவந்தோம் நாம் நோன்புக்காகச் சென்று கண்ணனைச் சேவித்தால் அவன் நமக்கருள் செய்வன். நீ அவசியம் வருவாயாக வென்று, கண்ணனும்மதிக்கும்படி பெருமையுடையவள் ஒருத்தியை யெழுப்புகிறது. (8)

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீரவளை யெழுப்பீரோ உன்மகள்தான்

ஊமையோ வன்றிச் செவிடோ வனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். 9

தூ-ஸ்லாக்யமான
மணி-மாணிக்ககசிதமான
மாடத்து-மாளிகையில்
சுற்றும்-சுற்றிலும்
விளக்கு-திருவிளக்குகள்
எரிய-ஜ்வலிக்க
தூபம்-சாம்ப்ராணி தூபமானது
கமழ-பரிமளிக்க
துயிலணைமேல் - ஹம்ஸதூலிகா தல்பத்திலே
கண்வளரும்-பாயநிக்கும் [ணே
மாமன் மகளே-அம்மான் பெண்
மணிக்கதவும் - மாணிக்கக் கதவினுடைய
தாள்திறவாய் - பூட்டை நீ திறப்பாயாக
மாமீர்-அம்மாமீர்
அவளை-அந்த பெண்பிள்ளையை
எழுப்பீரோ - எழுப்பப் போகாதோ
உன்மகள்தான் ஊமையோ-உன் மகள் வாக்கிந்த்ரியமில்லாதவளோ
அன்றி-அல்லாமல்
செவிடோ-ஸ்ரோத்ரேந்த்ரிய மில்லாதவளோ
அனந்தலோ-அபராத்திரியில் நித்திரையோ
ஏமம் - காவலிலே ப்ரவேஸித்தனளோ
பெருந்துயில் - பெரியநித்திரையோ
மந்திரப்பட்டாளோ-மந்த்ரித்தாருண்டோ
மாமாயன்-ஆச்சர்யகுண சேஷ்டிதன்
மாதவன்-ஸ்ரீய:பதி
வைகுந்தன்-வைகுண்டநாதன்
என்றென்று - என்று சொல்லிச் சொல்லி
நாமம்-திருநாமம்
பலவும்-ஸஹஸ்ரநாமங்களும்
நவின்று-சொல்லுவோம்
ஏல் ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) கண்ணன் வந்தபோது வருகிறானென்று அநாதரித்து மணிமாடத்தில் புஷ்பசயநத்தில்படுத்து அகில்புகை கமழச் சுகமாக உறங்கிக்கொண்டிருக்கு மொருத்தியைக்கிட்டி, மைத்துனச்சி முறைபாராட்டி அம்மான் மகளே நீ கதவைத் திறவாய் என்று எழுப்ப அவள் எழுந்திராதிருக்கவே, உன் பெண் என்ன ஊமையோ, செவிடோ அயர்ந்தாளோ, பெரும்

பொழுதுறங்கும்படி யாரேனும்மந்திரம் செய்தார்களோ, எம் பெருமானது திருநாமங்களைச் சொல்லி நீ அவளை யெழுப்புவாயாக என்று அவள் தாயாரை வேண்டுகிறது. (9)

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மானாய்
  மாற்றமுந் தாராரோ வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மாற்
  போற்றப் பறைதரும் புண்ணியனாற் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கர்ணனும்
  தோற்று முனக்கே பெருந்துயில்தான் தந்தானோ
ஆற்ற வனந்த லுடையாய் யருங்கலமே
  தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். 10

நோற்று-நோன்பு நோற்று
சுவர்க்கம்-ஸ்வர்கத்திலே
புகுகின்ற-ப்ரவேசிக்கத்தக்க
அம்மானாய்-ஸ்மாமி யானவளே
மாற்றமும்-மாறுத்தரமும்
தாராரோ-சொல்லாரோ
வாசல்-கதவை
திறவாதார்-திறவாதவர்கள்
நாற்றம்-பரிமளத்தையுடைய
துழாய்-திருத்துழாய்மாலையை
முடி-திருமுடியினுடைய
நாராயணன்-நாராயணனவன்
நம்மால்-நம்மாலே [ட
போற்ற-ஸ்தோத்ரம்செய்யப்பட்
பறை-புருஷார்த்தத்தை
தரும்-கொடுக்கிற [வாலே
புண்ணியனால் - புண்யாத்மாவா
பண்டொருநாள் - பூர்வகாலத்தி
  லே

கூற்றத்தின்-மிருத்துவினுடைய
வாய்-வாயிலே
வீழ்ந்த-பட்ட
கும்பகருணனும்-கும்பகர்ணனும்
உனக்கே-உனக்குத்தானே
தோற்று-அபஜயத்தையடைந்து
பெருந்துயில்தான்-பெரிய நித்தி
  ரையை
தந்தானோ-கொடுத்தானோ
ஆற்ற-அதிகமாக
அனந்தலுடையாய்-நித்திரையை
  யுடையவளே
அருங்கலமே-எங்கள் கோஷ்டிக்
  கு ஆபரணமானவளே
தேற்றமாய் வந்து-தெளிவுண்டா
  ய்வந்து
திற-கதவைத் திறப்பாயாக
எல் ஓர்-தகுந்த ஒப்பற்ற [கிறது.
எம்பாவாய்-எமது நோன்பு முடி

(தா - ம்.) ஸுகிருத பலத்தால் ஸுகாநுபவம் செய்கிற பாக்கிவதியே! கதவுதிறவாவிட்டாலும் ஒரு வார்த்தைகூட சொ

ல்லலாகாதோ! ஸ்ரீராமனால் அடிக்கப்பட்டும் கும்பகர்ணன் உனக்குத் தோற்று அவன் பெருமுறக்கத்தை உனக்கே கொடுத்துவிட்டானோ, உறக்கத்தடமாற்ற மில்லாது நிதானித்துவந்து கதவைத்திறவென்ற; கண்ணன் திருமாளிகைக்கு அடுத்த மாளிகையுடையா ளொருத்தியை யெழுப்புகிறது. (10)

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே
புற்றர வல்குற் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்து நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாடச்
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். 11

கற்று-கன்றுநின்ற
கறவை-பசுக்களினுடைய
பல-அநேகங்களாயிருக்கிற
கணங்கள்-ஸமூஹங்களை
கறந்து-பால்பீசி
செற்றார்-ஸத்ருக்களினுடைய
திறல்-பலம்
அழிய-அழியும்படியாக
சென்று-தண்டாத்ரைபண்ணி
செரு-யுத்தத்தை
செய்யும்-பண்ணும்படியான
குற்றம்-அக்ருத்யம்
ஒன்றில்லாத-ஒன்றுமில்லாத
கோவலர்தம்-கோபாலவம்ஸத்திற்கு [மானவளே
பொற்கொடியே-ஸ்ப்ருஹணீய
புற்றரவல்குல்-புற்றிலேயிருக்கிற ஸர்ப்பத்தைப்போன்ற நிதம்பப்ரதேஸத்தையுடையவளே
புனமயிலே-காட்டிலிருக்கிற மயில் இறகுபோன்ற அளகபாரத்தையுடையவளே

போதராய்-வாராய்
சுற்றத்து-பந்துஜனமான
தோழிமார்-பெண்கள்
எல்லாரும்வந்து-எல்லாருமாய் வந்து
நின்முற்றம்புகுந்து-உன் அகத்து வாசலிலே ப்ரவேசித்து
முகில்வண்ணன்-நீலமேகஸ்யாமளனான ஸர்வேஸ்வரனுடைய
பேர்-திருநாமத்தை
பாட-பாடிக்கொண்டுவர
சிற்றாதே-அசங்காதே
பேசாதே-பேசாமல்
செல்வம்-பகவதநுபவைஸ்வர்யமுடைய
பெண்டாட்டிநீ-பெண்ணேநீ
எற்றுக்குறங்கும்பொருள்-நித்திரிக்கிற அபிப்ராயந்தானென்னவல் ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) கண்ணனோடொத்த பருவமாய், அவனைப்பெற நானே நோற்பேன், வேண்டுமாகில் அவனே நோற்கவென்று கிடப்பாளொருத்தியைக்கிட்டி, உன் உறவின் முறையாரும் தோழியருமெல்லாரும் திரண்டுவந்து முற்றத்து நின்று கடல்வண்ணன் பேர்பாடிக் கொண்டிருக்கவும், நீ சற்றும் கலியாமலும் ஓர் பேச்சும் பேசாமலு முறங்குவதெதற்காக வென்று எழுப்புகிறது.

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லஞ் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றி
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரு மறிந்தேலோ ரெம்பாவாய் 12

கனைத்து-கூப்பிட்டுக்கொண்டு
இளம் கற்று எருமை-இளங்கன்றுள்ள எருமை
கன்றுக்கிரங்கி-தன் கன்றின்விஷயத்தில்-தயையுண்டாகி
நினைத்து-அவற்றை நினைத்து
முலைவழியே-ஸ்தநபாரங்களாலே
பால்நின்றுசோர-பால் இடைவிடாமல்பெருக
நனைத்து-ஈரமாக்கி
இல்லம்-க்ருஹமெல்லாம்
சேறாக்கும்-சேறாகப்பண்ணும்
நல் செல்வன்-நல்ல ஸம்பத்துடையவனுடைய
தங்காய்-ஸோதரியானவளே
பனி-பனியானது
தலைவீழ-தலைமேலேவீழ
நின்வாசல் கடைபற்றி-உன்வாசல்படியைப் பிடித்துக்கொண்டு
சினத்தினால்-கோபத்தினால்
தென்னிலங்கை-அழகிய இலங்கைக்கு
கோமானை-ராஜாவான ராவணனை
செற்ற-ஸம்ஹரித்த
மனத்துக்கு இனியானை-மநஸ்ஸுக்கு போக்யநாதனான சக்ரவர்த்தி திருமகனை
பாடவும்-பாடச்செய்தேயும்
நீவாய் திறவாய்-வாயைத்திறவாமலிருக்கிறாய்
இனித்தான் எழுந்திராய்-இனியாயினும் நித்திரையைவிட்டெழுந்திருப்பாய்

ஈதென்ன பேருறக்கம் இது என்ன பெரிய நித்திரை
அனைத்தில்லத்தாரும் அறிந்து-எல்லாப் பெண்களுமறிந்தார்கள்
ஏல் ஓர்-தருந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

தா - ம்:—ஒரு க்ஷணமும் கண்ணனை விட்டுப் பிரியாது பின் தொடர்ந்து பரிவோடு நோக்கிக்கொண்டிருப்பானொருவனது தங்கையைக்கிட்டி நாங்கள்பனியில் நின்றுகொண்டு ஸ்ரீ ராமாவதார விருத்தாந்தத்தைப் பாடிக்கொண்டிருக்கவும் நீ வாய்திறக்கவில்லையே ஊரரெல்லாரும் விழித்துக்கொண்டார்கள். இனியாவது நீ யெழுந்திருப்பாயாக என்று எழுப்புகிறது.

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா வரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளியெழுந்து வியாழ முறங்கிற்று!
புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக் கண்ணினுய்
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால்
கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.

புள்ளின்வாய் கீண்டானை-பகாஸுரனுடைய வாயைப்பிளந்தவனை
பொல்லா-துஷ்டனான
அரக்கனை-ராக்ஷஸனான ராவணனை
கிள்ளிக்களைந்தானை-த்ருணப்ராயமாகக்கிள்ளி எறிந்த சக்ரவர்த்தி திருமகனுடைய
கீர்த்திமை-வீரசரிதத்தை
போய் பாடிப்போய்-பாடிக்கொண்டு
பிள்ளைகளெல்லாரும்-எல்லாப் பெண்பிள்ளைகளும்
பாவைக்களம்-ஸம்கேதஸ்தலம்
புக்கார்-பிரவேசித்தார்கள்
வெள்ளி எழுந்து-ஸுக்ரனுதயமாய்
வியாழம்-ப்ருஹஸ்பதி
உறங்கிற்று-அஸ்தமித்தான்
புள்ளுஞ் சிலம்பினகாண்-பக்ஷிகளுங் கூப்பிடுகிறது
போதரிக்கண்ணினாய்-புஷ்பத்திலே யிருக்கிற வண்டுக்கு ஸத்ருசமான நேத்ராங்களையுடையவளே

குள்ளக்குளிர-அத்யந்தம் குளிரும்படியாக
குடைந்து-அவகாஹித்து
நீராடாதே-தீர்த்தமாடாதே
பள்ளிக்கிடத்தியோ-ஸயநத்தில் நித்ரிக்கிறுயோ
பாவாய்நீ-அழகிய பெண்ணேநீ
நன்னாளால்-நல்லதினத்திலே
கள்ளம்தவிர்ந்து-கபடத்தை விட்டு
கலந்து-எங்களோடேகூடவந்து கலக்கவேண்டும்
ஏல் ஓர்-தகுந்த ஒப்பற்ற [கிறது
எம்பாவாய்-எமது நோன்பு முடி

தா - ம்:—ஸ்ரீராமாயணமும் பாரதமும் ஸ்ரீபாஞ்சராத்திரமு மெல்லாம் பாடினோம். பெண்களெல்லாரும் ஸங்கேதஸ்தானம் போய்ச்சேர்ந்தார்கள். பிருஹஸ்பதி அஸ்தமித்தது. சுக்ரன் உதயமாயிற்று. பறவைகள் உணர்ந்து கூவுகின்றன. எல்லாரும்கூடிக் குளிரக்குளிர நீராடவேண்டியிருக்க நீ இங்குறங்குவதோ, கபடத்தைவிட்டுக் கலந்தெழுந்து வாவென்று கண்ணழகுடையாளொருத்தியை யெழுப்புகிறது.

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினகாண்
செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயிற் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும்
நங்கா யெழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கொடுசக்கர மேந்துந் தடக்கையன்
பங்கயக்கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்.

உங்கள்-உங்களுடைய
புழக்கடைத்தோட்டத்து-புழக்கடைத் தோட்டத்தின்கண்
வாவியுள்-கிணற்றிலே
செங்கழுநீர்-செங்கழுநீர் புஷ்பமானது
வாய்நெகிழ்ந்து-முகவிகஸிதமாய்
ஆம்பல்-நீலோற்பலபுஷ்பமான
வாய்கூம்பினகாண்-முகுளிதமாய்த்து
சேங்கல்பொடி-காவிப்பொடி துவைத்த [ணி
கூறை-காஷாயாம்பரதரம்பண்
வெண்பல்-ஸ்வேததந்தங்களையுடைத்தான [யாஸிகள்
தவத்தர்-தபோவேஷரான ஸந்

தங்கள்-தங்களுடைய
திருக்கோயில்-ஆலயங்களில் [க
சங்கிடுவான்-குச்சிகொண்டுவாங்
போகின்றார்-போகாதநின்றனர்
எங்களை-எங்களை
முன்னம்-முன்னதாக
எழுப்புவான்-எழுப்புகிறதற்காக
வாய்பேசும்-வார்த்தைசொன்ன
நங்காய்-பூர்ணயானவளே
எழுந்திராய்-எழுந்திருப்பாய்
நாணாதாய்-வெட்கமில்லாதவளே
நாவுடையாய் அன்றிக்கே வாயா
டியானவளே [டு
சங்கொடு-ஸ்ரீபாஞ்ச ஜந்யத்தோ
சக்கரம்-திருவாழியையும் [ற
ஏந்தும்-தரித்துக்கொண்டிருக்கி
தடக்கையன்-கம்பீரமான ஹஸ்
தங்களையுடைய
பங்கயக்கண்ணனை-புண்டரீகா
க்ஷனை
பாட-பாடுகிறதற்கு எழுந்திராய்
எல் ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடி
கிறது.

தா-ம்:—உங்கள் வீட்டுத் தோட்டத்தில் செங்கழுநீர் மலர்கள் மலர்ந்தன, ஆம்பல்குவிந்தன. ஸந்நியாஸிகள் திருவாராதனம் செய்யப்போகிறார்கள். எங்களை யெல்லாம்நீயே யெழுப்புவதாகச் சொன்னாயே. நன்றாக நிறைவேற்றினை. வெட்கமில்லையோ எது எவ்வாறானாலும் உன் சொல்லினிமை பெரிது. கண்ணனைப் பாடிக்கொண்டெழுந்திராயென்று ஒருத்தியையெழுப்புகிறது.

எல்லே யிளங்கிளியே யின்ன முறங்குதியோ
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீபோதா யுனக்கென்ன வேறுடையை [கொள்
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்
வல்லானைக் கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.

எல்லே-ஏஹோவாராய்
இளங்கிளியே-பால்யத்தையுடை
த்தான கிளிபோலே பேசுகிற
வளே
இன்னமுறங்குதியோ-இன்ன
மும் நித்ரிக்கிறாயோ
சில்லென்றழையேல்மின்-சிலுக்
கு சிலுக்கென்றழைக்கவேண்டா

நங்கைமீர்-பூர்ணமானவர்களே
போதருகின்றேன்-வருகிறேன்
வல்லை-சாமர்த்தியமானவளே
உன்கட்டுரைகள்-உன்னுடைய
சமத்காரவார்த்தைகளையும்
பண்டே-பூர்வமே
உன்வாயறிதும்-உன்வாயாடித்
தனத்தையும் நாங்களறிந்திரு
க்கிறோம்
வல்லீர்கள்-ஸமர்த்தர்கள்
நீங்களே-நீங்களேயாகவேணும்
நானேதானாயிடுக-நான்தானே
யாயிருக்கட்டும்
ஒல்லை-சீக்கிரமாக
நீபோதாய்-நீவாராய்
உனக்கென்னவேறுடையை-உ
னக்கு வேறு அநுபவந்தானெ
ன்ன
எல்லாரும்-எல்லாப்பெண்களும்
போந்தாரோ-வந்தார்களோ
போந்தர்-வந்தார்கள்
போந்தெண்ணிக்கொள்-வந்து க
ணித்துக்கொள்
வல்யானைகொன்றானை-பலத்
தையடைத்தான குவலயாபீ
டமென்கிற யானையை ஸம்
ஹரித்தவனை
மாற்றாரை-ஸத்ருக்களினுடைய
மாற்று-பலத்தை
அழிக்க-போக்கடிக்க
வல்லானை-ஸமர்த்தனை
மாயனை-ஆச்சர்யகுணசேஷ்டித
முடைய ஸர்வேஸ்வரனை
பாட-பாடும்பொருட்டுவாராய்
ஏல் ஓர். தகுந்த ஒட்பற்ற [கிறது.
ஏம்பாவாய்-எமது நோன்பு முடி

தா — ம்:—எல்லோரும் திரண்டுவந்த சேர்த்தியைக் காண வேண்டுமென்று கிடந்தா ளொருத்தியைக்கிட்டி, "கிளிமொழி யாய் இன்னு முறங்குவதோ" என்றார்கள். "இதோ வருகின் றேன், சலசல வென்னுதீர்கள்" என்றாள். "என்ன கமர்த்து பேசுகிறாய், யாம் உன்வாயை முன்பேயறிவோம்" என்றார்கள். "பேசுந்திறத்தில் வலியவர்கள் நீங்களே, நான்தனியேயாகி றேன்" என்றாள். "நீமாத்திரம் தனிமையாவதென், விரைவில் எழுந்துவா" என்றார்கள். "எல்லோரும் வந்துவிட்டார்களோ" என்றாள். "வந்துவிட்டார்கள் உனக்கு நம்பகமில்லையாகில் வந்து நீ எண்ணிக்கொள் நாமெல்லாருங்கூடி கண்ணனைப் பாடவேண் டும், வருவாயாக" என்றார்கள் என்கிறது.

கீழ்ப்பாட்டுக்களில் உத்தர ப்ரயுத்தரம் மறைந்து கிடக்கி றது. இதில் வெளிப்படையாயிருக்கிறது.

நாயக னாய்நின்ற நந்தகோ பனுடைய
கோயில்காப் பானேகொடித் தோன்றுந் தோரண
வாயில் காப்பானே மணிக்கதவந் தாள்திறவாய்
ஆயர்சிறுமிய ரோமுக் கறைபறை
மாயன் மணி வண்ண னென்னெலேவாய் நேர்ந்தான்
தூயோமாய் வந்தோந் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே யம்மாநீ
நேச நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்.

நாயகனாய்நின்ற- ஸ்வாமியாயிருக்கிற
நந்தகோபனுடைய - நந்தகோபனுடைய
கோயில்காப்பானே - திருமாளிகையை காவல்கார்க்கிறவனே
கொடி தோன்றும்-ஐயத்வஜம் கட்டின
தோரண-மங்களார்த்தமாக தோரணங்கள் கட்டின
வாசல்-திருவாசலை
காப்பானே-காக்குமவனே
மணிக்கதவம் - மாணிக்கக் கதவினுடைய
தாள்-பூட்டை
திறவாய்-திறக்கக்கடவாய்
ஆயர்-இடையருடைய
சிறுமியரோமுக்கு-பெண்பிள்ளைகளான எங்களுக்கு
அறை பறை-வாத்ய விசேஷமான கைங்கர்யத்தைத்தருகிறேமென்று
மாயன்-குண சேஷ்டிதனை
மணிவண்ணன் - மாணிக்கவர்ணனை க்ருஷ்ணன்
நென்னலே-நேற்றே
வாய்நேர்ந்தான் - அருளிச்செய்தான்
தூயோமாய் வந்தோம்-பரிசுத்தராய் வந்தோம்
துயிலெழப்பாடுவான் - நித்ரையைவிட் டெழுந்திருக்கும்படி பாடவந்தோம்
வாயால்-வார்க்காலே
முன்ன முன்னம்-முதல்முதல்
மாற்றாதே-தடுக்காதே
அம்மா-ஸ்வாமியானவளே
நீ-நீ
நேச-ஸ்நேஹத்தையுடைய
நிலைக்கதவு-நிலையிலேயிருக்கிற கதவை
நீக்கு-திறக்கவேண்டும்
எல்ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) இப்படி ஒவ்வொருத்திப் பத்து மாளிகையாக எழுப்ப ஐந்து லக்ஷம் குடியில் உள்ள பெண்களும் உணர்ந்து ஒன்று சேர்ந்து ஸ்ரீநந்தகோபர் திருமாளிகைக்கு வந்து

திருகோயில் காப்பானை யெழுப்பி அவனநுமதி பெற்று உள்ளே சென்று திருவாசல் காப்பானைக்கிட்டி இடைப்பெண்களாகிய வெங்களுக்கு நோன்புக்குப் பறைதருவதாகக் கண்ணன் நேற்றே அருளிச்செய்தான். அவனைத் திருப்பள்ளியுணர்த்தும் பொருட்டு பரிசுத்தமான மனதோடு வந்தோம். முன்ன முன்னம் நீவாயாலொன்றும் சொல்லித் தடுக்காதே கொள். தாள்திறந்து கதவை நீக்குவாயாக வென்று வேண்டுகிறது. 16

அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா வெழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாங் கொழுந்தே குலவிளக்கே
எம்பெருமாட்டி யசோதா யறிவுறாய்
அம்பர மூடறுத் தோங்கி யுலகளந்த
உம்பர் கோமானே யுறங்கா தெழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா
உம்பியுநீயு முறங்கேலோ ரெம்பாவாய்.

அம்பரமே-வஸ்திரமும்
தண்ணீரே-குளிர்ந்த ஜலமும்
சோறே-அந்நமும்
அறஞ்செய்யும்-தாநம்பண்ணுகிற
எம்பெருமான்-எங்களுக்கு ஸ்வாமியான
நந்தகோபாலா-ஸ்ரீநந்தகோபரே
எழுந்திராய்-எழுந்திரும்
கொம்பனார்க் கெல்லாம்-பெண்களுக்கெல்லாம்
கொழுந்தே-ப்ரதானமானவளே
குலவிளக்கெ-இடையர்க்குலத்துக்கெல்லாம் தீபம்போலே ப்ரகாஸமானவளே
எம்பெருமாட்டி- எங்களுக்கு ஸ்வாமிநியானவளே

யசோதாய்-யசோதையே
அறிவுறாய்-உணர்த்தாய்
அம்பரம்-ஆகாயத்தை
ஊடறுத்து-இடையறுத்து
ஓங்கிஉலகளந்த-விஸ்வரூபங்கொண்டு உலகத்தை யளந்த
உம்பர்கோமானே - தேவாதிதேவனே
உறங்கா தெழுந்திராய்-நித்திரையாமலெழுந்திருக்காய்
செம்-ரத்தினமயமான
பொன்கழல்-ஸ்ப்ருஹணீய மான விருது வண்டயங்களை
அடி-திருவடிகளுடைய
செல்வா-ஸம்பத்தையுடைய
பலதேவா-பலராமனே

உம்பியும்-தம்பியும்
நீயும்-நீயும்
உறங்கேல் - நித்திரைபோகாம லெழுந்திருக்கவேண்டும்
ஏல் ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய் -எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) ஸ்ரீநந்தகோபரையும் யசோதைப்பிராட்டியையும் கண்ணனையும் பலராமனையும் எழுப்புகிறது. 11

உந்து மதகளிற்ற னோடாத தோள்வலியன்
நந்தகோ பாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தங் கமழுங் குழலீ கடைதிறவாய்
வந்தெங்குங் கோழி யழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேற் பலகால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக் கையாற் சீரார் வளையொலிப்ப
வந்துதிறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

உந்து மதகளிற்றன்-ஸ்ரவிக்கிற மதஜலத்தையுடைய ஆனைத்தைத் தள்ளும் பலத்தைக் கொண்டிருக்கிற
ஓடாத-ஓடாத
தோள்வலியன்-புஜபலமுடைய
நந்தகோபாலன் - நந்தகோபருடைய [ன
மருமகளே-மணாட்டுப் பொன்னா
நப்பின்னாய்-நப்பின்னைபிராட்டி
கந்தங்கமழும்-அத்யந்தம் பரிமளத்தைக்கொண்டு வீசுகிற
குழலீ-அளகபாரத்தை யுடையவ
கடை-தாளை [ளே
திறவாய்-திறக்கக்கடவாய்
வந்து-ஸ்வஸ்தானத்தில் நின்றும் புறப்பட்டுவந்து
எங்கும்- ஸர்வதிக்குகளிலும்
கோழியழைத்தனகாண் - கோழி கூவுகிறதுகாண்
மாதவிப்பந்தல் மேல்-வளைந்தகால மல்லிகைப்பந்தல்பேரில்
பல்கால்-அநேகதரம்
குயில்-கோகிலங்களுடைய
இனங்கள்-ஸமூஹங்கள் [ளும்
கூவினகாண் - கூப்பிடுகிறதுகா
பந்து-செண்டினாலே
ஆர்-பூர்ணமான
விரலி-விரல்களையுடையவளே
உன்மைத்துனன் - உன்பர்த்தாவினுடைய
பேர்பாட-திருநாமத்தைப் பாடுகைக்கு
செந்தாமரைக்கையால் - சிவந்த தாமரைக்கு ஸத்ருஸமானகையாலே

சீரார்-ஸௌந்தர்ய பூரிதமான	வந்து-நீதானே வந்து [டும்
வளை-கங்கணங்கள்	திறவாய்-கதவைத் திறக்கவேண்
ஒலிப்ப-கோஷிக்க [ண்டு	ஏல்ஓர்-தகுந்த ஒப்பற்ற [கிறது.
மகிழ்ந்து-ஸந்தோஷித்துக் கொ	எம்பாவாய்-எமது நோன்பு முடி

(தா-ம்.) கோழி எங்கும் கூவின, மல்லிகைப்பந்தலில் குயில்கள் கூவுகின்றன. உனது நாயகனது திருநாமத்தை நாங்கள்பாடும்படி எங்களுக் கருள்செய்து நீ நாலடி நடந்துவந்து வளையல்கள் ஒலிக்குமாறு செந்தாமரைக்கையால் கதவைத்திறப்பாயாகவென்று நப்பின்னைப்பிராட்டியை வேண்டி யெழுப்புகிறது. 18

குத்து விளக்கெரியக் கோட்டுக்காற் கட்டிலின்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல்நப் பின்னை கொங்கைமேல்
வைத்துக்கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய் நீயுன் மணாளனை
எத்தனை போதுந் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய்.

குத்துவிளக்கெரிய-குத்து விளக்குப்ரகாஸிக்க [யுடைய	நப்பின்னை-நப்பின்னைப் பிராட்டியினுடைய
கோட்டுக்கால் - தந்தக்கால்களை	கொங்கைமேல்-திருமுலைத்தடங்கள்
கட்டில்மேல்-தல்பத்தின் மேலே	மேலே [கள்
மெத்தென்ற-மிருதுவான	வைத்துக்கிடந்த - வைத்துக்கொண்டு கிடக்கிற
பஞ்ச-அழகுமுதலிய அஞ்சுகுணங்களையுடைத்தான	மலர்-விகஸிதமான
சயநத்தின்மேல் - திருப்பள்ளியின் [லே	மார்பா - வக்ஷஸ்தலத்தையுடையவளே [ருளாய்
ஏறி-ஏறியிருந்து	வாய் திறவாய்-திருவாய் மலர்ந்த
கொத்தலர் பூங்குழல்-கொத்துக்களால் விகஸிக்கப்பட்ட புஷ்பங்களை யுடைத்தான கேஸங்களையுடைய	மைதடங்கண்ணினாய்-மையணிந்த விசாலமானகண்களையுடையவளே

நீ-நீ
உன்மணாளனை - உன்னுடையநாகனை
எத்தனைபோதும்-ஒரு அற்பகாலமாகிலும்
துயிலெழ-நித்திரையினின்றுமெழுந்திருக்க [லை
ஒட்டாய்காண்-ஸம்மதிக்கிற தில்
எத்தனையேலும் - அற்பகாலமும்
பிரிவு-அவனை பிரிந்து
ஆற்றகில்லாயால்-ஸஹிக்க மாட்டாமலிருக்கிறாய்
ஆல்-ஆச்சர்யம்
தத்துமென்று-வ்யவஹாரமன்று
தகவு அன்று-ஸ்வரூபமன்று
ஏல் ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) நப்பின்னைப்பிராட்டிவந்து கதவைத்திறக்கப் புக, நம்மவர்க்கு இவள் திறக்க முற்பட்டாளாக வொண்ணு தென்று மற்கட்டாக இவளைக் கட்டிப் படுக்கையில் கிடத்தித் தானும் மயங்கிவிட்ட கண்ணனை நோக்கி "நீ ஒரு வார்த்தை அருளிச்செய்யலாகாதோ" வென்ன, அவன் வார்த்தை சொல்லப்புக, நப்பின்னைப்பிராட்டி ஆர்த்த விஷயத்தில் இவன் நம்மில் முற்பாடனாக வொண்ணுதென்று நினைத்து சைகைசெய்து கழுத்தைக்கட்டி அமிழ்த்த, நீ பெண்ணுயிருந்தும் பெண்வருத்த மறியாது இப்படி தள்ளுவதுதகாது, ஒருக்ஷணமும் பிரிய மாட்டுகிறதில்லையே, எத்தனை போதுறங்குவதோ என்கிறார்கள் என்கிறது. 19

முப்பத்து மூவ ரமரர்க்கு முன்சென்று
கப்பந் தவிர்க்குங் கலியே துயிலெழாய்
செப்ப முடையாய் திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பங் கொடுக்கும் விமலா துயிலெழாய்
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்
உக்கமுந் தட்டொளியுந் தந்துன் மணாளனை
இப்போதே யெம்மை நீராட்டேலோ ரெம்பாவாய்.

220769

முப்பத்து மூவர்-முப்பத்து முக்கோடி
அமரர்க்கு-தேவர்களுக்கும்
முன்சென்று-முன்பாக தண்டயாத்திரைபண்ணி
கப்பம்-கப்பத்தை
தவிர்க்கும்-போக்குகிற
கலியே-பலஸாலியே
துயிலெழாய்-நித்திரையைவிட்டெழுந்திரு
செப்பமுடையாய்-க்ஷேமத்தையுடையவனே
திறலுடையாய்-அவர்கள் விரோதிகளை யடக்கும் வல்லமையுடையனுய்
செற்றார்க்கு-ஸத்ருக்களுக்கு
வெப்பம்-பயத்தை
கொடுக்கும்-தருகிற
விமலா-நிர்மலனே
துயிலெழாய்-நித்திரைவிட் டெழுந்திரு
செப்பு-கலஸத்துக்கு
அன்ன-ஸத்ருஸமான
மென்-ம்ருதுவான [ய
முலே-திருமுலேத்தடங்கலேயுடை
செவ்வாய்-சிவந்த திருப்பவளமுடைய
சிறு-ஸூக்ஷ்மமான
மருங்குல்-மத்யப்ரதேஸமுடைய
நப்பின்னைநங்காய்-நப்பின்னைப்பிராட்டியென்றுந் திருநாமமுடைய பூர்ணையான
திருவே-ஸ்ரீயே
துயிலெழாய்-நித்திரையைவிட்டெழுந்திராய்
உக்கமும்-திருவாலவட்டமும்
தட்டொளியும்-வெங்கலக்கண்டியும்
தந்து-கொடுத்து [யகனை
உன்மணளனை-உன்னுடையநா
இப்போதே-இந்தவேளையிலே
எம்மை-எம்மை
நீராட்டு-நீராட்டிவைக்கக்கடவாய்
ஓர்-தகுந்த ஒப்பற்ற [ய்
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) இருவரும் வாய்திறவா திருந்தவாறே திருவுள்ளம் புண்பட்டதோ என்று பயந்து முன்னே ஆர்த்த பக்ஷனத்துக்காக நீபெரும்பாடு பட்டாயல்லேயோ, இன்றும் எங்களுக்காகத் திருப்பள்ளி யுணர்ந்தருளலாகாதோ என்று கண்ணனையும், "எங்களுக்கு வேண்டிய உபகரணங்களைக் கொடுத்து எங்களை நோன்புக்கு நீராடச் செய்ய வேண்டு' மென்று நப்பின்னைப் பிராட்டியையும் வேண்டுகிறது. 20

எற்ற கலங்க ளெதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால் சொரியும்வள்ளற் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே யறிவுறாய்
ஊற்ற முடையாய் பெரியா யுலகினில்

தோற்றமாய் நின்ற சுடரே துயிலெழாய்
மாற்றா ருனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்துன் னடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.

ஏற்ற-ஏந்தின
கலங்கள்-குடங்கள்
எதிர்பொங்கி-எதிராகப்பொங்கி
மீதளிப்ப-மேலேவழிந்துவர
மாற்றாதே-இடைவிடாமல்
பால் சொரியும்-பாலைப்பீச்சும்
வள்ளல் - கொடுக்குந்தன்மையுடைய
பெரும்-பெரிய
பசுக்கள்-ஆக்கள்
ஆற்ற-அதிகமாக
படைத்தான்-ஸம்தித்தவனுடையமகனே-பிள்ளையானவனே
அறிவுறாய்-தெளிவோடே எழுந்திராய்
ஊற்ற முடையாய் - ஆஸ்ாதப்பிரபாதமுடையவனே
பெரியாய்- ஸர்வஸ்வாமித்வபரனவனே
உலகினில்-பூமியிலே
தோற்றமாய்நின்ற- திருவவதரித்த
சுடரே-தேஜோமயனே
துயிலெழாய் - படுக்கையினின்றுமெழுந்திரு
மாற்றார்-ஸத்ருக்கள்
உனக்கு-உமக்கு
வலிதுலைந்து-பராஜிதராய்
உன் வாசற்கண்-உன்னுடைய அரண்மனைவாசலிலே
ஆற்றாது-பொறுக்கமாட்டாதே
வந்து-எல்லாரும் வந்து
உன்அடிபணியுமாப்போலே-தேவரீர் திருவடிகளுக்கு கைங்கர்யம் பண்ணுமாப்போலே [ணி
போற்றி-மங்களாஸாஸநம்பண்
யாம்வந்தோம்-யாம்வந்தோம்
புகழ்ந்து-ஸந்தோஷித்துக்கொண்டு
ஏல் ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) நாமெல்லோரும் சேர்ந்து கண்ணனை அர்த்திப்போம் வாருங்கோளென்று நப்பின்னைப்பிராட்டி அருளிச்செய்ய, எல்லாரும் சேர்ந்து அவன் குணங்களுக்குத் தோற்றார் தோற்றபடியே சொல்லிக்கொண்டு,உன் வலிமைக்குத் தோற்றுப் பகைவர் உன் வாசர்படியில்வந்து நின்று உன்னைத் தொழுமாப் போல நாங்கள் அபிமானத்தைவிட்டு தாஸபூதர்களாய் உனக்குமங்களாசாஸநம் செய்யவந்தோம், நீ திருப்பள்ளி யுணர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறது.

அங்கண்மா ஞாலத் தரச ரபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட்டிற்கீழே
சங்கமிருப்பார் போல்வந்து தலைப்பெய்தோம்
கிண்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறிச்சிறிதே யெம்மேல் விழியாவோ
திங்களு மாதித்தியனு மெழுந் தாற்போல்
அங்க ணிரண்டுங்கொண் டெங்கண்மே னோக்குதியேல்
எங்கன்மேற் சாப மிழுந்தேலோ ரெம்பாவாய்.

அங்கண்-அழகான ஸப்தத்வீபங்களையுடைய
மாஞாலத்து-மஹாப்ருதிவியில்
அரசர்-ராஜர்கள்
அபிமானபங்கமாய்வந்து-பக்தாபிமானிகளாய்வந்து
நின்-தேவரீருடைய
பள்ளிக்கட்டிற்கீழே-ஹம்சதூளிகா கல்பத்தின்கீழே
சங்கம்-ஸமூஹமாய்
இருப்பார்போல்-இருக்கிறவர்களைப்போலே
வந்து-எல்லாரும்வந்து [றோம்
தலைப்பெய்தோம் - கிட்டப்பெற்
கிண்கிணி-சதங்கைபோலே
வாய்ச்செய்த-விகவிதமான
தாமரைப்பூப்போலே- தாமரைப் புஷ்பத்தைப்போலே
செங்கண்-சிவந்திருக்கிற கண்மலர்களால்
சிறிச்சிறிதே-கொஞ்சங் கொஞ்சமாக
எம்மேல்-எங்கள்மேலே [யோ
விழியாவோ கடாக்ஷிக்கிறதில்லை
திங்களும்-சந்திரனும்
ஆதித்தியனும்-சூர்யனும்
எழுந்தாற்போல் - உதயமானாப்போலே
அம்-அழகான
கண்-திருக்கண்மலர்
இரண்டு-இரண்டையுங் கொண்டு
எங்கள்மேல்-எங்களுடைய விஷயத்தில் [கில்
நோக்குதியேல் கடாக்ஷிப்பாயா
எங்கள்மேல் சாபம்-எங்களைப்பற்றியிருக்கிறபாபங்கள்
இழந்து-நசித்துப்போம்
எல் ஓர்-தகுந்ததைப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) இவர்களபிப்பிராயத்தை நன்றாயறிய வேண்டுமென்று கண்ணன் பேசாதே கிடக்க, நாங்கள் அபிமானத்தை விட்டோம். போக்கற்று நிற்கிறோம். அநந்யார்ஹைகளாய் வந்தோம். தாமரைக்கண்ணால் நோக்கியருளவேணும். சந்த்ரஸூர்யர்கள் போன்ற கண்களினால் கடாக்ஷித்தருளினால் எங்கள் துயரமெல்லா மாறப்பெறுவோம்" என்று பிரார்த்திக்கிறது.

மாரி மலைமுழஞ்சில் மன்னிக்கிடந் துறங்கும்
சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமாபோலே நீ பூவைப்பூ வண்ணாவுன்
கோயினின்றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்காசனத் திருந்து யாம்வந்த
காரிய மாராய்ந் தருளாலோ ரெம்பாவாய்.

மாரி-வர்ஷகாலத்தில்
மலை-பர்வதத்தினுடைய
முழஞ்சில் பிலத்திலே
மன்னி-நித்யாவாஸம்பண்ணி
கிடந்து-படுத்துக்கொண்டு
உறங்கும்-நித்ரிக்கிற
சீரிய-ஸ்ரேஷ்டமான
சிங்கம்-ஸிம்ஹம்
அறிவுற்று-தெளிவுற்றெழுந்திருந்து
தீவிழித்து-கோபாக்நிஜ்வலிக்க கண்களைத்திறந்து
வேரிமயிர்-உசிதகந்த முடைய மயிர்களானது
பொங்க-ஊர்த்தவமாக வெழுப்ப
எப்பாடும்-நாலுபக்கமும்
பேர்ந்து-உடலசைந்து
உதறி-அவயவங்களைஉதறிக்கொண்டு
மூரிநிமிர்ந்து-தீர்க்கமாக உடம்பு முறித்து
முழங்கி-ஸிம்ஹநாதம்பண்ணி
புறப்பட்டு - பிலத்வாரத்திலிருந்து புறப்பட்டு
போதருமாபோலே - வருகிறது போல
நீ-நீயும்
பூவைப்பூ - அதஸீகுஸுமஸத்ருஸமான
வண்ணா- காந்தியையுடையவனே
உன்-தேவரீருடைய
கோயில்நின்று-திருமாளிகையிலிருந்து
இங்ஙனே-இவ்வளவும்
போந்தருளி-எழுந்தருளி
கோப்புடைய-ஜயவிலமான
சீரிய சிங்காசனத்திலிருந்து - ஸ்ரேஷ்டமான ஸிம்ஹாசனத்திலிருந்துகொண்டு
யாம்-நாங்கள்
வந்த-வந்திருக்கிற
காரியம்-கார்யத்தை
ஆராய்ந்து-விசாரித்து
அருள்-க்ருபைபண்ண வேணும்
ஏல் ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) நம்பின்னைப்பிராட்டி பரிகரமாயிருந்து வைத்து போக்கற்று நிற்கிறோம் என்பதோ, நீங்கள் போரநொந்தீர்களை

உங்கள் காரியம் செய்து தருகிறோம், ஆக வேண்டுவதென்ன, என்று கண்ணன் கேட்டருள, "இப்படி குன்னுங் குரிச்சியாகக் கேட்கவமையாது, மறைந்த காலத்தில் குகையில் உறங்கும் சிங்கம் உணர்ந்து உடம்பையுதறி நிமிர்ந்து புறப்பட்டு வருமாபோலே உன் கோயிலிலிருந்து இங்கே எழுந்தருளி பேரோலக்கமாக இருந்து எங்கள் அபேக்ஷிதம் கேட்கவேண்டும்" என்று பிரார்த்திக்கிறது. 23

அன்றிவ் வுலக மளந்தாயடி போற்றி
 சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
பொன்றச் சகட முதைத்தாய் புகழ்போற்றி
 கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்ற
குன்று குடையா யெடுத்தாய் குணம்போற்றி
 வென்று பகைகெடுக்கு நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான்
 இன்றுயாம் வந்தோ மிரங்கேலோ ரெம்பாவாய்.

அன்று-வாமனாவதாரகாலத்திலே
இவ்வுலகம்-இந்தலோகங்களை
அளந்தாய்-அளவிட்ட வுன்னுடைய
அடி-திருவடிகளுக்கு
போற்றி-மங்கலமாகக்கடவது
சென்று-தண்டயாத்திரைபண்ணி
அங்கு-அவ்விடத்திலே
தென்னிலங்கை-தர்ஸநீயமான லங்கையை
செற்றாய்-அராக்ஷஸமாகப் பண்ணின தேவரீருடைய
திறல்-பாகுபலத்துக்கு
போற்றி-மங்கலமாகக்கட்வது
பொன்ற-நாஸமாம்படி.
சகடம்-ஸகடாஸுரனை
உதைத்தாய்-திருவடிகளால் உதைத்தான்
புகழ்-ஸாமர்த்யத்துக்கு
போற்றி-மங்களமாகக்கடவது
கன்று-கன்றாய்வந்து வத்ஸாஸுரனை
குணிலா-எறிதடியாக
எறிந்தாய்-வீசினவனே
கழல்-திருவடிகளுக்கு
போற்றி-மங்களமாகக்கடவது
குன்று-பர்வதத்தை
குடையாய்-க்ஷத்ரமாக
எடுத்தாய்-ஏந்தின உன்னுடைய
குணம்-குணத்துக்கு
போற்றி-மங்களமாகக்கடவது
வென்று-ஜயித்து

பகை-ஶத்ருக்களை
கெடுக்கும்-ஸம்ஹரிக்கிற
நின்-தேவரீருடைய
கையில்-ஸ்ரீஹஸ்தத்திலேயிருக்
வேல்-ஆயுதத்துக்கு [கிற
போற்றி-மங்களமாகக்கடவது
என்றென்று-அநவரதமும்
உன்-தேவரீருடைய
சேவகமே-பராக்கிரமமே
ஏத்தி-ஸ்தோத்ரம் பண்ணி
பறை கொள்வான்-ப்ராப்யத்தை
லபிக்கும் படியாக
இன்று-இன்றைக்கும்
யாம்-நாங்கள்
வந்தோம்-வந்திருக்கிறோம்
இரங்கு-க்ருபைபண்ணு
ஏல் ஓர்-தகுந்ததைப்பற்ற [கிறது.
எம்பாவாய்-எமது நோன்பு முடி

(தா-ம்.) இவர்கள் வேண்டிக் கொண்டபடி ஆஸ்தான மண்டபத்தளவும் எழுந்தருள, அவ்வழகைக் கண்டு வந்த காரியத்தை மறந்து "உலகமளந்த உன்திருவடிகளும் இலங்கையழித்த வீரமும்சகடமும் சிதைத்த சேவகமும் கன்றால் விளங்கனியுதிர்த்த வித்தகமும் கோவர்தனத்தைக் குடையாக எடுத்த குணமும் பகையழிக்கும் படையும் வாழியென்று உனக்குப் பல்லாண்டு பாடிப்பறைகொள்ள வந்தோம், நீ அருள் செய்ய வேண்டும் என்கிறார்கள் என்கிறது. 24

ஒருத்தி மகனாய்ப் பிறந்தோ ரிரவில்
ஒருத்தி மகனா யொளித்து வளரத்
தரிக்கிலா னாகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே யுன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமுஞ் சேவகமும் யாம்பாடி
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

ஒருத்தி மகனாய்-அத்விதீயையான தேவகி தேவிக்கு புத்ரனாய் [
பிறந்து-அவதரித்து
ஓரிரவில்-ஒரு ராத்ரியிலே
ஒருத்தி மகனாய்-அசோதைப்பிராட்டிக்கும் குமாரனாய்
ஒளித்து-மறைத்து
வளர-வ்ருத்தியடையா நிற்க
தரிக்கிலானாகி-பொறுக்கமாட்டதவனாய்
தான் தீங்கு நினைந்த-தான் த்ரோஹத்தை நினைத்த

கருத்தை-அபிப்ராயத்தை
பிழைப்பித்து-நசிப்பித்து
கஞ்சன்-கம்ஸனுடைய
வயிற்றில்-கர்ப்பத்திலே
நெருப்பென்ன-நெருப் பென்னு ம்படியாக
நின்ற-எழுந்தருளியிருந்த
நெடுமாலே - வ்யாமோஹத்தை யுடையவனே
உன்னை-தேவரீரை
அரித்தித்து-அர்த்தித்து
வந்தோம்-வந்திருக்கிறோம்
பறைதருதியாகில்-ப்ராப்யத்தை தந்தாயாகில்
திருத்தக்க - உன்னுடைய விக்ரஹாநுபவம் பண்ணதக்க
செல்வமும்-ஸம்பத்தையும்
சேவகமும்-ப்ராக்ரமத்தையும்
யாம்-நாங்கள்
பாடி-சீர்த்தித்து
வருத்தமுந் தீர்ந்து-எங்களுடை யவிசனமுந் தீர்ந்து
மகிழ்ந்து-ஸந்தோஷிக்கிறோம்
ஏல் ஓர்-தகுந்தஒப்பற்ற [கிறது.
எம்பாவாய்-எமது நோன்பு முடி

(தா - ம்.) ஓரே இரவில் ஒருத்திக்கு மகனாய்ப்பிறந்து மற்றொருத்திக்குப் பிள்ளையாய் ஒளித்துவளர்ந்து, உனக்குத் தீங்கு செய்ய நினைத்த கஞ்சன் நினைவு தவறும்படி செய்த நீயே எங்கள் பிரதி பந்தங்களைப்போக்கிப் பறை தந்து நோன்பை நிறைவேற்றிவைப்பாயாகில் உன் குணநிசயங்களைப்பாடி வருத்தம் தீர்ந்து மகிழப்பெறுவோ மென்று விண்ணப்பம் செய்கிறது.

25

மாலே மணிவண்ணா மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே;
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலி னிலையா யருளேலோ ரெம்பாவாய்.

மாலே-ஆஸ்ரிதவியாமோஹனாய்
மணிவண்ணா நீலரத்னம்போன்ற வடிவையுடையனாய்
மார்கழி நீராடுவான்-மார்கழி நீராடுகைக்கு
மேலையார்-பெரியோர்கள்.

செய்வனகள்-செய்யும்கார்யங்கள்
வேண்டுவன-வேண்டினவை
கேட்டியேல்-கேட்க வில்லையோ
ஞாலத்தை யெல்லாம்-பூமியெல்லாம்
நடுங்க-அதிரும்படி
முரல்வன-கோஷிக்கும்
பாலன்ன வண்ணத்து-பாலுக்கொப்பான வர்ணத்தையுடைய
உன்-தேவரீருடைய
பாஞ்சசன்னியமே போல்வன-ஸ்ரீபாஞ்ச ஜந்யத்துக்கு ஸத்ருசமான
சங்கங்கள்-சங்கங்கள்
போய்ப்பாடுடையனவே-விஸ்தாரமுற்றதுகளாயும்
சால-ச்லாக்யமான
பெரும்-பெரிதான
பறையே-வாத்ய விசேஷமும்
பல்லாண்டிசைப் பாரே-மங்களாசாஸநம் பண்ணுவார்களும்
கோலவிளக்கே-மங்களதீபமும்
கொடியே-த்வஜமும்
விதானமே-மேல்கட்டியும்
ஆலினிலையாய்-வடபத்ரசாயியான ஸர்வேஸ்வரனே
அருள்-க்ருபைபண்ணு
ஏல்ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

(தா-ம்) உங்கள் நோன்புக்கு வேண்டியவற்றை யெல்லாம் சொல்லுங்கோளென்று கண்ணன் கேட்டருள, "உனது பாஞ்ச சன்யம்போல் பகைவர் நடுங்கும்படி ஒலிக்கும் பென்னம்பெருத்த சங்கங்களும் மிகப்பெரிய பறையும் மங்களாசாஸநம் செய்பவர்களும் விளக்கும் கொடியும் மேற்கட்டியும் இது போன்றனமுன்னோர் கூறிய முறைபே நோன்புக்கு வேண்டியவையெல்லாம் கிருபை செய்யவேணுமென்று பிரார்த்திக்கிறது.

கூடாரைவெல்லுஞ்சீர்க் கோவிந்தா வுன்றன்னைப்
பாடிப்பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடும்புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போ மதன்பின்னே பால்சோறு
மூட நெய்பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

கூடாரை-சத்துருக்களை
வெல்லும்-ஜயிக்கிற
சீர்-கல்யாண குணங்களையுடைய
கோவிந்தா-கோரக்ஷகனானவனே
உன்தன்னை-தேவரீரை
பாடி-ஸ்தோத்ரம்பண்ணி
பறைகொண்டு-ப்ராப்யத்தைலபித்து
யாம்-நாங்கள்
பெறு-லபிக்கிற
சம்மானம்-ஸந்மானங்கள்
நாடு-லோகத்தார்
புகழும்-கீர்த்திக்கிற
பரிசினால்-பஹுமானத்தால்
நன்றாக-செவ்வையாக
சூடகமே - கைகளுக்கிடும் ஆபரணமும்
தோள்வளையே - தோளுக்கிடும் ஆபரணமும்
தோடே-காதுக்கிடும் ஆபரணங்களும்
செவிப்பூவே-கர்ண புஷ்பமும்
பாடகமே-சரண ஆபரணங்களும்
என்றனைய-என்று சொல்லப்படுகிற
பல்கலனும்-பஹுவிதாபரணங்களும்
யாமணிவோம்-நாங்கள் தரிக்கக்கடவோம்
ஆடை-வஸ்திரங்களை
உடுப்போம்-உடுக்கக் கடவோம்
அதன்பின்னே-அதற்குமேல்
பால்சோறு-பாலும் ஸாதமும்
மூட-முழுகும்படி
நெய்பெய்து-நெய்பரிமாரி
முழங்கைவழி வார-முழங்கையால் வழியும்படியாக
கூடியிருந்து - எல்லாரும் கூடியிருந்துகொண்டு
குளிர்ந்து-ஸுகிக்கவேணும்
ஏல் ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) நன்றே பெண்கள்நோற்றார்களென்று நாட்டார் கொண்டாட அவ்வவ் அவயவங்களில் நீ எங்களுக்கு ஆபரணங்களைப் பூட்டவேண்டும். ஆடையுடுத்தவேண்டும் மையெழுதவேண்டும். பிறகு எல்லோரும் கூட இருந்து நெய் மூடப்பெற்ற பாற்சோற்றை முழங்கை வழியாய் நெய் பெருகும்படிசந்தோஷத்தோடு பூசிக்கப் பெறவேண்டுமென்று, நோன்பு நோற்றபின்பு பெறக்கடவ வேண்டிய பேற்றைச் சொல்லுகிறார்கள்.

கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத வாய்க்குலத் துன்றன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா உன்றன்னோ

றவேல்நமக் கிங்கொழிக்க வொழியாது
அறியாத பிள்ளைகளோ மன்பினால் உன்றன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறியருளாதே
இறைவாநீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.

கறவைகள்-பசுக்களுடைய
பின்சென்று-பின்தொடர்ந்து
கானம்-காடு
சேர்ந்து-ப்ரவேசித்து
உண்போம் - தேஹயாத்ரைபண்ணிக்கொள்வோம்
அறிவு-ஜ்ஞாநம்
ஒன்றும்-அற்பமும்
இல்லாத-இல்லாத யாங்கள் [த
ஆய்க்குலத்து - ஆயர்குலத்துதித்
உன்றன்னை-தேவரீரை [த்த
பிறவிபெறுந்தனை-பிறப்பாகலபி
புண்ணியம்-உபாயம்
யாம்-நாங்கள்
உடையோம்-உண்டானவர்கள்
குறைவு-மனக்குறைவு
ஒன்றும் அற்பமும்
இல்லாத-இல்லாதிருக்கிற
கோவிந்தா-ஸ்ரீகிருஷ்ணனே
உன்தன்னோடு-தேவரீரோடு
உறவேல்-சம்பந்தம்
நமக்கும்-இவர்க்கும்
இங்கு-இவ்விடத்திலே
ஒழிக்க ஒழியாது - போக்கடிக்கப் போகாது
அறியாத-க்ஞானசூனியரான [ள்
பிள்ளைகளோம் - பெண்பிள்ளைக
அன்பினால்-ப்ரேமத்தால்
உன்தன்னை-தேவரீரை
சிறுபேர்-சிறியபேரால்
அழைத்தனவும்-அழைத்ததற்கு
சீறியருளாதே-கோபியாதேகொள்ளும்
இறைவா-ஸ்வாமீ
நீ-தேவரீர்
தாராய்-ப்ரஸாதித்தருளாய்
பறை-ப்ராப்யத்தை
எல் ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்) பசுமேய்ப்பதும் காட்டிற்குச்சென்று உண்பதுமாய்தேஹயாத்திரையே பெரிதாய்க்கொண்டதாயினும் நீவந்து பிறக்கும்படி பாக்கியம்செய்த ஆயர்குலத்தில் பிறந்தோம். எப்படிக்கும் நீ குறையொன்றுமில்லாதவன் உனக்கு மெங்களுக்கு முள்ள சம்பந்தத்தை ஒழிக்க உன்னாலுமாகாது க்ஞானமற்ற யாங்கள் அன்பேகாரணமாக உன்னைக் குறித்துப்பேசியவைகளிலுள்ள குற்றங்களைப் பொறுத்தருளி பறைதரவேண்டுமென்று அபராத க்ஷாபணம் செய்து கொள்ளுகிறது.

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்திற்பிறந்துநீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோ
டுற்றோமேயாவோ முனக்கே நாமாட்செய்வோம்
மற்றைநங்காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

சிற்றஞ்சிறுகாலே-அத்யந்தம் ப்ராதக் காலத்திலே
வந்து-எல்லாரும் வந்து
உன்னை-தேவரீரை
சேவித்து-ஸேவித்து
உன்-தேவரீருடைய
பொற்றாமரை -ஸ்ப்ருஹணீயமான தாமரைபோலேயிருக்கிற
அடியே-திருவடிகளை [ணுகிற
போற்றும்-மங்களாசாஸநம்பண்
பொருள்-அபிப்ராயம்
கேளாய்-கேளும்
பெற்றம்-பசுக்களை
மேய்த்து-ரக்ஷித்து
உண்ணும்-புஜிக்கிற
குலத்தில்-குலத்திலே
பிறந்து-திருவவதரித்து
நீ-தேவரீர் [யம்
குற்றேவல் - அந்தரங்க கைங்கர்
எங்களை-அடியோங்களை
கொள்ளாமல்-அங்கீகரியாமல்
போகாது-போகப்படாது

இற்றைப்பறை கொள்வான்-இந்தவாத்ய விசேஷம் கொள்ளுமவர்கள்
அன்று காண்-அன்றுகாணும்
கோவிந்தா-கோரக்ஷகனே
எற்றைக்கும்-என்றைக்கும்
ஏழேழ் பிறவிக்கும் - இருபத்தொரு ஜன்மங்களிலும்
உன்றன்னொடு-உன்னோடு
உற்றோமேயாவோம் -அநந்யார்ஹராயிருக்கவேணும்
உனக்கே நாம்-தேவரீருக்கே நாங்கள்
ஆட்செய்வோம்-பணிவிடை செய்யவேணும்
மற்றைநம்-வேறுவிஷயத்திற்செல்லும் எமது
காமங்கள்-இச்சைகளை
மாற்று-மாற்றிவிடவேண்டும்
ஏல் ஓர்-தக்க ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு இனிது முடிகிறது.

(தா - ம்.) நோன்பென்றோர் வியாஜத்தையிட்டு பறை பறை யென்று சொல்லிக்கொண்டு வந்தோமென்றாலும் எங்கள் கருத்து அதுவல்ல உஷகாலத்தில் வந்துன்னைத் தொழுது

உன் திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடுவதே எங்களுக்கு முக்கியமான கைங்கர்யமாகும். எல்லோருக்கும் ஸுலபனாக வேண்டுவதற்காகவே ஆயர் குலத்தில் வந்துதோன்றிய நீ நாங்கள் செய்யுமடிமை யேற்றுக்கொள்ளாமல் போகலாமோ இருபத்தோர் தலைமுறையும் நாங்கள் உனக்கு அடிமை அநங்யார்ஹைகள் மற்று இதற்குப் புறம்பாயுள்ள எங்கள் மனோரதங்களை நீ மாற்றிவிடவேண்டும் என்று பிரார்த்திக்கிறது.

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பா ரீரிரண்டுமால் வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய்.

வங்கக்கடல் கடைந்த-கப்பல்களை யுடைத்தான திருப்பாற்கடலைக் கடைந் தமுதந் தந்தருளின
மாதவனை-ஸ்ரீய:பதியாய்
கேசவனை-கண்ணனை
திங்கள் திருமுகத்து-சந்திரனைப் போன்ற திருமுகத்தையுடையராய்
சேயிழையார்-ஆய்ந்த ஆபரணங்களையுடைய பெண்கள்
சென்றிறைஞ்சி-போய் மங்களாசாஸனம் பண்ணி
அங்கு அப்பறை கொண்ட ஆற்றை-திருவாய்ப்பாடியிலே அப்பறைகொண்ட விதத்தை
அணிபுதுவை-அழகிய ஸ்ரீவில்லிபுத்தூர்
பைங்கமலம் தண் - பசுமையான குளிர்ந்த தாமரை புஷ்பங்களாலாகிய
தெரியல்-மாலையையுடைய
பட்டர் பிரான்-ப்ராஹ்மணோத்தமரானபெரியாழ்வாருடைய
கோதை-திருமகளான ஆண்டாள்
சொன்ன-அருளிச்செய்த
சங்கம்- சங்கமான
தமிழ் மாலை-த்ராவிட பாஷையான மாலையை
முப்பதும்-முப்பது பாட்டும்
தப்பாமே-தப்பாமல்
இங்கு-இந்த பூமியிலே

இப்பரிசு-இந்த ப்ரகாரத்தை
உரைப்பார்-அநுசந்தித்தவர்கள்
ஈரிரண்டு-நாலாகிய
மால்-பெரிய [க்கிற
வரை-பர்வதங்களைப்போலேயிரு
தோள்-புஜங்களையும்
செம்-செவந்திருக்கிற
கண்-திருக்கண்களையும்
திருமுகத்து-திருமுக மண்டலத்தையுமுடைய
செல்வ-உபய விபூதிநாயகராகிய
திருமாலால்-ஸ்ரீயஃபதியாலே
எங்கும்-ஸர்வப்ரதேசத்திலும்
திருவருள்-ஒப்பற்ற கிருபையை
பெற்று-லபித்து
இன்புறுவர் - ப்ரஹ்மாநந்தயுக்தராயிருப்பர்கள்
ஏல் ஓர்-தகுந்த ஒப்பற்ற
எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) முன்னொருக்கால் ஆய்ச்சியார் கண்ணனைக்கிட்டிப் பிரார்த்தித்து அபேக்ஷிதம் பெற்றபடியை ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவதரித்த பட்டர்பிரான் திருக்குமாரத்தியாகிய ஆண்டாள் சங்கப்புலவர்புகழும் செந்தமிழில் முப்பது பாட்டாய் அருளிச்செய்த இந்த திருப்பாவை யென்னும் பிரபந்தத்தை அர்த்தக்கியானமில்லாவிடினும் பாட்டுமாத்திரம் அநுஸந்திக்கப் பெற்றாலும் ஸர்வதேச ஸர்வகாலங்களிலும் ஸ்ரீயஃபதியானஸர்வேச்வரனது பரிபூர்ணமான கிருபையைப் பெறலாம் என்று பிரபந்தம் கற்றார்க்குப் பலன் சொல்லித் தலைக்கட்டுகிறது.

ஆண்டாள் வாழித்திருநாமம்.

திருவாடிப்பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவைமுப்பதுஞ் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார்பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர்மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒருநூற்றுநாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கற்கேகண்ணி யுகந்தளித்தாள் வாழியே
மருவாருந்திருமல்லி வளநாடு வாழியே
வண்புதுவைநகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.
திருப்பாவை முற்றிற்று.

கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதிமணிமாடந் தோன்றுமூர்—நீதியால்
நல்லபத்தர் வாழுமூர் நான்மறைக ளோதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோ னூர்.

பாதகங்கள் தீர்க்கும் பரம னடிகாட்டும்
வேத மனைத்துக்கும் வித்தாகும்—கோதைதமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு.

அனந்தாழ்வானருளிச்செய்தது.

[illegible]

சக்ரேகோதா சதுஸ்லோகீயோ வேதார்த்த ப்ரகாசிதம்
ஸ்ரீவெங்கடேச ஸ்த்பந்தம் தமநந்த குரும்பஜெ.

[illegible] ௧॥

நித்யா பூஷா நிகமஸிரஸாம் நிஸ்ஸமோத் துங்கவார்த்தா
காந்தோ யஸ்யாः கசவிலுலிதைः காமுகோ மால்யரத்னைः
ஸூக்த்யா யஸ்யா ஸ்ஸ்ருதிஸுபகயா ஸுப்ரபாதா தரித்ரீ
ஸைஷாதேவீ ஸகலஜநநீ ஸிஞ்சதாம்மா மபாங்கைः.

[illegible]

ஸம்வர்த்திதா:, கோதா தேவி கதம் த்வமந்யஸுலபா ஸா
தாரணா ஸ்ரீரஸி ॥ ௨

மாதாசேத்துலஸீ பிதாயதிதவ ஸ்ரீவிஷ்ணுசித்தோ மஹாந்
ப்ராதாசேத்பதிஸேகரஃ ப்ரியதமஃ ஸ்ரீரங்கதாமாயதி
ஞ்யாதாரஸ்தந யாஸ்த்வதுக்திஸரஸ ஸ்தந்யேந ஸம்வர்த்திதாஃ
கோதாதேவிகதம் த்வமந்யஸுலபா ஸாதாரணா ஸ்ரீரஸி.

கல்பாதௌ ஹரிணா ஸ்வயம் ஜநஹிதம் த்ருஷ்டேந ஸ
ர்வாத்மநாம், ப்ரோக்தம் ஸ்வஸ்ய ச கீர்த்தி ஸம்ப்ரவதநம் ஸ்வ
ஸ்மை ப்ரஸூநார்ப்பணம்। ஸர்வேஷாம் ப்ரகடம் விதா
துமநிஶம் ஸ்ரீதந்விஸவ்யே புரே ஜாதாம், வைதிகவி
ஷ்ணுசித்ததநயாம் கோதாமுதாராம் ஸ்துமஃ ॥ ௩ ॥

கல்பாதௌ ஹரிணாஸ்வயம்ஜநஹிதம்த்ருஷ்டேநஸர்வாத்மநா
ம்,ப்ரோக்தம்ஸ்வஸ்யசகீர்த்திஸம்ப்ரவதநம்ஸ்வஸ்மைப்ரஸூநார்
பணம்,ஸர்வேஷாம்ப்ரகடம்விதாதுமநிஶம்ஸ்ரீதந்விஸவ்யேபுரே
ஜாதாம் வைதிகவிஷ்ணுசித்ததநயாம்கோதா முதாராம்ஸ்துமஃ.

ஆகூதஸ்ய பரிஷ்க்ரியாமநுபமா மாஸேசநம் சக்ஷுஷோ
ராநந்தஸ்ய பரம்பராமநுகுணாம் ராமாமஶைலே ஸ்திதாஃ। தத்தோர்மத்யகிரீடகோடிகடித ஸ்வோ
ச்சிஷ்டகஸ்தூரிகா, மால்யாமோத ஸமோதிதாத்மவிபவாம்
கோதாமுதாராம் ஸ்துமஃ ॥ ௪ ॥

ஆகூதஸ்ய பரிஷ்க்ரியா மநுபமா மாஸேசநம் சக்ஷுஷோ
ராநந்தஸ்ய பரம்பரா மநுகுணா மாராம ஶைலே ஸ்திதுஃ
தத்தோர் மத்யகிரீடி கோடிகடித ஸ்வொச்சிஷ்ட கஸ்தூரிகா
மால்யாமோதஸமோதிதாத்மவிபவாம்கோதா முதாராம் ஸ்துமஃ.

கோதா சதுஸ்லோகி முற்றிற்று.

22076

	ரூ.	அ.
ஸ்ரீ வால்மீகி ராமாயணம் தமிழ்வசனம்படத்துடன்		
பா[illegible]லகாண்டம்	1	10
அ[illegible]யோத்யாகாண்டம்	3	4
ஆ[illegible]ண்யகாண்டம்	1	10
கிஷ்கிந்த்[illegible]பாகாண்டம்	0	10
சுந்தரகா[illegible]டம்	2	4
யுத்தகாண்[illegible]டம்	3	4
உத்தரகா[illegible]ண்டம்	3	4
கலியுகபுர[illegible]ாணம்ஷை	0	12
நவகிர[illegible]ஹ அர்ச்சனை தமிழ்	0	3
சுந்தரகா[illegible]ண்டம் கிரந்தம் மூலம் திக்[illegible]கு	1	4
பகவத்கீ[illegible] தபிரதிபதராமாநுஜ ப[illegible]ஷ்யத்தைதமிழில் [illegible]மாழிப்பேர்ப்பு	2	4
சப்தபஞ்ச[illegible]ரி	0	5
சேஷதர்[illegible]மம் வசனம்	1	8
ஆ[illegible]சதகம் தமிழ் வியாக்யானம்	0	4
[illegible]காண்டம் அமரர்மூலம்	0	5
[illegible]ஷை டீகா அமரம்	2	8
[illegible]பகவத்கீதைசுலோகம் பாக்கெட் வசனம்	0	6
பகவத்கீதை தமிழ்தாத்பர்	1	0
அஷ்டவர்க்கம்தமிழ்தாத்ப	0	10
ஷை கிளேஸ்	1	0
வடகலை பெரியஸ்தோத்ர பாடம்	0	12
ஷை கிளேஸ்	1	4
22 ஸ்தோத்திரம்	0	6
தென்கலை ஸ்தோத்ரபாட	0	6
விஷ்ணு ஸஹஸ்ரநாமம்	0	4
ஷை பாகெட் கித்தான்பயிண்டு	0	6
ஷை கிளேஸ்	0	8
ந[illegible]ரஸிம்ம ஸஹஸ்ரநாமம்	0	$2\frac{1}{2}$
வெங்கடேச ஸஹஸ்ரநாமம்	0	$2\frac{1}{2}$

	ரூ.	அ.
கோபிகாகீதைகிரந்தசுலோகம் தமிழ் ப்ரதிபத தாத்பர்யம்	0	5
ஷை ஸ்ரீராமகீதை ஷை	0	5
சயா ஸ்தல மஹாத்யம் தமிழ் வசனம் சுலோகமும் ப்ரமாணங்களுடன்	0	6
பெரியாழ்வார் திருமொழி	3	8
திருப்பாவை நாச்சியார் திருமொழி	3	0
பெருமாள் திருமொழிமுதலிய ஆறு ப்ரபந்தங்கள்	4	8
திருப்பாவை ஷை	1	4
நாச்சியார் திருமொழிஷை	2	4
பெருமாள் திருமொழிஷை	1	12
திருச்சந்த விருத்தம்ஷை	1	12
திருமாலை, திருப்பள்ளிஎழுச்சி அமலநாதிபிரான் கண்ணிநுண் சிறுத்தாம்பு	1	8
திருப்பாவை (மூலம்)	0	$1\frac{1}{2}$
திருமாலை மூலம்	0	$1\frac{3}{4}$
திருக்குறுந்தாண்டகம், திருநெடுந் தாண்டகம்	0	6
உபதேசரத்தினமாலை ப்ரதிபத வ்யாக்யானம்	1	4
திருவாய் மொழி ப்ரதிபத வ்யாக்யானம்	1	4
ஆர்த்திப்ரபந்தம் வ்யாக்யானம்	1	0
ஞான சாரம், ப்ரமேயசாரம் வ்யாக்யானம்	0	12
நித்யாநுஸந்தானம்(வடகலை)	0	10
நித்யாநுஸந்தானம் ப்ரதிபதம்	1	12
திருமாலை ஷை	~~0~~	~~0~~ 6
அஷ்டப்ரபந்தம் மூலம்	1	0

	ரூ.	அ.
...டப்ரபந்தம் உரை	3	8
சடகோபயர்தாதி உரை	0	10
தேசிகப்ரபந்தம்	0	10
அழகர் கலம்பகம் உரை	0	8
திருவேங்கடக் கலம்பகம் உரை	0	10
ரஹஸ்ய க்ரந்தங்கள்.		
ரஹஸ்யம்டிப்பணி ப்ரமாணதிரட்டுடன்	2	0
த்வாதச ரஹஸ்யம்	0	12
ஸ்ரீவசனபூஷண வ்யாக்யானம்	2	8
முமுக்ஷுப்படி வ்யாக்யானம்	1	8
தத்வத்ரய வ்யாக்யானம்	1	8
ஆசார்ய ஹ்ருதய வ்யாக்யானம்	2	8
ஷை மூலம்	0	3
திருக்கோட்டியூர்நம்பி 18-ரஹஸ்யம்	0	4
முமுக்ஷுப்படி மூலம்	0	2
ஸம்ஸ்க்ருதபாஷாமஞ்சரி	0	4
ஸ்ரீவசனபூஷண ப்ரமாணத்திரட்டு	1	4
முமுக்ஷுப்படி ப்ரமாணத்திரட்டு	0	5
ஸ்ரீவைஷ்ணவசமயாசாரநிஷ்கர்ஷம்	2	0
சரித்ரங்கள்.		
குருபரம்பரை6000 படி	2	8
யதீந்திர ப்ரவணப்ரபாவம்	1	0
உடையவர் சரித்திரம்	0	2

ஆள்வார்கள் சரித்ர...	1
ஸ்ரீராமாநுஜ விஜய...	2
ரிஷிகள சரித்திரம் (முதல்)	
ஷை 2-ம்பாக...	
பக்தலீலாம்ருதம்	
பக்தவிஜயம்	
ஸ்ரீ குணரத்னகோ...க்ஷ்மி அஷ்டோத்ர...பதவதாத்பர்யம்	
யதிராஜ விம்சதி வ்ய...யானம்	
தெங்கலை ஸ்தோத்...டம்	
க்ருஷ்ண கர்ணாம்ருதபத தாத்பர்யம்	
ராமகர்ணாம்ருதம்தமி...த்பர்யம்	
பஜகோவிந்தம்ப்ரதிப...த்பர்யம்	
கோபிகாகீதை ப்ரதிபததாத்பர்யம்	
வி வித புஸ்தகங்கள்.	
விஷ்ணுவாலய தரிசன விதி	
ஸ்ரீவைஷ்ணவதத்வம்	
வேதாந்த தத்வக்கட்டளை	
கூரேசவிஜயம்	
108 திருப்பதிஸ்தலமஞ்...	
கோயிலொழுகு	
பாலகாண்டம் தமிழ்உரை	

அ. அனந்தாசார்யர் கிருஷ்ணப்ப நாய்க்கன் குளம்.
மேற்கு கரை மின்ட் போஸ்டு, மதராஸ்

என்று யெழுதி வ்யாபாரிகளும் மற்றோரும்
வி. பி. மூலமாய் பெற்றுக் கொள்ளலாம்.